எங்கள்

தந்தையும் தாயும்

8823
O31





A 6-3

நாடும், நட்பும், சுற்றமும், எல்லோரும்
எல்லா நலமும் பெற அன்னை பெரியநாயகி
அடிக்கமலம் பிராத்திக்கின்றோம்.



ராஜாஜியின் புதல்வி திருமதி நாமகிரி அம்மாள்
எங்கள் குடும்ப வழிபாட்டுக்கு
வரைந்த தந்த ஓவியம்.

46-3

நன்றியுரை

வெளித்தோற்றத்திற்குத் தெரியாத, வண்ணம் தீட்டி ஆடம்பரமாக விளங்காத ஆனல் கட்டிடத்துக்கு இன்றியமையாத அடிக்கல் போலச் சமுதாய வாழ்வில் விளங்குபவர்கள் எங்கள் பெற்ருேர். அவர்களைப் பற்றி ஒரு நூல் வெளியிட்டால், அதுவும், அவர்களது சதாபிஷேக விழாவில் வெளியிட்டால் சிறப்பாகவும், நாங்கள் எங்கள் வாழ்நாளில் செய்யக்கூடிய நற்செயலாகவும் இருக்கும் என்று கருதினேம். நூல் வெளியிட பலமான ஆதரவும், ஊக்கமும் எங்கள் சகோதரியார் திருமதி திலகவதி அண்ணமலை அவர்களிடமிருந்து கிடைத்தது. நாங்கள் செய்யும் நற்செயல்களுக்கெல்லாம் ஊக்கம் ஊட்டி, வழிகாட்டியாக அமையும் கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்களை வைத்துப் பிள்ளையார் சுழி போட்டோம். எல்லாம் செவ்வனே நடந்தது.

நீண்ட நெடும் பாதையில் குற்றம், குறையின்றி புண்ணியராய் 80ஆண்டுகள் கடந்து வந்துள்ள எங்கள் பெற்ருேருடன் எங்களுக்குத் தொடர்பு கொள்ளும் பாக்கியம், பால்யப் பருவம் நீக்கி 2' ஆண்டுகள்தான். எனவே பெற்ருேரின் சுற்றத்தார், நண்பர்களிடம் செய்தி திரட்ட முனைந்தோம். அவை சிறப்பாக இந்நூலாக மாறிவிட்டன கட்டுரை, கவிதை, வாழ்த்து எழுதித் தந்த ஒவ்வொருக்கும் எங்கள் நன்றி.

மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய சிறப்புடைய பெரியோர்கள் நல்வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளனர். அவர்கள் திருப்பாதங்கள் வணங்கி, வாழ்த்தி நன்றி கூறுகின்ருேம்.

மிகக் குறுகிய காலத்தில் எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி பணியைப் பிரித்துக் கொண்டு அச்சு முடித்துத்தந்த மதுரை ரெயின்பௌ அச்சகம், திருமுருகன் அச்சகம், காளிஸ்வர அச்சகம் ஆகியவற்றிற்கு எங்கள் இதயப்பூர்வமான நன்றி. காலம் நெருக்கியதால் அல்லல்பட்ட எங்களுக்கு வழிகாட்டி அவர்களால் இயன்றதுக்கும் மேலாக உதவி இந்நூலை முடித்துதரச் செய்தவர்கள் கல்லல் திரு N. S. திருப்பதி செட்டியாரவர்கள். அவர்களுக்கு மனமார்ந்த நன்றி.

எங்களைப் பெற்று ஆளாக்கி வழிநடத்தி அவர்கள் செய்த சிறப்பால் எங்களை 'இன்ஞர் பையன்கள்' என்று சிறப்பாகக் கூறச்

செய்த எங்கள் பெற்றோரின் மலரடிகளுக்கு இந்நூலைக் காணிக்கை யாக்கி மகிழ்கின்றோம்.

சுப. இலக்குமணன்
சு. இராஜகோபால்

இராமநாத ஞானதேசிக சுவாமிகள்

கோவிலூர் ஆதீனம்

பெருமதிப்புக்குரிய பேரன்பர் திருமிகு பெ.மு. சுப்பையா செட்டியார் (ஆத்தங்குடி) அவர்களின் எண்பதாவது ஆண்டு நன்னாளில் அவர்களுக்கு இதயபூர்வமாக நல்வாழ்த்துக்கூறி மகிழ்கின்றோம்.

அன்பர் சுப்பையா செட்டியார் அவர்கள் தமது இளமை முதலே காந்திய நெறி நின்று, சமயப்பணி, தேசப்பணி, சமூகப் பணிகளில் தன்னலம் சிறிதும் இன்றித் தொண்டாற்றிப் புகழ் பெற்றவர்கள்.

மஹாகவி பாரதியாரின் பாராட்டுப்பெற்ற - தனவணிக இளைஞர்களில் அன்பர் சுப்பையா செட்டியாரும் குறிப்பிடத் தக்கவர் என்பது பெருமைக்குரியது.

அன்பர் அவர்களின் எளிமையும், நேர்மையும், ஆடம்பரமற்ற அரிய பண்பாடும் போற்றத்தக்கவையாகும். அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வளமுடன் வாழ்ந்து திருத்தொண்டுகள் பல சிறப்புற நிகழ்த்த எல்லாம் வல்ல தேவி பராசக்தியின் திருவருள் துணை நிற்பதாக.

ஓம் பராசக்தி

இராமநாத ஞானதேசிகர்

நேரிசை வெண்பா

கிருபானந்த வாரியார்

சென்னை

நாலிருப தாண்டுகள் நம்பன் திருவருளால்
சீலமுடன் எய்தியுயர் சீர்செம்மல் — ஞாலமதில்

சுப்பையா செட்டியார் கோமேகன் தண்ணருளால்
தப்பாமல் வாழ்க தழைத்து

அன்பன் கிருபானந்தவாரி

சுவாமி சதாசிவானந்தா

"ஸ்ரீகைலாஸ்" ஆசிரமம் - நெரூர்.

ஆத்தங்குடி, பெ. மு. சுப்பையா செட்டியார் கரூர் வந்து தங்கியிருக்கிறார். 20 வருடங்களாக நெரூர் ஸ்ரீ சற்குரு சதா சிவப்பிரஹ்மேந்திராள் சன்னதிக்குக் குடும்பத்தோடு வந்து சிரத்ததா பக்தியோடு தரிசித்துச் செல்வார். நல்ல பக்தர். சாதுக்களுக்கும். கோயில்களுக்கும் தன் சக்திக்குத் தக்க அளவில் தாராளமாக உதவி செய்யும் மனம் படைத்தவர். ராஜாஜியின் முக்கிய சீடர். அவருக்கு நல்ல தர்ம பத்தினியும், குழந்தைகளும் அமைந்துள்ளனர். குடும்பத்தை யோக்கியதையோடும் நேர்மையோடும் நடத்தப் போதுமான செல்வமும் அமைந்துள்ளது. தெய்வீகத்தையும், இந்து தர்மத்தையும் வளர்க்கும் மனப்பான்மையுடையவர். இவருக்கு நிகழும் சதாபிஷேகம் சிறப்பாக நிறைவு பெற்று மேலும் ஈஸ்வர பக்தியும், நல்லொழுக்கமும் பெருக்கி, 120 வயது வாழ்ந்து, பெருமையும் இறையருளும் பெற்றின்புறுவாராக.

சுவாமி சதாசிவானந்தா

சுவாமி ஆத்மானந்தா

பசுபதிபாளயம்

கரூர்.

'பணிவும் இன்சொல்லும் அணியெனப்பூண்டு, ஈகையொடு இரக்கவுணர்வும் இதயத்தில் கொண்டு, நல்லாரிணக்கமும் நல்தெய்வ பக்தியும் மிக்கவராய், குழந்தையைப் போன்ற கள்ளம் கபடமற்ற உள்ளம் படைத்தவராய், காட்சிக்கு எளியவராயும் விளங்கும் திரு. சுப்பையா செட்டியார் அவர்கள் தமது எண்பதாவது ஆண்டு நிறையப் பெறுவது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அவர் மேலும் பல்லாண்டு வாழ்ந்து இறையருளுக்குப் பாத்திரராக வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

அன்புள்ள

ஆத்மானந்தா

ம.பொ. சிவஞானம்
தலைவர்
தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை 600 001
5. 2. 1982

திரு பெ.மு. சுப்பையா செட்டியார் அவர்களுக்கு 80வது ஆண்டு நிறைவு பெறுவது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். அவரது வைரவிழாவைக் கொண்டாடுவது தமிழுக்குச் செய்யும் பெரும் சிறப்பாகும். காரைக்குடியில் ஆண்டுதோறும் நடைபெறும் கம்பர் விழாவிலே, அன்பர் செட்டியார் மிகவும் அமைதியாகத் தொண்டு புரிந்து வருவதனைப் பல்லாண்டுக் காலம் நான் பார்த்து மகிழ்ந்திருக்கின்றேன். அன்பும் தொண்டுமே வடிவமான அவர் ஒரு நூற்றாண்டுக்கு மேலும் வாழ இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

ம. பொ. சிவஞானம்.

Justice R. Sengottuvelan

No.16. 8th street
Dr. Radhakrishnan Road

Mylapore
Madras-600 004
4-2-82

ஆயிரம் பிறை காணுதல் ஒருசிலருக்கே இயலும். அதிலும் மற்றவர்களுக்கு உதவும் வகையில் வாழ்வாங்கு வாழ்ந்து ஆயிரம் பிறை கண்டவர்கள் வணக்கத்திற்குரியவர்கள்.

பிறர்நலம் பேணி வாழ்வாங்கு வாழ்ந்து சிறப்புற்றிருக்கும். பெரியார் பெ.மு. சுப்பையா செட்டியார் அவர்களுக்கு எனது வணக்கம் உரியதாகுக.

அன்புள்ள

செங்கோட்டு வேலன்

டாக்டர் இராஜா சர் முத்தைய்யா செட்டியார்

செட்டிநாடு

தங்கள் அன்புத் தந்தையார் அவர்கள் இவ்வாண்டு மாசி மாதத்தில் 80வது ஆண்டு நிறையப்பெறுகின்ருர்கள் என்பது தெரிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவ்விழாவினையொட்டி ஒரு நூல் வெளியிடத் தீர்மானித்திருப்பதை மிகவும் பாராட்டுகின்றேன். செட்டிநாடு பகுதிகளில் தங்கள் தந்தையார் ஆத்தங்குடி பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்களை அறியாதார் இல்லையெனலாம். அவர்கள் செய்துவரும் நற்பணிகள் பலப்பல. மக்கள் நலனே தன்நலம் என அவர்கள் அயராது சேவை செய்து வருகிருர்கள். செல்வந்தராக இருப்பினும், ஏழைகள்பால் மிகவும் அன்பு, பரிவு காட்டும் இயல்புடையவர்கள். தாங்கள் வெளியிடவிருக்கும் நூலில் பல அறிஞர்கள், கவிஞர்கள் கட்டுரைகள், பாராட்டுக்கள் நிறைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. தங்கள் முயற்சி வெற்றிபெறவும் நடைபெறவிருக்கும் தங்கள் அன்புத் தந்தையார் அவர்களின் 80வது ஆண்டு நிறைவு விழா சிறப்பாக நடைபெறவும், தங்கள் தந்தையார் திரு. பெ. மு. சுப்பையா செட்டியாரவர்களுக்கு நீண்ட ஆயுளும், சகல ஐஸ்வரியங்களும் உண்டாகவும் பிரார்த்திக்கிறேன்.

தங்கள் அன்புள்ள

மு. அ. முத்தய்யா செட்டியார்

C. R. நரசிம்மன்

President, காந்தி ஆசிரமம்

திருச்செங்கோடு,

தியாகராய நகர் - சென்னை.

உயர்திரு ஆத்தங்குடி பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்கள் இவ்வாண்டு மாசி மாதத்தில் 80-ஆவது ஆண்டு நிறையப் பெறுகின்ருர்கள். இத்தருணத்தில் அவர் எனது தந்தையார் ராஜாஜியிடமும், டி. கே. சி. அவர்களிடமும் காட்டிய அன்பும் மதிப்பும் எனக்கு நினைவு வருகின்றமை இயற்கையே. ராஜாஜியின் கருத்துக்கள் பரவ வேண்டுமென்பதில் திரு. சுப்பையா செட்டியார் அவர்களுக்கு அவா மிகுதி. நல்ல நாட்களில் ராஜாஜியின் ஏதாவது ஒரு நூலைப் பரிசாக நண்பர்களுக்கு வழங்குவது அன்னாரது ஏற்பாடுகளில் ஒரு சிறந்த அம்சம். ஏதாவது பணியாரங்களைச் செய்வித்து ராஜாஜிக்கு அவ்வப்பொழுது அவர் அளிப்பது வழக்கம். பணியாரங்கள் மிக நன்கு செய்யப்பட்டவையாகவேயிருக்கும். இந்த இயற்கைச் சுவையுடன் அன்பும் சேர்த்து விடும் பொழுது சுவை இரட்டிப்பாக ஆகிவிடும். என் தந்தையார் அவற்றை அனுபவிப்பார்கள். இச் சுப சமயத்தில் அன்னருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது நல்லெண்ணங்கள் உரித்தாகுகின்றன.

ஸி. ஆர். நரசிம்மன்

நாமகிரி அம்மாள்

சேத்துப்பட்டு - சென்னை

உங்கள் அருமைத் தந்தையார் அவர்களுக்கு அவரது 80ஆவது ஆண்டு நிறைவு விழா நடப்பது அறிந்து மகிழ்ச்சி மதிப்புக்குரிய அவருக்கும் அவரது மதிப்புக்குரிய மனைவியார் அவர்களுக்கும், மற்றும் குடும்பத்தார் யாவருக்கும் என் உள்ளம் கனிந்த நல்வாழ்த்துகள்.

அன்புடன் ஆசி
நாமகிரி அம்மாள்

ஏ. கே. செட்டியார்,

சென்னை

ஆத்தங்குடி சுவாமிகள் என்று நண்பர்களால் அன்புடன் அழைக்கப் பெறும் ஸ்ரீ பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்கள் சிறு பிராய முதலே தேச பக்தியும், தெய்வ பக்தியும் உடையவர்கள். இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர்கள். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, ரசிகமணி டி. கே. சி. போன்ற பெரியோர்களின் தொடர்புள்ளவர். விருந்தோம்பலை ஒரு கலையாக வளர்த்து வருகிறவர். நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்னும் நக்கீரர் பரம்பரையைச் சேர்ந்தவர்.

எல்லாவற்றுக்கும் மேலாக மூதறிஞர் ராஜாஜி அவர்களின் பேரன்புக்குப் பாத்திரமானவர்.

சதாபிஷேகம் காணும் பேரன்பர் ஸ்ரீ சுப்பையா செட்டியார் அவர்கள் இன்னும் பல்லாண்டு நலமுடன் வாழ இறைவன் அருள்பாலிப்பானாக.

ஏ. கே. செட்டியார்

க. வெ. ராம. இராமசாமி செட்டியார்

புதுக்கோட்டை

தங்கள் அருமைத் தந்தையாரவர்கள் 80ஆம் ஆண்டு நிறையப்பெறுவது அறிய மகிழ்கிறோம். அவர்கள் இன்னும் பல்லாண்டு நலமே வாழ்ந்து வளம் பெருக்க வேண்டுமென்ற என் உள்ளக்கிடக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வாழ்வு தந்து சிறப்பூட்டுவான் துணைசெய்ய வேண்டுமாய் ஆலவாய் அண்ணல் மலரடியினை வணங்குகின்றேன்.

என்னுடன் உங்கள் தந்தையாராவர்கள் நாற்பது ஆண்டுகட்கு மேலாக நன்கு பழகியவர்கள். மிக நல்வர்கள் யாருக்கும் வஞ்சகம் காட்டாத வாழ்வு வாழ்கிறார்கள். தொண்டு உள்ளம் படைத்தவர்கள். ஒளிவு மறைவு இன்றிப்

என் மதிப்பிற்குரிய ஆசிரியர் தமிழ்க்கடல் ராய. சொ. அவர்களிடத்திலும், ரசிகமணி டி. கே. சி. அவர்களிடத்திலும் பெரிதும் ஈடுபாடு உடையவர்கள். அவர்களோடு, அடிக்கடி நான் திரு. சுப. அவர்களைப் பார்த்திருக்கின்றேன்.

பல நல்லறிஞர்கள் தொடர்புடன், நற்பண்புகள் நிறைந்து, தொண்டு உள்ளம் படைத்து, அடக்கமாக வாழும் பெரியவர் திரு. சுப. அவர்களுக்குச் சதாபிஷேகம் நடக்கின்றது; எண்பது ஆண்டுகள் நிறைவெய்தியது என்பதை அறிய மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். அவர்கள் எல்லா நலன்களும் பெற்றுப் பல்லாண்டு வாழவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

ப. வ. ராம. குழந்தையன் செட்டியார்

Al. Ct. சிதம்பரம் செட்டியார்

சென்னை.

அன்புடையீர்,

தங்கள் அருமைத் தந்தையாரும், என்னிடம் மிக்க அன்புடையவர்களுமான திருமிகு. பெ. மு. சுப்பைய்யா செட்டியார் அவர்களுடைய 80-வது ஆண்டு நிறைவு நன்னாளை முன்னிட்டு ஒரு நூல் வெளியிடத் தாங்கள் ஏற்பாடு செய்துள்ளதைப் பற்றி நான் மிகவும் மகிச்சியடைகிறேன். வரவேற்கிறேன். அவர்கள் சதாபிஷேகம் செய்துகொண்டு, அவர்களும், அவர்கள் குடும்பத்தினர் அனைவரும், எல்லா நலனும் பெற்று, இன்புற்று, பல்லாண்டு திடகாத்திரத்துடன் நீடுவாழ ஸ்ரீ அண்ணாமலையார் அருள்புரிவராகுக.

ஸ்ரீமான் சுப்பைய்யா செட்டியாரவர்கள் சிறந்த தெய்வ பக்தர். சமூகத் தொண்டு, தேசத் தொண்டுகளில் அதிக ஆர்வமுடையவர்கள். விஸ்வாமித்திரருக்கு மிஞ்சிய மிகுந்த சாந்தமூர்த்தி அம்பாளின் பூரண கடாக்ஷசம் பெற்றவர். எல்லோரிடமும் எளியமுறையிலும், அன்போடும் பழகக் கூடியவர். அவர் நீடு வாழ நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

AL. CT. சிதம்பரம் செட்டியார்

K. N. கஸ்தூரி ரங்கன்

ஸ்ரீ சுவாமி ஆனந்த தீர்த்த
பக்த ஞான சங்கம்
கிழக்கு வங்கல்.

க்ஷேமம்.

பரம அன்புள்ள எல்லோருக்கும் வேதாக்த ஆசீர்வாதம் ஸ்ரீமான் ஆத்தங்குடி பெ. மு. சுப்பையா செட்டியார் 80வது ஆண்டு பூர்த்தி வரும் மாசி மாதம் நடப்பதாக் கேட்டு மிக மகிழ்ச்சி மனைவியுடன் சதாபிஷேகம் செய்துகொள்வது பூர்வ ஜென்ம புண்ணியமே. எல்லோருக்கும் இது கிடைக்காது.

ஸ்ரீமான் செட்டியார் அவர்களே எனக்கு 1958 முதல் தெரியும். மிகமிக உயர்ந்த தயாள குணமுடையவர். சிறந்த தெய்வ பக்தர். லேட் ஸ்ரீ ஆனந்த தீர்த்த ஸ்வாமிகளின் ஒரு முக்கியமான சிஷ்யராக இருந்து வந்தார். தர்மசீலர் இவர் வட்டிக்கடை நடத்தி வந்தாலும் அதிலும் மிகமிக தயாள குணம் இரவு 12 மணிக்கு அவசரத் தேவை என்று கேட்டாலும் கொஞ்சமும் மனம் கோணுமல் வந்தவருக்கு உபகாரம் செய்பவர். இவர் உதவியால் பலபேர்கள் பல வழிகளில் மேன்மை அடைந்து இருக்கிருர்கள்.

ஆலமர விதை ஒரு கடுகு அளவு. ஆனல் அது வளர்ந்து ஓங்கி செழித்து பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நிழல் தருகிற மாதிரி தான் இவருடைய வட்டித் தொழில். எல்லாம் வல்ல இறைவன் அருளால் இவர் குடும்பம் எல்லோருக்கும் பல்லாண்டு - பல்லாண்டு ஆரோக்யமாக இருக்கப் பிரார்த்தித்து ஆசீர்வாதம்.

K. N. கஸ்தூரி ரங்கன்

RM. AL. RM. ராமநாதன் செட்டியார்

கோட்டையூர்.

ஆத்தங்குடி ஸ்ரீமான் பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்களின் சதாபிஷேகச் செய்தி அறிய மகிழ்கிறேன். அவர்களைப் பல ஆண்டுகளாக எனக்குத் தெரியும். அவர் கோட்டையூர் க.வீ.மு.அள.மு. ஐயா அவர்களுடன் நெருங்கிப் பழகியவர். கோட்டையூர் வேலன்குடியை அடுத்த அவர்களின் குடும்பக்குல தெய்வமான வயல்நாச்சி அம்மனிடம் வற்றாத பக்தியுடையவர். இடையில் உடல்நலக்குறைவாய் இருந்தபோது வைத்தியர்களை நம்பாமல் வயல் நாச்சியம்மனையே நம்பி கோவிலில் வந்து இருந்து பூர்ண குணமடைந்தார். சென்ற ஆண்டில் வயல்நாச்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிருந்து சிறப்பாகச் செய்தார்கள். அவர்கள் வயல்நாச்சி அம்மன் கோவிலுக்கு வரும்போது எல்லா நண்பர்களேயும் அழைத்து அன்புடன் உபசரிப்பதில் ஆர்வமுள்ளவர்கள். நான் என்றும் மறவாத ஸ்ரீ க. வீ. அழ. மு. ராமநாதன் செட்டியார், தமிழ்க்கடல் ராய. சொ. அவர்களுடன் பலமுறை போய் இருக்கின்றேன். 'ஆத்தங்குடிசாமி' என்று அனைவராலும் அன்பாக அழைக்கப்பெறும் ஸ்ரீ சுப்பையா செட்டியார் அவர்களுக்கு எல்லா நலன்களையும் அருமிகு அண்ணாமலே அண்ணல் அருள்வாராக!

பேசுபவர்கள். சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி இரசிகமணி டி. கே. சி. ஆகியவர்களுடன் நாங்கள் நெருங்கிப் பழகியிருந்தோம். தங்கள் தந்தையார் அவர்கள் குணங்களை இராஜாஜி அவர்கள் மகிழ்வோடு பாராட்டுவார்கள். வேலங்குடிக் கோவில் திருப்பணி அவர்களுடைய அரும்பணிகளில் ஒன்று. பல ஆண்டுகளாகக் கம்பன் திருநாள் விழாக்களில் கலந்துகொண்டு தமிழ்ச்சுவை பருகியுள்ளோம். அவர்களுடன் நானும் என் உடன் பிறந்தவர்களும் மலாயா வில் கிள்ளான், இந்தியாவில் வேலங்குடி, கரூர் முதலிய பல இடங்களில் நெருங்கிப் பழகியுள்ளோம். எங்கள் குடும்பத்தில் ஒருவராகவே அவர்களுடன் பழகி வருகிறோம்.

அவர்கள் மிகுந்த உடல் நலத்துடன் பல்லாண்டு வாழ இறையருள் துணையை வருத்தி வணங்குகின்றேன்.

க. வெ. ராம. ராமசாமி செட்டியார்

க. வெ. ராம. நாராயணன் செட்டியார்

சென்னை.

என் அருமை மூத்த சகோதரர் சுப. அவர்களுடன் 42 ஆண்டுகளாகப் பழகி வந்திருக்கிறேன். தூய அன்பு கொண்டவர்கள். எதையும் எதிர்பார்த்து யாருக்கும் உபகாரம் செய்ததில்லை. வெள்ளை மனம் படைத்தவர்கள். மனதில் தோன்றியதை அப்படியே சொல்லிவிடுவார்கள். அதன் சாதக பாதகம் தெரியாதவர்கள். எந்த வேலையையும் பொறுமையோடும் உற்சாகத்தோடும் மிக்க அன்போடும் பாடுபட்டுப் பொறுப்பாகச் செய்யும் ஆற்றல் பெற்றவர்கள். சிநேகத்திற்கு மிகக் கட்டுப்பட்டவர்கள். அவர்களால் யாருக்கும் எந்தத் தொந்தரவும் இல்லாதவர்கள். பிறர்க்கு உபகாரம் செய்வதிலே கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள். அவர்கள் கூடப் பழகக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அதில் எனக்கு அதிக வாய்ப்பும் அதிர்ஷ்டமும் ஏற்பட்டது பற்றிப் பெருமைப்படுகிறேன். தர்ம காரியங்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பார்கள். இப்படிப்பட்டவர்களை இந்தக் காலத்தில் பார்க்க முடியாது. விருந்து உபசரிப் பதில் தனித்தன்மை படைத்தவர்கள். அவர்களுடன் 1940-ல் மலேசியா நாட்டில் கிள்ளானில் முதல் சந்திப்பு ஏற்பட்டது. பார்த்த மாத்திரத்தில் ஒரு காந்த சக்தி ஏற்பட்டதுபோல் ஒரு உள் உணர்வு எனக்கு ஏற்பட்டு அதுமுதல் இன்றுவரை அந்த அன்பு மாருமல் அன்பாகப் பழகி வருகிறோம். குடும்பத்தோடு ஒட்டிய, பிரிக்கமுடியாத சகோதர வாஞ்சையுடன் இருந்து வருகிறோம். அவர் களுக்கு 80வது ஆண்டு நிறைவு பெறுவது குறித்து மிக்க சந்தோஷமடைகிறேன்.

க. வெ. ராம. நாராயணன்

வயிநாகரம்

வெ. ராம. சோம. கருப்பன் செட்டியார்

அமராவதி புதூர்

ஆத்தங்குடி திருவாளர், பெ. மு. சுப்பையா செட்டியாரவர்கள், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, 80ம் ஆண்டு நிறைவை அடைகிருர்கள். உலகத்தில் பெரும்பாலான பிராணிகள் தாம் வாழ வாழுபவை. அவற்றுட் சில பிற உயிர்களின் வாழ்வுக்கு, உதவுபவைகளாகவும் உள்ளன. மனித இனம் தாம் வாழ்வதற்கு மட்டும் வாழ்வதல்ல. இதனுலேயே அவ்வினம் மற்ற இனங்களினும் உயர்ந்ததாக மதிக்கப்படுகின்றது.

தம்முடைய வாழ்வுடன், பிறர் வாழ்விலும் குறிப்பு வைத்து உதவி செய்பவர்கள் மனிதர்களில் சிறந்தவர்களாவார்கள். இத்தகைய நல்லோர்களை உலகம் என்றும் பாராட்டி மகிழும். நம் அன்பர் சுப்பையா செட்டியாரவர்கள் இளமை தொட்டு எவராலும் மதிக்கப்பெறும் நற்குணங்கள், நற்செயல்களால் உயர்ந்து விளங்குவார்கள். அடக்கத்தை அணிகலனுகக் கொண்டவர்கள். இவர்களது மலர்ந்த முகமும் இனிய சொல்லும் எவரையும் வசப்படுத்துவன. கடவுட் பணிக்கும், மக்கள் நலத்துக்கும் இல்லையென்னது வழங்கும் இயல்பு உடையவர்கள். பல்லாற்ருலும் பாராட்டுதலுக்குரிய இவர்கள், இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து இன்புறுக என்று எம் ஆன்ம நாயகராகிய ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரர் திருவடிகளைச் சிந்திக்கின்ருேம்.

சோம. கருப்பன் செட்டியார்

ப. வ. ராம. குழந்தையன் செட்டியார்

சென்னை.

காவி உடுத்தாத ஆசாமியைச் சாமி என்று அழைக்கப்பெறும் சிறப்பினைப் பெற்றவர்கள் திரு. பெ. மு. சுப. அவர்கள் வெள்ளை வேட்டி அணிந்து, குடும்பத்தில் இருப்பவரைச் சாமி என்று அழைக்கப்படுவதை, முதன்முதலில் நான் திரு. சுப. அவர்களிடத்தில் நான் கண்டேன்.

காலம் சென்ற நம் மதிப்பிற்குரிய, கோட்டையூர் திரு. க. வீ. அள. மு. ராம. ஐயா அவர்கள் மூலம் எனக்குத் திரு. சுப. அவர்களைத் தெரியும்.

உயர்ந்த பண்புகளை உடைய நல்ல மனிதர். விருந்தோம்பலில் சிறந்தவர். காரைக்குடிக் கம்பன் விழாவில், இவர் உபசரணையை அனுபவிக்காத அறிஞர்களே இல்லை. திரு. சா. கணேசன் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்.

நல்ல மனிதர்

ஜி. கே. சுந்தரம் - கோவை

நிர்வாக இயக்குநர், லெக்ஷ்மி மில்ஸ்.

உயர்திருவாளர் ஆத்தங்குடி பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்களின் அறிமுகம் நட்பாய் மலர்ந்ததில் நான் மிக்க பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

திரு. சுப்பையா செட்டியார் அவர்கள் இல்லாத கம்பன் கழக ஆண்டு விழா காரைக்குடியில் நினைக்க முடியாத ஒன்றாகும் (அடிப்பொடி மன்னிக்கவும்). குறிப்பாக கம்பன் விழாவின் நான்கு நாட்களில் நம் எல்லோருக்கும் உண்டி வழங்குவதில் மிக உன்னிப்புடன் கண்ணும் கருத்துமாகப் போஜனசாலையில் அக்ராசன அதிபராக (Presiding deity) யாதொரு குறைபாடுமின்றிப் பணியாற்றுபவர் திரு. செட்டியார் அவர்களே. அவர் அண்ணல் ராஜாஜியையே தன் வீட்டில் பல சமயம் விருந்தாளியாக்கிய திறமைசாலி அல்லவா!

அவ்வொருமுறை திரு செட்டியார் அவர்களின் தலையாய திருப்பணியில் உள்ள வேலன்குடிக்கு எங்கள் கோஷ்டியை அழைத்துச் சென்று திகட்டுமளவு செட்டி நாட்டுக்கே தனிப்பெருமையான விருந்தோம்பலுக்கு எங்களைப் பாத்திரர் களாக்கிக் கௌரவித்து, அந்நல்வாய்ப்பை வழங்கிய மேன்மை, மறக்கமுடியாத ஓர் நிகழ்ச்சியாகும். நா சற்றுச் சுரக்கிறது.

கம்பன் மணிமண்டபப் பிள்ளையார் கோவில் திருப்பணி செய்தவர் திரு. சுப்பையா செட்டியார் என்பதை நன்றியுடன் நாம் போற்றக் கடமைப் பட்டவர்களாவோம்.

மணி மண்டபக் கட்டிடத் தொடரும், முகப்பும், தமிழ்த்தாய்க் கோயிலும், விரைவில் செவ்வனே கட்டி முடித்துப் பூர்த்தியடைய வேண்டிக் காரைக்குடி கம்பன் கழகக்குழு அங்கத்தினர்களான எங்களுக்கு நற்றூண்டுகோலாக விளங்கும் திரு. செட்டியார் அவர்களை நாம் பரிவுடன் வரவேற்கிறோம்.

தன் குடும்ப முன்னேற்றத்திலும், தம் தொழிலிலும், ஆன்மீகத் துறையிலும், நாட்டுப் பற்றிலும் ஓர் ஒளிவீசும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிருர் என்ருல் மிகையல்ல. எல்லோரும் அறிந்ததே.

அண்ணல் ராஜாஜி அவர்களின் உண்மைத் தொண்டரும், சீடரும், பக்தருமாக அரசியல் பணிகளிலும் பங்காற்றியவர் திரு. செட்டியார் அவர்கள் என்பதை இத்தலைமுறையினரில் சிலரே அறிவர்.

அவர்தம் எண்பது நல்லாண்டுகளையும் நல்லோர் எல்லோர்க்கும் ஒரு சிறந்த வழிகாட்டியாக வாழ்ந்து காட்டி வருகிருர்கள் என்பது நம் நல்வாய்ப்பே.

உரிய கைமாறு சாத்தியமில்லாதமையால் அண்ணுரை வணங்கி ஆசி பெற்று அவர்கள் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து தம் பணிகளைத் தொடர்ந்து ஆற்றி நம்மெல்லோரையும் மகிழ்விப்பாராக என்று இறைவனை வேண்டுகிறேன்.

குறிப்பு: என் நண்பர் 'பின் மோப்பத்துடன்' (Nostalgically) சொல்லுகிருர்: போஜனசாலையில் செட்டியார் அவர்களின் அன்பு வரவேற்பும், இனிய நகைச் சுவையும், 'கொடிய' நிர்ப்பந்தமும் என் நண்பரின் சிறு வயிற்றினில் ஜீரா வடைகளையும், கவுனி அரிசி அல்வாவையும் எப்படியோ விழுங்கவைத்து அவர்களின் கேலிச் சிரிப்புக்குத் தன்னை உள்ளாக்கி விடுவது ஒரு மாமூல் நிகழ்ச்சியாகும். The Impish toothless smile of Thiru Chettiar always stands before our eyes.

எங்கள் மரியாதைக்கும் அன்புக்கும் உரிய உத்தமர் திரு. சுப்பையா செட்டியார் அவர்கள் நீடுழி நலமுடன் வாழ்க! வளர்க அன்ஞர் மரபு!

வணங்கத்தக்க பெரியார்

க. கு. கோதண்டராமன்
கள்ளிப்பட்டி.

பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்களைக் காரைக்குடி கம்பன் விழாவில் நான் பங்குகொண்ட 1955 ஆம் ஆண்டு முதல் நன்கு அறிவேன். அன்றுமுதல் இன்றுவரை மாருதநட்பும், ஆழ்ந்த அன்பும் எங்களிடத்தில் நிலவி வருகின்றது.

அவர் ஒரு சிறந்த காந்தீயவாதி. காந்தீய சகாப்தத்தின் நடமாடும் சின்னம். அறிஞரில் அறிஞரான ராஜாஜியினிடத்தில் பேரன்பு கொண்டவர். விருந்தோம்பலில் அவருக்கிணையானவரை நான் இன்னும் காணவில்லை. காரைக்குடி கம்பன் திருநாளில் ஊட்டு இடத்தில் செட்டியார் அவர்களது அன்பு உபசரிப்பினல் அளவுக்குமேல் உண்டு பலர் திணறுவதை நான் பார்த்திருக்கிறேன். அன்பு, பரிவு, தயயை இவரது பிறவிக்குணம். ஒழுக்கமும் சீலமும் நிறைந்த நல்வாழ்க்கை வாழ்கின்ற இப்பெரியார் எண்பது வயதை நிறைவு செய்கிருர். சதாபிஷேகம் நடக்கும் அப்பெரியாரின் திருவடிகளுக்கு சாஷ்டாங்கமாக தண்டனிட்டு வணங்குகின்றேன். இப்பெரியாரது சீரிய வாழ்க்கை இக்கால இளைஞர்கள் கற்றுத் தெரிய வேண்டிய ஒன்று.

சதாபிஷேகம் காணும் இப்பெருந்தகைக்கு நல்ல ஆரோக்கியத்தையும், இன்னும் நீண்ட ஆயுளையும் எல்லா வல்ல எம்பிரான் இராமன் அருள்வாளுக.

அன்பின் உருவம்

தீப. நடராஜன்
தென்காசி.

கள்ளங் கபடமில்லாத தூய அன்பைக் காணவேண்டுமா? போங்கள் ஆத்தங்குடிக்கு. ஆத்தங்குடி உயர்திரு. பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்கள் அப்படி அன்பின் உருவாகக் காட்சியளிப்பவர்கள். எத்தனையோ பேர்கள் இந்த உலகில் வந்து பிறக்கிருர்கள். சிலகாலம் வாழ்கிருர்கள். பிறகு போய்விடுகிருர்கள். அவர்களால் எவ்விதமான

பிரயோசனமும் இவ்வுலகுக்கு ஏற்படுவதில்லை. ஆனால் வேறு சிலர் சில காரியங்களை நிகழ்த்தவென்றே பிறக்கிறார்கள். அப்படிப் பிறந்தவர்களுள் ஒருவர்தாம் நம்முடைய அன்புக்குரிய சுப்பையா செட்டியார் அவர்கள். தொண்டு செய்யவும், அன்பைச் சொரியவும், பண்பை வளர்க்கவும் வந்தவர்கள் அவர்கள், என்று சொல்லவேண்டும். இன்றும் அவர்கள் பேசுவதும், உறவாடுவதும் பார்த்தால் ஒரு குழந்தைபோலவே தோன்றுவார்கள். குரலிலும் வார்த்தையிலும் அன்பைக் குழைத்து நம் மேல் பூசி விடுவார்கள். நிமிஷத்துக்கு ஒருமுறை நம்மைத் தொட்டு, நம் முகத்தைத் தம்பால் திருப்பி, மிக அடங்கிய, ரகசியம் போன்ற, கனிவான குரலில் அவர்கள் அன்பொழுகப் பேசும்போது நம் உடலெல்லாம் குளிரும்!

பிறக்கும் போதே தொண்டராகப் பிறந்த காரணத்தால் தம் வாழ்க்கையை நாட்டு விடுதலை இயக்கத்துக்கும், இலக்கியத் தொண்டுக்குமாகப் பகிர்ந்து அளித்து விட்டார்கள். கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்களைப் போலவே இவர்களும் நாடு விடுதலை அடையும் வரையும் சட்டை அணிவதில்லை என்று விரதம் மேற்கொண்டவர்கள். விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டபோது மூதறிஞர் ராஜாஜியைத் தமது தலைவராக ஏற்றுக்கொண்டவர்கள் சுப்பையா செட்டியார் அவர்கள். ராஜாஜி அவர்களிடம் இவர்கள் கொண்டிருந்த ஈடுபாடும் நம்பிக்கையும் அளவிறந்தன. ஈடுபாடு என்று சொல்லுவதைப் பார்க்கிலும் பக்தி என்றே சொன்னால் சரியாய் இருக்கும். அந்த ஈடுபாட்டுக்கும் அன்புக்கும் எள்ளவும் குறையாது ரசிகமணி டி. கே. சி. அவர்களிடமும் சுப்பையா செட்டியார் அவர்கள் கொண்டிருந்த ஈடுபாடும், அன்பும். ராஜாஜி அவர்களும், டி. கே. சி. அவர்களும் சுப்பையா செட்டியார் அவர்களிடம் தனித்த அன்பும், பரிவும், நட்பும் கொண்டிருந்தவர்கள். அரசியல் சம்பந்தமாக செட்டிநாட்டில் ராஜாஜிக்குப் பக்கபலமாகப் பலர் இயங்கி வந்தனர். அதே போன்று டி.கே.சி க்கும் பக்க பலமாகப் பலர் இருந்தார்கள். அந்த இரண்டு கூட்டத்திலும் இடம் பெற்றவர்கள் நம் சுப்பையா செட்டியார் அவர்கள். ரசிகமணி அவர்கள் எப்போது செட்டிநாடு விஜயம் செய்தாலும் அவர்களுடனேயே செட்டியார் அவர்களும் இருப்பதை வழக்கமாய்க் கொண்டிருந்தார்கள்.

தமிழ் இலக்கிய உலகம் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களைப் புரிந்து கொள்ளவோ, அவர்கள் பெருமையை உரிய முறையில் உணர்ந்து போற்றவோ இல்லையே என்று ரசிகமணி மிகவும்

ஆற்ருமைப்பட்டு வந்தார்கள். அந்த வேளையில் செட்டிநாட்டு அன்பர்கள் பலர் கூடிக் கவிமணி அவர்களைச் செட்டி நாட்டுக்கு அழைத்துச் சென்று மிகப் பெரிய அளவில் பாராட்டு விழா எடுத்தார்கள். ரசிகமணி அவர்களையும் அவ்விழாவுக்கு அழைத்தார்கள். செட்டிநாட்டு தனவணிகப் பெருமக்கள் பலர் தம்தம் ஊருக்குக் கவிமணியை அழைத்து விருந்துபசாரம் செய்து மகிழ்ந்தார்கள். நம் அன்புக்குரிய சுப்பையா செட்டியார் அவர்களும் தம் வீட்டுக்குக் கவிமணி அவர்களை அழைத்துச் சென்று உபசரித்தார்கள். ரசிகமணி அவர்களுக்குக் கவிமணிக்கு இப்படி எல்லாம் பாராட்டு நடந்தது, பேருவகை தந்தது. வாய்ப்பு நேரும் போதெல்லாம் தம் மகிழ்சியை எல்லோருக்கும் சொல்லி மகிழ்ந்தார்கள் ரசிகமணி அவர்கள். அந்தச் சமயங்களில் எல்லாம் ஆத்தங்குடி சுப்பையா செட்டியார் அவர்களின் அன்பையும் பண்பையும் வெகுவாகப் பாராட்டி மகிழ்ந்தார்கள் ரசிகமணி. ராஜாஜி, டி. கே. சி. என்ற இரு பெரியவர்களது இணைப்பும் சேர்ந்து ஈடு இணையில்லாத பல மாற்றங்களைத் தமிழ் நாட்டிலே செய்திருக்கிறது. அரசியலிலே ராஜாஜியைப் பின்பற்றி நின்றவர்கள் பலர். அதேபோல் இலக்கியம், பண்பாடு, கலை சம்பந்தமாகப் பலர் டி. கே. சி. யைப் பின்பற்றி நின்ருர்கள். ஆனுல் ஒரே ஒருவர் தான் இருவருக்கும் சீடராய், நண்பராய், இருவர் அன்புக்கும் பாத்திரமாய் இருந்தவர். அவர்கள் தான் நம் மதிப்பிற்குரிய ஆத்தங்குடி பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்கள்.

1972-ம் ஆண்டு டிசம்பர் 26-ம் தேதி சென்னை ராஜாஜி மண்டபத்தில் மக்கள் அஞ்சலி செய்வதற்காக ராஜாஜி அவர்களின் பூத உடல் வைக்கப்பட்டிருக்கிறது. ராஜாஜி அவர்களின் குடும்பத்தாரோடு, நெருங்கிய நண்பர்களும் ஒரு பக்கத்தில் கூடியிருந்தார்கள். நானும் அங்கு ஒரு ஓராமாய் நின்று கொண்டிருந்தேன். திடீரென்று என்னை யாரோ இறுகத் தழுவிக் கொள்வதை உணர்ந்தேன். திரும்பிப் பார்த்தால் சோக உருவமாக நம் சுப்பையா செட்டியார் அவர்கள் தாம் என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். வானெலிச் செய்தி கேட்டு இரவோடு இரவாக காரில் புறப்பட்டு வந்துள்ளார்கள் என்பதை அறிந்தேன். ராஜாஜி அவர்கள் பால் இவர்கள் வைத்திருந்த ஈடுபாடு எத்தகையது என்பது அப்போது வெளிப்பட்டது. ராஜாஜியின் மறைவு அவர்களை மிகவும் பாதித்துவிட்டிருந்தது. கண்கள் கலங்கிப் போயிருந்தன. சொற்கள் குழறிக்கொண்டு வந்தன. உணர்ச்சியை அவர்களால் அடக்கமுடியவில்லை. தம் அன்புக்கும், மதிப்புக்கும், பக்திக்கும் பாத்திரமான ராஜாஜி அவர்கள் காலமாகி

விட்டார்களே என்பதைச் செட்டியார் அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதே நேரத்தில் ராஜாஜியின் உற்ற நண்பரும், தம் அன்புக்குப் பாத்திரமான இன்னொரு பெரியவர் ரசிகமணி டி. கே. சி. அவர்களும் இப்போது இல்லையே என்ற நினைவு அவர்களுக்கு வந்து விட்டது போலும். தம் ஆற்றொணாத் துயரை என்னிடம் வந்து பகிர்ந்து கொண்டார்கள். நான் வயதில் மிக இளையவன் தான் என்றாலும் அவர்கள் அன்புக்குச் சிறு பையனாய் இருந்த போதிலிருந்தே ஆளான வன். அத்தனை பெரியவர்களுக்கு நான் என்ன ஆறுதல் மொழி கூற முடியும்? உலகத்தில் பல்வேறுபட்ட மனிதர்களோடு பழகினவர்கள் நம் செட்டியார் அவர்கள் உண்மைவழி நின்று, லட்சியங்களுக்காகப் போராடிய இவ்விரு உத்தமர்களோடும் நெருங்கிப் பழகினார்கள் சுப்பையா செட்டியார் அவர்கள். அதன் காரணமாக அன்பின் சக்தி எத்தகையது என்பதைக் கண்டு கொண்டவர்கள். ஆதலால் அவ்விரு பெரியவர்களும் இல்லாத இவ்வுலகம் அவர்களுக்கு வெறிச்சோடிப் போனதில் வியப்பில்லை.

அவ்விரு மகான்களோடு ஒட்டி ஆத்மார்த்தமாகப் பழகியதன் காரணமாக நம் செட்டியார் அவர்களிடம் ஒரு தனித்தன்மை உருவாகி யிருக்கிறது என்று நான் எண்ணுகிறேன். மனதில் பட்டதை, தமக்குச் சரியென்று பட்டதை, 'பட்'டென்று சொல்லிவிடுவார்கள். யாராய் இருந்தாலும் சரி தம் கருத்தை ஒளிவு மறைவு இன்றிச் சொல்ல அவர்கள் தயங்குவதே கிடையாது. அதே சமயம் எல்லாரிடமும் அன்பு காட்டுவதிலும், உபசரிப்பதிலும் அவர்களுக்கு இணையாரும் கிடையாது. அன்பில் முழுக்காட்டுவது என்று சொல்வார்களே அப்படி முழுக்காட்டி விடுவார்கள்,

அன்னாருக்கு 80 வயது நிறைவு விழா நடக்கப்போகிறது என்பது கேட்க ரொம்ப சந்தோஷமாய் இருக்கிறது. அவர்கள் பல்லாண்டு சம்பூர்ண ஆரோக்கியத்துடன் வாழ்ந்து நமக்கெல்லாம் அன்பைப் பேணி வாழ்வது எப்படி என்று காட்டிக் கொண்டே இருக்க வேண்டும் என்பது, அன்னை காமாட்சி திருப்பாதங்களில் நான் சமர்ப்பிக்கும் வேண்டுதல்.

‘சாமி’ திரு. பெ. மு. சுப.

சுப. அருணுசலம் - கரூர்.

‘சாமி இருக்காங்களா’, என்று அறிந்தவர் ஒருவர் கேட்க, ‘இது கோவிலுமில்லே, - மடமும் இல்லேயே!’ என்று அங்கு புதிதாக வந்தவர் திகைக்க, அந்தச் சமயம் உள்ளே இருந்து வந்த ஒருவர் ‘நம் ஆத்தங்குடி பெ. மு. சுப. அவர்களேத் தானே கேட்கின்றீர்கள்’ என்று மறுமொழி கூற, நான் ‘ஏன், இவர்களே எல்லோரும் சாமி என்று அழைக்கின்ருர்கள்’ என்று சிந்திக்கத் தொடங்கினேன்.

ஒரு நாள் இரவு 7 மணி இருக்கும். திரு. சுப. அவர்களேப் பார்க்கச் சென்றேன். அப்பொழுதான், இவர்களே எல்லோரும் சாமி என்று ஏன் அழைக்கின்ருர்கள் என்ற உண்மை விளங்கியது. அந்த நாளில் அவர்களுக்கு அது பிரார்த்தனே நேரம் போலும். ‘ஹரே ராமா! ஹரே கிருஷ்ணு!’ என்று வாய் இசைபாட, கைகள் தாளம் போட, கண்கள் கசிந்து, கண்ணீர் மல்க, உளம் உருகி, மெய்மறந்து பிரார்த்தனே செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் மட்டுமல்ல, அவர்கள் தம் மனேவி மக்கள், பேரக் குழந்தைகள் உட்பட அனேவரையும் அந்தப் பிரார்த்தனேயில் ஈடுபடச் செய்திருந்தது, அவர்கள் பக்தி.

திரு. சுப. அவர்கள் தம் பக்தி அனுபவத்தைப் பற்றிக் கூறும் போது, ‘நானும் இளமையில், கோவிலினுள் இருப்பது வேட்டி துவைக்க உதவும் கல் என்றுதான் கூறினேன்; உங்களுக்கும் வயது ஆக ஆக, அனுபவம் பெற்றபின் தான் ஆண்டவன் அருமை தெரியும்’, என்று கூறுவார்கள். ஆம், அன்று சாமியைக் கல் என்று கூறியவர்கள் தான் இன்று சாமி என்று அழைக்கப்படுகின்ருர்கள்.

இங்ஙனம் திரு. சுப. அவர்கள் உள்ளம் செம்மை அடையக் காரணம் உண்டு. அன்பும் பண்பும் விலே கொடுத்து வாங்கும் பொருள்கள் அல்ல. ‘நல்லார் அறிஞர் நட்பினேயே நாளும், நாளும் நாடுவையேல், நில்லா உலகில் நிலேத்த சுகம் நீடு பெறுவாய் நிச்சயமே’, என்று கவிமணி கூறுவதுபோல், நல்லறிஞர் கூட்டுறவை, எப்பொழுதும் எண்ணி, நாடுபவர்கள் திரு. சுப. அவர்கள்.

அவர்களோடு தமிழ் நாட்டில் தொடர்பு கொண்டுள்ள அறிஞர் பெருமக்கள் பலர் என்பதற்கு அவர்கள் கோப்பில் இன்றும் பாத்திரமாக இருக்கும் பலநூறு கடிதங்களே தக்க சான்று. தமிழ்க்கடல் திரு. ராய. சொ., திரு. சொ. முருகப்பா, கவிமணி, டி. கே. சி., கல்கி,

தெ. பொ. மீ., நாமக்கல் கவிஞர் என்று எண்ணில் அடங்காப் பெரு மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள். பல அறிஞர் களைத் தம் இல்லிற்கு அழைத்தும், வேலங்குடியில் தம் இஷ்ட தெய்வ மான வயல்நாச்சி அம்மன் கோவில் அருகில் இயற்கை எழில் நிறைந்த சூழ்நிலையில் அமைந்துள்ள விடுதிக்கு அழைத்தும், பல நாட்கள் தங்க வைத்து, உபசரணை செய்து, தமிழ் உரையாடல்கள் செய்ய வைத்து, தமிழ் வளர்த்ததை நண்பர்கள் நன்கு அறிவார்கள்.

புலவர்களை வைத்து உபசரித்தல் அவ்வளவு எளிதல்ல; மிகக் கடிமான செயல், என்று பண்டிதமணி அவர்கள் கூறியதைக் கேட்டிருக் கின்றேன். அதை திரு. ராய. சொ. அவர்கள் வாழ்க்கையிலும் கண்டிருக்கின்றேன். இந்த உபசரணைக்கலையில் திரு. சுப. அவர்கள் பெரும் வெற்றி கண்டுள்ளார்கள். வீட்டிற்கு வந்தவர்களை விருந்துண் ணுது விடமாட்டார்கள். ஒரு வேளை அவர்கள் வீட்டிற்குச் செல்ல இயலாது போனுல், நம் வீடு தேடிவந்து விடும் அவர்கள் சமைத்த உண்டி வகைகள், இதை அனுபவித்த கரூர் அன்பர்கள் பலர்.

நல்ல காரியங்கள் அனைத்திலும் திரு. சுப. அவர்களுக்கும் பெரிதும் ஈடுபாடு உண்டு. பொதுக்காரியங்கள் செம்மையாக நிகழ்ந் தால்தான் நாடு நலம்பெறும் என்ற உறுதியான கருத்துடையவர்கள். திரு. சுப. அவர்கள். தமிழ் விழாவானுலும் சரி, கோவில் திருப்பணிகள் ஆனுலும் சரி, எல்லாவிதமான பொதுப்பணிக்கும் தானே முன்வந்து தன் சக்திக்கேற்ப, (சில சமயம் மிக மிக அதிமாகவும்) கொடையும் கொடுத்து, தன் வசமுள்ள சாமான்கள் வாகனங்கள் முதலியவற்றையும் உதவி, ஆடம்பரம் இன்றி தன் உடல் உழைப்பையும் நல்குவது அவர் களின் சிறப்பியல்பாகும்.

உழைத்து, உற்சாகப்படுத்தி, கொடைகள் வழங்குவதுபோலவே தன் மனதிற் தோன்றிய குறைகளைக் கூறுவதற்கும் சிறிதும் தயங்க மாட்டார்கள். செல்வரானுலும் சரி, செந்தமிழ்ப் புலவர் ஆனுலும் சரி, அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று சிறிதும் கவலைப்படாமல், தன் கருத்தைத் தயங்காமல், சில சமயங்களில் சிறிது கடுமையாகவே கூறி விடுவார்கள். கவலைப்படுவதெல்லாம் அவர்கள் தம் துணைவியார்தாம். ''இதனுல் சில சமயம் சிலர் நட்பை இழக்க நேரிட்டு விடுகின்றதே'' என்று. இது அவர்கள் கள்ளங் கபடமற்ற உள்ளத்தையே காட்டுகின் றது என்பதையும், நண்பர்களின் வாழ்வில் அக்கறை கொண்டு, அவர்கள் நன்ருக இருக்க வேண்டும் என்று மனமார விரும்பியே, அவர்கள் அங்ஙனம் கூறுகின்ருர்கள், என்பதையும் அவர்களுடன்

நெருங்கிப் பழகியவர்கள் நன்கு அறிவார்கள். கருத்து வேறு பாடுகள் இருந்தாலும், காலத்தால், நண்பர்களுக்கு உதவுவதை நான் கண்டிருக்கின்றேன்.

பிடிவாதத்திற்குப் பெயர் பெற்ற ராஜாஜியை, 'நேரமில்லை; காலம் இல்லை;' என்று கூறும் அசைக்க முடியாத ராஜாஜியைத் தன் பக்தி வலையில் பிடித்தவர் திரு. சுப. அவர்கள். ஆழ்வார்களும், நாயன்மார்களும், ஆண்டவனைத் தன் விருப்பத்திற்கு அழைத்து மகிழ்ந்தது போல் ராஜாஜி அவர்களைப் பலமுறை தன் இல்லத்திற்கு அழைத்து மகிழ்ந்துள்ளார்கள். ராஜாஜி அவர்கள் திரு. சுப. அவர்களுக்கு எழுதியுள்ள கடிதங்கள் ஏராளம். அவர்களுடன் எடுக்கப்பெற்ற புகைப் படங்களும் எண்ணில் அடங்கா. அன்பெனும் பிடியுள் அகப்படும்மலை, அன்பெனும் குடில்புகும் அரசு என்று வள்ளலார் கூறுவதுபோல், ராஜாஜி திரு. சுப. அவர்கள் பக்தியில் பெரிதும் ஈடுபட்டு அருளினார்கள்.

இத்துணை சிறப்பு இயல்புகளைக் கொண்டு, தொண்டருக்கும் தொண்டனாய், ஆடம்பரத்தை அடியோடு வெறுத்து மிக, மிக, எளிய வாழ்வை நடத்திவரும் பெரியவர் திரு. சுப. அவர்களுக்கு இன்று எண்பது ஆண்டு நிறைவு பெறுகின்றதென்றால், அதன் சிறப்பு, குறிப்பாக, பொறுமையே உருவான, அவர்கள்தம் மனைவியையும், அடக்கம் நிறைந்த அவர்கள் தம் அருமை மகன்களையும், மற்றும் மகள், மருமக்கள், மாப்பிள்ளை ஆகியோர்களையே பெரிதும் சாரும். இவர்கள் குடும்பம் மிக நல்ல குடும்பம். திரு. சுப. அவர்களும் அவர்கள் குடும்பத்தினர் அனைவரும், மேன் மேலும் எல்லா நலன்களும் பெற்றுப் பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு இனிது வாழ்க என்று இந்த நல்ல நாளில் இறைவன் திருவருளை நினைந்து வாழ்த்தி வணங்குவோமாக!

எளிவந்த அன்புக்கு எண்பது

பேராசிரியை சரசுவதி இராமநாதன் M. A.,
பள்ளத்தூர்.

உலக வாழ்க்கையில் எண்பது மைல்கற்கள் கடந்து வருவது அற்புதமான சாதனை. எங்கள் வணக்கத்திற்கும் அன்புக்குமுரிய ஆத்தங்குடி உயர்திரு. சுப. அவர்களின் சதாபிஷேக வைபவம் எங்களுக்கெல்லாம் தேனாக இனிக்கும் அற்புதச் செய்தி. 'இன்னும் ஒரு நூற்றாண்டிரும்' என்று வாயார, மனதார இறைவனை வாழ்த்துகிறோம்.

1966 பங்குனி உத்திரத் திருநாள். அதுதான் காரைக்குடி கம்பன் திருநாள். பட்டிமண்டபம் முடிந்து மேடையைவிட்டு இறங்கிய என்னை. அன்புக்குரல் ஒன்று, மெல்லிய குரல் ஒன்று, அளவான சொற்களால், ஆவலோடு பாராட்டியது. நிமிர்ந்து பார்த்ததுமே அந்தப் பரிவுமிக்க பெரியவர்மீது என்னையறியாமல் பாசமும் மதிப்பும் பெருகியது. வணங்கி நன்றி கூறிவிட்டு நகர்ந்தேன். சாப்பாட்டுக்குக் கூடத்திற்குப் போனேன். அங்கு அந்த 'வயதான' இளைஞர் சுறுசுறுப் போடு பந்தி விசாரணை செய்து, அனைவரையும் உபசரிக்கும் அன்பையும், அழகையும் கண்டேன். பேச்சாளர்களை 'விஷயம் அறிந்து' பாராட்டி, அனைவரையும் உபசரித்து இன்முகத்தோடு இன்சொல் பேசி உண்பித்து, வழியனுப்பும் அப்பெரியவர் யார் என்று கேட்டேன். 'ஆத்தங்குடி சுப' என்றார்கள். கம்பன் அன்பர், இலக்கிய ரசிகர், வள்ளல், பக்தர், விருந்தோம்பும் பண்பினர், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத நல்லவர் என்பதெல்லாம் இந்தப் பதினைந்தாண்டுப் பழக்கத்தில் அவர் குடும்பத்தோடு பழகிய அன்பு உரிமையில் நான் கண்ட உண்மைகள்.

யார்யாருக்கு எது பிடிக்கும், எது தேவை என்று அனுபவத்தால் அறிந்து, நினைவிற்கொண்டு, பரிந்து ஊட்டும் தாயினும் இனியவர் எங்கள் சுப்பையா செட்டியார்.

கம்பன் விழா நிகழ்ச்சிகளை மனதில் இருத்தி, பின்னர் வேலங் குடியில் அமர்ந்து, மெல்லிய குரலில் விமர்சினம் செய்யும் அழகே அழகு! ஒன்றும் தெரியாத அப்பாவி போலத் தென்படும் இவருக்குப் பல பாடல் கள், செய்திகள் தெரியும். டி. கே. சி. யின் வர்ணனையை இவர் பெரிதும் ரசிப்பார்.

அமரர் தோழர் ஜீவா அவர்கள் காரைக்குடியில் பணியாற்றிய போது அவருக்கு, அவருடைய சிரமங்களை உணர்ந்து பலமுறை இவர் உதவியது பலருக்குத் தெரியாது. 'வலதுகை கொடுப்பது இடதுகை அறிய வேண்டியதில்லை' என்பவர். ஜீவா அவர்கள் 'இது எதற்கு' என்று பெருமிதத்துடன் மறுத்த போதும் அன்புக் கட்டளையால் அடிபணிய வைத்து விடுவாரம்.

வேலங்குடி வயல்நாச்சியம்மனும் பெரிய நாயகியின் பாதமலருக் குப் பக்தி பூண்ட தொண்டர் இவர். 'செல்வம் வந்துற்ற காலை தெய்வ மும் சிறிதும் பேணார்', என்ற நிலையை மாற்றி எந்த உயர்வுக்கும் அம்மனின் அருளே காரணம் என்று வளமாகித் தொண்டு பூண்பவர்.

ஆச்சி, ஐயா, மக்கள், மருமக்கள் அனைவரும் கருத்தொருமித்து வந்த விருந்தினரைப் பேணுவதில் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் காட்டுகின்றனர். சீப்புச் சீடையும், தேன் குழலும், முறுக்கும், பணியாரமும், இளந்தோசையும் தந்து விருந்துபசரிப்பினால் விருந்தின ரைத் திணறடிக்கும் அன்புக் குடும்பம் இது.

தன் மனதில் பட்டதைப் 'பட்'டென்று சொல்லிவிடும் நேர்மை யாளர் உயர்திரு 'சுப'. அந்த நேர்மை இன்று பலரிடம் இருப்ப தில்லையே! உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களைத்தான் பெரும்பாலும் காண்கிறோம். யாராயிருந்தாலும் 'சரியில்லை' என்று தோன்றுவதைக் கண்டித்துச் சொல்லும் நேர்மையைப் பலமுறை கண்டிருக்கிறேன்.

'சுப' அவர்கள் எண்பது ஆண்டு நிறைவு விழாவினைக் கொண் டாடுவது பெருமகிழ்ச்சி தருகிறது. அவர்களைப் போன்ற நல்லோர், தூயோர் வாழ்க்கை பிறருக்கும் வழிகாட்டுவதாகும்.

அன்புக்கு எண்பது அடக்கத்திற்கு எண்பது
உண்மைக்கு எண்பது எளிமைக்கு எண்பது

என்ற எண்ணமே நம் மனத்தில் எழுவது! அவர்தம் குடும்பம் வாழ்க! வளர்க! அவரும் ஆச்சியும் நூற்றாண்டு விழாக் காண்க!!!

அந்தக் குழந்தைக்கு வயது எண்பது

அ. அறிவொளி எம். ஏ.,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

காரைக்குடி கம்பன் திருநாளுக்குப் போயிருக்கிறீர்களா? கம்பன் அடிப்பொடியின் அறையில் 'ஐயா'வைக் காணலாம். ஆம் அவ்விழா வில் முதலில் நம் தரிசனத்துக்குக் கிடைத்த விநாயகரே அவர்தான். குளியல், உணவு, ஓய்வு இவைகளின் மேற்பார்வையே அவருடையது தான்.

அவர் எப்போது சாப்பிடுகிறார் என்று நமக்குத் தெரியாது. ஏனென்றால், உபசாரம் செய்து கொண்டிருப்பதையே பார்த்துப் பார்த்து உணவு அருந்துவதைப் பார்க்க முடியாது. கம்பன் திருநாள் இப்படிப்பட்ட இலக்குவர்களால்தான் இனிதே நிகழ்கிறது.

கோயிலில் நுழையும் போது, விநாயகராகப் பார்த்தோமே அந்த 'ஐயா'வை நீங்கள் ஊர் திரும்பும்போது சண்டிகேஸ்வரராகவே காணுவீர்கள்.

விழாவில் சிறிது சிரத்தை குறைந்தாலும் கம்பன் அடிப்பொடிக்குச் சினம் வரும். சிம்ம லக்கினத்தின் சினம்.- சீறி விழுவார். நாம் ஓடுவோம். ஒளிமயமான அன்பு உருவம் குழந்தைபோலச் சிரித்து நமக்கு முன்பு வரும். ஆம் அதுதான் 'ஐயா.' அவர் சினப்பது அவருடைய அன்பின் அடையாளம் என்ற அர்த்தத்தை 'ஐயா'வின் சிரிப்பு மூலம் நாம் தெரிந்து கொள்வோம்.

அம்பலத்திலே ஆடும் அரசியல் வரலாறுகள் தான் பலருக்குத் தெரியும். அறைகளில் நடக்கும் சிதம்பர ரகசியங்கள் 'ஐயா'வுக்குத் தெரியும். இந்த வட்டாரங்களில் அவரைத் தெரியாமல் பாக்காமல் புதியவர் ஒருவரும் நுழைய முடியாது. புரிந்து நுழைந்தவருக்கும் இவர் அன்பின் உரிமைக்குக் காரணம் முழுவதும் விளங்காது. அவர்கள் இவரை மதிக்கக் கூடிய ஒரு மனிதராக மட்டுமே கண்டிருப்பார்கள். 'ஐயா'வோ அப்புதியவர்களின் ஜாதகம் முழுதுக்கும் அஷ்டவர்க்கம் போட்டிருப்பார். சிறிசுகள்தானே என்று தீண்டாமை கொண்டதில்லை. பெரிசுகள்தானே என்று காக்காய் பிடித்ததுமில்லை.

கம்பன் விழா தொடங்கி நடந்த கதை வேண்டுமா? காங்கிரஸ் கால் கோல் ஆனபிறகு வந்த காவியம் வேண்டுமா? கம்பன் விழாக்கள் பல ஊரிலும் நடக்கும் மாட்சிபுரிய வேண்டுமா? மிகப் பெரிய தேர்க் கலசங்களைப் போன்ற பெரியோர்களின் அன்றாடச் செயல் முறைகள் தெரிய வேண்டுமா? 'ஐயா'வைக் கேளுங்களேன். கோடி அர்ச்சனை யைப் போலச் சொல்லிக்கொண்டே போவார்.

ஒரு சக்கரவர்த்தி ராஜாஜியான வரலாறு முழுவதும் அவருக்கு மனப்பாடம். குற்றாலத்துக் குளிர்ச்சாரலில் ரசிகமணி வீட்டுச் சமைய லறையிலிருந்து இலக்கிய ரசனை உட்பட்டு அவர் மீசையின் பிரவாகம் வரையிலும் ஐயாவுக்கு அத்துபடி.

விழாவில் பேச்சு ஏதும் கேட்காத நேரத்தில் தினமணி ஆசிரியர் சிவராமன் கையில் உள்ள புதிதாக வந்துள்ள ஓர் ஆங்கிலப் புத்தகம் விரியும். இராம பஜனையோடு பிரபஞ்சவாசத்தில் அவர் சஞ்சரிப்பார். ஆனால் அந்தச் சிவராமனையும், சுயம் மறந்த லயத்தில் அவர் சொக்கிக் கிடக்கும் நிலையிலும் ஓர் உரிமைக்குரல் உபசார மந்திரங்களை உச்சரிக்

கும். உச்சாடனத்தில் உயிர்ப்புக் கொண்ட சிவராமன் விழிப்பார். ஒரு குழந்தை எதிரே நின்று குலுங்கிச் சிரிக்கும் அதுதான் 'ஐயா'.

இப்படி ஒரு குழந்தை 'ஐயா'! அவருக்கு எண்பது வயதாம்! நம்பமுடியவில்லை. அவருக்கு நூறு வயதாகும் போது மட்டும் நம்பவா போகிறோம். அப்போதும் அவர் குழந்தை குழந்தைதானே! குழந்தை மணமும் சிறந்த பண்பும் உபசாரமும் கொண்ட ஐயா பெ. மு. சுப. சுப்பையா செட்டியார் அவர்கள் பலகாலும் வாழ்ந்து எங்களை வாழ்விக்க வேண்டுகிறேன்.

கர்மயோகிக்கு ஒரு எடுத்துக்காட்டு

S. N. S. *ராமையா, காரைக்குடி.*

பகவத் கீதையில் கண்ட கர்மயோகிக்கு எடுத்துக் காட்டாக 80ம் ஆண்டு நிறைவு கொள்ளும் எனதருமை அண்ணன் திரு. சுப. அவர்கள் திகழ்கிறார்கள்.

அண்ணன் அவர்களின் வாழ்க்கை எல்லா வகையிலும் இரண்டு பகுதிகளைக் கொண்டது என்று அவர்களே கூறிய வாழ்க்கையனுபவங்களைக் கொண்டு தெரிகிறது. அதில் முற்பகுதி முழுவதும் ஈ. வெ. ரா. அவர்களின் கொள்கையில் பிடிப்புடன் கல்லில் கடவுளில்லை என்ற தீவிரமான பிரசாரம் நிறைந்ததாயும் வெளிப்படையான தீவிர தேசத் தொண்டு நிறைந்தது. அவர்கள் மனமொத்த அத்தை மகளை முதல் மனைவியாக ஏற்றுக் கவலையற்று இருந்த சிறிது நாளில் மனைவியார் இறைவனடி சேர்ந்தார்கள். இப்போது துணைவியாராக உள்ள பண்பில் சிறந்த திருமதி வள்ளியம்மை ஆச்சி அவர்களை மறுமணம் கொண்டு பெற்ற அருமைப் புதல்வனைப் பள்ளிப் பருவத்தில் இறைவன் தன்னடி சேர்த்துக் கொண்டான். இவற்றால் ஏற்பட்ட ஆராத் துயரம் நிறைந்த வாழ்வாகவும் அப்பகுதி இருந்தது. பிற்பகுதி முழுவதும் ராஜாஜி அவர்களைக் குருவாகக் கொண்டு கல்லிலும் கடவுளுண்டு என்று கண்ட வாழ்க்கையும், உள்ளார்ந்த தேசத்தைப் பற்றிய கவலை நிறைந்தும், கல்வியிலும், குண நலன்களிலும் சிறந்த மூன்று குழந்தைகளான திருமதி திலகவதி ஆச்சி அவர்களையும், தம்பிகள் திரு. இலக்குமணன் அவர்கள், திரு. ராஜகோபால் அவர்களையும், பேரன், பேத்திகளையும் பெற்று எல்லா வகையிலும் மனநிறைவு பெற்ற கர்மயோக வாழ்க்கை நிறைந்ததாயும் அமைந்துள்ளது.

அன்னாருடன் அவர்களின் பிற்பகுதியிலேயே 20 ஆண்டுகளாக எனது நட்பு வாய்க்கப்பெற்றது. அதிகாலையில் 4 மணிக்கு எழுந்து ராம நாம ஜெபத்துடன் காரியங்களைத் துவக்குவார்கள். அண்ணல் காந்தியடிகளின் கொள்கையில் ஈடுபாடு அதிகம். உடலுழைப்பு அவசியம் என்று சொல்லி இயன்றவரை அயராது வீட்டுக் காரியங்களைப் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். பொருளாதாரம் தெரியாது டாம்பீக வாழ்க்கை நடத்துபவர்களையும், செல்வமிருந்தும் ஈகை குணம் இல்லாதவர்களையும் நேரில் குற்றம் சாட்டுவார்கள். முரட்டு கதரை அணிவதிலும், கல்லிலும் கயிற்றுக் கட்டிலிலும் கண் அயர்வதில் ஒரு தனி இன்பம் காண்பார்கள்.

காசில்லையென்றால் நாய்கூட மதிக்காது என்பார்கள். புலால் மறுப்பில் மிகுந்த பிடிப்பு உள்ளவர்கள். யாரிடத்திலும் எதிலும் அதிக பாசம் வைக்கக்கூடாது. ஏனெனில் அதை இழந்தால் மனம் தாங்காது என்பார்கள்.

ஒருமுறை ராஜாஜி அவர்களுக்கு மாவுருண்டையும் ஊறுகாயும் சென்னை சென்ற என்வசம் கொடுத்தனுப்பினார்கள். ராஜாஜி அவர்களிடம் அதைக் கொடுத்து விபரம் சொல்லி நமஸ்கரித்தேன். அண்ணன் அவர்களின் நலம்பற்றி விசாரித்து விட்டு ஏதாவது கொடுத்தனுப்பிக் கொண்டே இருப்பது அவர்கள் வழக்கம் என்று சொல்லி ராஜாஜி அவர்கள் மகிழ்ந்தார்கள்.

அன்னை வேலங்குடி பெரியநாயகி அம்மனுக்கும், கரூரில் உள்ள கோவில்களில் அத்தனை மூர்த்திகளுக்கும் தீபாவளி போன்ற நன்னாளில் ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் அபிஷேகஆராதனைகளுடன் வஸ்த்ரங்கள் சாத்தி மகிழ்வார்கள்.

குமரேச சதகத்தில் கூறியபடி அவர்கள் காசு வீணில் செலவிடார், உசிதமானதில் கன திரவியங்கள் செலவிடுவார், கண்டெழுது பற்று வரவினில் மயிரிழையேனும் பிசகார். அண்டப் புறட்டர் தாம் உரி தந்து பொன்னடகு வைக்கினும் கடன் ஈந்திடார், மறுவு நாணய முளோர் கேட்டனுப்புகினும் அவர் வார்த்தையில் எலாம் கொடுப்பார்.

கர்மயோகிகள் அண்ணல் காந்தியடிகள் போன்றும் ராஜாஜி அவர்கள் போன்றும் வாழ்ந்து வரும் எனதருமை கர்மயோகி திரு. சுப. அண்ணன் அவர்கள் தம்பதி சமேதராக 100 ஆண்டும் கண்டு மேலும் இன்புற்றிருக்க இறைவனை வணங்கி எனது அன்பையும் மகிழ்ச்சியையும் வணக்கத்தையும் அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தில் அனைவர்க்கும் தெரிவித்து இந்நன்னாளில் மகிழ்கிறேன்.

நிறைவாழ்வு

கரூர் T.V. ராமசாமி பிள்ளை
சென்னை

எனது அருமை நண்பர் ஆத்தங்குடி திரு. பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்களின் 80-வது ஆண்டு நிறைவு விழா நடக்க இருப்பதை அறிந்து மகிழ்ச்சியுற்றேன். இந்த விழாவை நடத்தும் அவருடைய இரு புதல்வர்களும் சிறப்பானதொரு திட்டம் வகுத்துள்ளார்கள். தந்தையாரைப்பற்றிய செய்திகளை நண்பர்கள் மூலமாகச் சேகரித்து அதை ஒரு நூல் வடிவத்தில் வழங்க உத்தேசித்திருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

புகழ்படைத்த நகரத்தார் குலத்தைச் சார்ந்த நமது நண்பர், தமது முன்னோர்கள் வழியைப் பின்பற்றிப் பல நற்காரியங்களைத் தொடர்ந்து செய்து வருகின்றார். இவர்கள் மலேயா நாட்டிலிருந்து தாய்நாடு திரும்பி, எங்கள் ஊராகிய கரூரில் தமது வாணிபத்தை நடத்த சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு வந்தார்கள்.

நண்பர்களிடத்தில் இவர் பழகும் பாங்கு இவருக்கே சொந்தமானது. தம் மனத்தில் உள்ளதை உள்ளவாறு ஒளிவு மறைவின்றிப் பேசும் பழக்கத்தால் இவருடைய நண்பர்களின் பெருமதிப்பைப் பெற்றார்.

இவருடைய அரிய குணங்களில் முக்கியமானது. விருந்தோம்பும் பண்பாடாகும். நண்பர்களை அடிக்கடி தமது இல்லத்திற்கு அழைத்து, இனிதாக உரையாடி, விருந்தளித்து, மகிழ்வார்கள். ராஜாஜி கரூர் வரும்போதெல்லாம் இவர்கள் வீட்டிலிருந்து உணவளித்ததை நான் அறிவேன்.

சத்காரியங்களுக்கு நன்கொடைகள் வழங்குவது இவர்களிடத்தில் அமைந்த பெரும் சிறப்புக்களில் ஒன்றாகும். சில திருப்பணிகளையும், நற்காரியங்களையும் தாமே முன்னின்று நடத்துவார்கள். கரூரில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கல்யாண பசுபதீஸ்வரர் ஆலயத்திற்கு பொது சமய சன்மார்க்க சங்கத்தினரின் முயற்சியினால், நல்லோர்களின் துணைகொண்டு 1960-ம் ஆண்டு சிறப்பாக அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடந்தது. இந்தத்திருப்பணிக்கு முதன் முதலில் நிதி உதவியளித்து, அன்பர்களோடு சேர்ந்து அரும்பணி

யாற்றிய பெருமை திரு. பெ. மு. சுப. அவர்களுக்கு உண்டு. மேலும் 1965-ம் ஆண்டு கரூரை அடுத்த நெரூர் கிராமத்தில் ஸ்ரீ சதாசிவப் பிரமேந்திராள் மகா சமாதி அடைந்த திருக்கோவிலான காசி விஸ்வநாதர் ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டும் பணியில் ஈடுபட்ட ஸ்ரீ சதாசிவானந்த சுவாமிகளுக்கு தக்க பொருளுதவி செய்ததுடன் திருப்பணி வேலைகளையும் முன்னின்று நடத்தி வைத்தார்கள். தவிர கரூர் அமராவதிக்கரையில் அமைந்துள்ள ஒத்தை வேஷ்டி ஸ்வாமிகள் என்ற மகானின் சமாதிக் கோவிலைக் கட்டுவதற்கு நிதியுதவியளித்து உதவினார்கள்.

இதுபோல் எண்ணற்ற நற்காரியங்களுக்கு உதவியளித்து வருகின்றார்கள். தமது வாழ்நாளில் அவர்கள் வழங்கிய நன்கொடைகளின் அளவை யாரோ அறிவர்! நானறிந்த சிலவற்றை மட்டும் குறிப்பிட்டேன்.

''ஊருணி நீர் நிறைந்தற்றே உலகலாம்
பேரறிவவாளன் திரு''

என்ற தமிழ்மறை நினைவுக்கு வருகிறது.

இவர்களுக்குத் துறவிகளிடம் மிகுந்த பக்தி விசுவாசம் உண்டு. காஞ்சிப் பெரியவர்களிடம் தொடர்பு கொண்டிருந்தார்கள். திருப்பராய்த்துறை ராமகிருஷ்ண தபோவனத்தலைவர் ஸ்ரீ சித்பவானந்தா அவர்களிடம் நீண்டகாலமாகத் தொடர்பு கொண்டிருப்பதுடன் அவர்கள் செய்யும் தெய்வப் பணிகளுக்கு நிதியுதவி செய்வார்கள். கரூர் அமராவதிக் கரையில் அமைக்கப்பட்ட அவரது விவேகானந்தா பள்ளிக்கு நன்கொடை அளித்தும், அதன் கட்டட நிதிக்கு ரூபாய் இரண்டு லட்சம் வசூலிக்கும் பணியில் பங்கு கொண்டும் உழைத்தார்கள். தமது முதிர்ந்த வயதிலும், பொதுச் சேவையைத் தொடர்ந்து நடத்தும் ஆர்வம் இருந்து வருவது பாராட்டத்தக்கதாகும்.

உயர்ந்த பண்பாடுகள் அமையப் பெற்றுத் தமது வாழ்நாளைப் பயனுடையதாகச் செய்து 80 ஆண்டுகள் நிறை வாழ்வு நடத்தி வரும் இப்பெரியாருக்கு எனது மனமுவந்த வாழ்த்துககளையும், வணக்கத்தையும் சமர்ப்பித்து, இன்னும் நீண்ட காலம் வாழ்ந்து மக்கள் சமுதாயத்திற்கு உதவிகரமாக இருக்க வேண்டி இறைவனைப் பிராத்திக்கிறேன். இவர்களின் மனைவியாருக்கும், தவப்புதல்வர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நற்குணங்கள்

A. வீரப்பசெட்டியார்

கரூர்.

ஆண்டவன் அருளால் 80 ஆண்டுகள் நிறைவு பெற்று விழாக் கொண்டாடும் இந்த நன்னாளில் ஆத்தங்குடி திரு. பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்களைப்பற்றி சில வார்த்தைகள் குறிப்பிட வாய்ப்பு கிடைத்ததிற்கு என் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

தான்பெற்ற இன்பம், சுகம், பாக்கியம், தனம் முதலியவை களை மற்ற எல்லோரும் அடையவேண்டும் எனக் கருதி, செயல்பட்டு இன்று பலருக்கு நிழல்தரும் ஒரு பெரிய ஆலமரமாய் விளங்குகிறார்.

மனக்கவலை ஏதும் இன்றியும், மானிடப் பிறவியை ஆன்மீக வழியில் தீவிரமாக கடைபிடித்து, தவம், விரதம் முதலியவைகளை கடைபிடித்து, திடகாத்திரத்துடன் வாழ்ந்து எல்லோரையும் காந்தம்போல் கவர்ந்துவருகிறார்.

பல நாடுகளுக்குச் சென்றும், திரவியம் சம்பாதித்தும் தனக் கென வைத்துக்கொள்ளாமல் எல்லோருக்கும் பயன்படும் வகையில் பல அறக்கட்டளைகளை ஏற்படுத்தி அதிக அளவில் தானதர்மம் செய்து வருகிறார். மிகுந்த தேசபக்தி உடையவர்.

வருஷத்தில் பலமுறை காந்தி ஜயந்தி, ராஜாஜி ஜெயந்தி போன்ற நாட்களில் அறுசுவையுடன் பல விருந்துகளை ஏற்படுத்தி சுற்றத்தார்களையும் நண்பர்களையும் அழைத்து மகிழ்வித்து வருவதும் ஒரு நல்ல ஏற்பாடாகும்.

யாரிடமும் தயவோ, யாசகமோ கேளாதவர். இப்பேர்ப்பட்ட உயர் குணங்களை உடைய ஆத்தங்குடி உயர்திரு. பெ. மு. சுப. செட்டி யார் அவர்கள் மேலும் நூறாண்டுகாலம் ஆரோக்கியமாகவும், சந்தோசமாகவும் வாழ்ந்து மக்களுக்கும், சுற்றத்தார்களுக்கும் உதவி புரிந்துவர ஆண்டவனை மனமார பிரார்த்திக்கிறேன்.

நல்ல தம்பதியர்

ம. கோவிந்தராஜ்
கரூர்.

நமது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய அன்பர் பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்கள் தமது எண்பதாவது ஆண்டு நிரம்பப் பெற்றிருக்கிறார்கள் என்ற செய்தி அவரோடு நெருங்கிப் பழகிய பெருமக்களுக்குப் பெருமகிழ்வூட்டும். வாழ் நாள் எல்லாம் தெய்வத் தொண்டு, தேசத் தொண்டு என்றே வாழ்ந்த பெரு மகன் அவர், கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக அவரோடு நெருங்கிப் பழகிய நான், அவர்களிடம் சிறந்து விளங்கும் தொண்டு உள்ளம், தியாக உள்ளம் நமக்கு இல்லையே என்று ஏங்கிய நாட்கள் பல.

அன்பர் பெ. மு சுப அவர்கள் மிக உயர்ந்த பண்புடை யவர். பொது நலம் கருதி அவர்களை அணுகினல் பெரும் உவப் போடு விருந்து படைத்துப் பொருளும் கொடுத்து ஊக்குவிப்பார் தனது வாழ்நாளில் எந்த எந்த வகைத் தருமங்கள் செய்ய வேண் டும் என்று பட்டியல் போட்டுச் செய்துவரும் பேரன்பர். காந்தீ யத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர்.

எங்கள் பாலர் களி கூடத்தில் ஆண்டு தோறும் ராஜாஜியினு டைய பிறந்த நாள் சிறப்பாகக் கொண்டாடிக் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கி வருகின்றார்கள். மகாத்மா காந்தியடிகள் ஒரு சம யம், என்னைப் பற்றி நாடு பெருமை கொள்வதாக அறிகிறேன். ஆனல் பெருமைக்குக் காரணம் யார் என்பதை நாடு அறியத் தவறிவிட்டது. நான் ஒருவன் தான் அறிவேன். கஸ்தூரிபாயின் பொறுமையும் தொண்டு உள்ளமும் தான் எனது சிறப்புக்கு உத வியது, என்று சொன்னார்கள். அது போல நமது அன்பர் பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்கள் சிறப்புக்குக் காரணம் அவர் களது துணைவியார் வள்ளியம்மை ஆச்சி என்றால் அது மிகையா காது. தன் கணவர்பால் கொண்ட அன்பின் காரணமாக எந்த நற்செயலுக்கும் உறுதுணையாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இத்தகைய தம்பதிகளின் எண்பது ஆண்டு விழா, சிறப்பு விழாவாக நடைபெற வேண்டும். தம்பதிகள் நோயற்ற வாழ்வு வாழ வேண் டும் என்று பெரிய கோவில் கொண்டு எழுந்தருளியுள்ள பெருமான் பசுபதியைப் பிரார்த்திக்கின்றேன்.

நட்பின் ஆற்றல்

C. அண்ணுமலை.
கொத்தமங்கலம்.

நட்பு என்பது அன்பு பாராட்டி, ஆறுதல் அளித்து, அதர்ம பாகில் கண்டித்து, அல்லல்வரின் அகற்றித் துணை நிற்பதாகும். பொதுவாகத் தாயாகி, தந்தையாகி, குருவாகி, பிள்ளையாகி, சுற்றமாகித் துணையாய் நிற்பதே நட்பின் இலக்கணம். அகம் நொந்து முகம் மலர நடப்பது அல்ல நட்பு. நண்பன் நல்லன அல்லாத தீயன செயின் கண்டித்துத் திருத்த வேண்டும். அவன் மணம் நோகுமே என்று எண்ணி அவன் செயலுக்கு ஊக்கம் கொடுத்தல் ஆகாது. தன் அறிவுரை கசக்கும் எனினும், அவன் தன்னைப் பழிப்பானுயினும் அஞ்சாது செயல் பட வேண்டும். இத்தகைய திறம் உண்டு இப்பெரியவரிடம்.

இவர் ஒருவனை நண்பராக ஏற்றபின் அவனிடம் குறை காண மாட்டார். குற்றம் தோன்றின் இடித்துரைப்பார். அவன் திருந்தவில்லை எனின் அறியாமையால் செய்துவிட்டான் எனவாளா இருப்பார். நெல்லுக்கும் உமியுண்டு, நீருக்கும் நுரையுண்டு, பூவிற்கும் புல்லிதல் உண்டு என்று எண்ணி நண்பர் தம் பிழை பொறுப்பார். தன் நண்பர் எத்துணை புகழுடையவரேனும் அவர் செய்தது தவறெனத் தோன்றின் தயங்கார். அவர் முன் இனியனபேசி, அவர் பின் புறங்கூறித்திரியார். அவர் அகமும், முகமும் கோணினும் பாரார். நக்கீரர் போல் தனக்குத் தோன்றியதை அவர் முன்னே கூறிடுவார்.

மேலும் இவரது நட்பு தற்காலத்தில் ஓரிரு நிமிடங்கள் பழகிய வரை யெல்லாம் நண்பராகக் கூறுகிறேமே! அவ்வாறல்ல இன்பம் வருங்கால் இணை பிரியாதிருந்து, துன்பம் வருங்கால் கைவிடுவாரது நட்பாகவும் இருக்காது. நண்பருக்குத் துன்பம் வரினும் அஞ்சாது தன்னலம் பேணாது துணை நிற்பார். நண்பருக்குச் செய்யும் உதவிகளும் வலதுகை கொடுப்பது இடது கைக்குத் தெரியாது செய்வார். சினத்தில் சிறந்தவராயினும், தன் நண்பர் தனக்குத் தீங்கு எண்ணுவதாக அயலார் கூறின், அதனைச் சிரித்த முகத்துடன் ஏற்றுக் கொள்வார். இல்லையேல் 'யார் தான் நல்லவர் உலகம் அப்படித்தான்' என்று சமாதானம் கூறுவார்.

இவருக்கும் ராஜதந்திரி ராஜகோபாலச்சாரிக்கும் நெருங்கிய நட்புண்டு. இவர் ராஜாஜியிடமிருந்து பல அறிவுரைகள் பெற்றதும் அவரைத்தன் குருவாக ஏற்றுக் கொண்டார். ஆனல் ராஜாஜி சீடனுக ஏற்றுக் கொள்ளாது. நண்பனுகவே பாவித்தார். இருவரும் டில்லியில் இருந்த சமயம் ஒருவர் இரண்டு வாழைப் பழம் ராஜாஜிக்கு கொடுக்க அவர் ஒன்றை உண்டு, மற்றொன்றை இவருக்காக வைத்திருந்து, இவர் வந்ததும் கொடுத்தாரெனில் இவர்கள் நட்பு எத்துனை ஆழ்ந்ததாக இருக்க வேண்டும். மற்ருெரு சமயம் குற்ருலத்தில் தான் படுத்திருந்த படுக்கையைச் சுற்ருது எழுந்து வெளியே சென்று விட்டதால், ராஜாஜி படுக்கையைச் சுற்றி ஒழித்து வைத்து விட்டார். இரவு படுக்கும் சமயம் படுக்கையைக் கொண்டு வந்து கொடுத்து பொறுப்புணர்ச்சியைப் போதித்ததுடன், தன் காலால் தான் நிற்க வேண்டும், தன் கையே தனக்குதவி என்னும் அறிவுரைகளும் புகட்டினுர்.

கலைஞர், கவிஞர், புலவர், கற்றவர், கல்லாதவர், செல்வந்தர் ஏழை, அரசியல்வாதி, சமயவாதி, சமூகசீர்திருத்தவாதி, தலைவர், தொண்டர் இவர் போன்ற பலவகைப் பட்டவரும் இவருக்கு நண்பராவார்கள்

டி. கே. சிதம்பரநாத முதலியார், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர், கம்யூனிஸ்ட் ப. ஜீவானந்தம், தமிழ்க் கடல் ராய. சொக்கலிங்கம் செட்டியார், சொ. முருகப்பா, கே. பி சுந்தரப்பாள், சி.வி.சிடி., அனைவராலும் ஐயா என்று அழைக்கப் பட்ட க. வீ. ராமநாதன் செட்டியார், தெ. பொ. மீ. போன்ற மறைந்த நண்பர்களும், சா. கணேசன், நீதிபதி மு.மு. இஸ்மாயில், சதாசிவம், G K. சுந்தரம், எம். எஸ். சுப்புலெட்சுமி, மகராஜன், ஏ. கே. செட்டியார், தினமணி சிவராமன், க.கு. கோதண்டராமன் கம்பராமன் போன்ற பல நண்பர்களும் உண்டு. இவர் நண்பர்களை கூறப்புகின் அடுக்கிக் கொண்டே போகலாம்.

'உன் நண்பர்கள் யாரென்று சொல், நீ யாரென்று சொல்லுகிறேன்' என்னும் கருத்துடைய ஆங்கிலப் பழமொழி ஒன்று உண்டு. இவர் நண்பர்களைக் கொண்டு இப் பெரியார் எத்துனை பெரியவர் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் அறியலாம். பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவதுபோல் சேர்க்கை சிறந்தால் நாமும் சிறப்போம்.

வாழ்க்கையும் வள்ளுவமும்

அ. திலகவதி
கொத்தமங்கலம்

மனைவி மக்களோடு வாழ்பவருக்குச் சில தலையாய கடமைகள் உண்டு. அக்கடமைகளைத் தெய்வப்புலவர் அழகாகத் தேர்ந்தெடுத்து ஐந்து பகுதிகளாகப் பிரித்துச் சிறிய குறட்பாவினுள் புகுத்தியுள்ளார். ''தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான்'' ஆகிய ஐவரையும் புரத்தலே இல்லறத்தார் தம் தலையாய கடமை என்று புகழ்கிறார். இக்கடமைகளுள் நடிவிலுள்ள மூன்றையும் வழுவாது சிறப்பாகக் கடைப்பிடித்து வருபவர்கள் எண்பதாண்டு கண்ட இப் பெரியார்கள்.

சிறுவயதில் கடவுள் இல்லை என்று சொன்னவர்தான். கல்லுப் பிள்ளையாரைக் குப்புறப்போட்டுத் துணி துவையுங்கள் என்றும் சொன்னவர்தான். ஆயினும் அக்காலத்தே தான் வணங்கும் வயல் நாச்சி அம்மனை மறந்தவரில்லை. பெரியநாயகியிடம் அளவிலா நம்பிக்கை. உடல்நலம் சரியில்லை எனின் வைத்தியரை நம்பார். அன்னையையே நம்பி அவள் அடிக்கலம் இறைஞ்சுவார். அன்னைக்குத் திருக்கோயில் எடுக்க முனைந்தார். ஆரம்பித்து சிறிது நாளிலே இரண்டாவது உலக மகாயுத்தம் ஆரம்பித்ததினால் மலேசியாவிலிருந்து பொருள் வரத்து நின்று விட்டது. முன் வைத்த காலைப் பின் வைக்காதவர் ஆதலால், வீட்டிலுள்ள வைரக்கற்களால் ஆகிய நகைகளை விற்று வெள்ளைக்கல்லால் வரி எடுத்துக் கோயில் திருப்பணி செய்தார்

மலேயாவில் தோட்டத் தொழிலாளருக்கு ஆங்கிலேயருக்கு எதிராக உணவு உடை அளித்ததினால் நாடு கடத்த ஏற்பாடு நடப்பது அறிந்து உடுத்திய உடையுடன் கப்பல் ஏறித் தாயகம் வந்தார். அதனால் பொருள் தேடக் கநூர் வந்து வாழ்ந்து வந்தார். கதர் புத்தாடையே அணியும் இவர் குடும்பத்தார் கநூரில் ஒரு தீபாவளியன்று கோயில் சென்றனர். அன்று தெய்வச் சிலைகள் யாவும் என்றும் போல் இருந்தன. புத்தாடை புனையவில்லை. மனம் வருந்தி நமக்குத்தான் புத்தாடையா? இறைவனுக்கில்லையா? என்று எண்ணி அன்றிலிருந்து வருடந்தோறும் அங்கும், இன்னும் பல கோயில்கட்கும் புத்தாடை வழங்கி வருகிறார். பல கோயில்கட்கும் தன்னால் இயன்ற அளவு பொருளுதவி செய்து வருகிறார். இவரைச் சாமி என்றே அழைப்பாரும் உண்டு.

''விருந்தோம்பல் வேள்வி செய்தலினும் சிறந்தது. விருந்தோம்புவான் நிலத்திற்கு வித்துமிடல் வேண்டாம்'' என்பார் வள்ளுவர் இத் தம்பதியர் தம் வாழ்வில் மிகப் பெரிதாகப் போற்றுவது விருந்தே. வாழ்விலும் தாழ்விலும் விழாக்கள், பண்டிகைகளிலும் இன்னர், இனையர், எமர், பிறர், இனியர், இன்னுர், தக்கார், தகவிலர் என்னுது எல்லோருக்கும் உணவளிப்பார்கள். தண்ணீர் பந்தல் வைத்து நீர்மோர், பானக்கமும் வழங்குவார்கள். கஞ்சி காய்ச்சியும் ஊற்றுவார்கள். எத்தனைபேர் முன் கூட்டி அறிவிப்பின்றி வரினும் மனம் கோணுது நொடிப் பொழுதில் உணவளிப்பார்கள். இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம் என்று திணறும்படி ஊட்டி மகிழ்வார்கள்.

'ஒக்கலின்' பொருள் சுற்றம், உறவு, கிளை என்பதாகும். இவர் விருந்தினின்றும் சிறிது வேறுபட்டவர் ஆவர். ஆலமரத்தின் கிளைகளும் விழுதுகளும் போல் விளங்குபவரே சுற்றத்தார். அறநெறி நீதி புகட்டும் பன்னூலாரும் சுற்றம் பேணலைச் சிறப்பாகக் கடைப் பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றனர், ஏன்? சுற்றம் காணின் சூழும் துன்பம்போம். பற்றற்ற கண்ணும் பழமை பராட்டுபவர் சுற்றத்தினரே.

எண்பது கண்ட இப்பெரியார் சுற்றத்தாரால் சூழப்பட்டு வாழ்பவரே. மேலும் சுற்றத்தாருக்குத் தம்மால் இயன்றளவு பொருளுதவி வாயுதவி, கையுதவியும் செய்ய வல்லார். நலிந்த சுற்றத்தாருக்கும், கணவன் இல்லாக் கைம்பெண்டிர்க்கும், கணவன் இருந்தும் பொருளீட்ட வலுவில்லாதவர்களுக்கும் அவர்களிடமிருந்து சிறிது பொருளைக் கொண்டு அதனைப் பன்மடங்காகப் பெருக்கித் திங்கள் தோறும் அன்னுர்க்கு வேண்டிய அளவு கொடுத்து வருவார். மேலும் சுற்றத்தார் மற்றவர்கள் திருமணம் கல்வி என்று வந்து கேட்கின் அவர்கட்கும் ஒல்லும் வகையில் அளிப்பார்கள்.

பொய்யா மொழிப்புலவர் புகன்ற ஐந்தில் மூன்றினை மிகச் சிறப்பாகக் கடைப்பிடிப்பினும் முதலும் கடையுமாக உள்ள தென்புலத்தார், தான் என்ற இரண்டினையும் சிறப்பாகக் கடைப் பிடிப்பவர். இவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து இவர்தம் கடமைகளையும் செவ்வனே செய்ய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

பெரியவர் திரு. பெ. மு. சுப.

தி. சொக்கலிங்கம்
கரூர்

பெரியவர் திரு. பெ. மு. சுப, அவர்களை எனக்குப் பல ஆண்டு களாகத் தெரியும். அவர்கள் கரூர் வந்த நாளிலிருந்து (சுமார் 30 ஆண்டுகள் இருக்கலாம், என நினைக்கின்றேன்) எங்கள் குடும்பத் துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார்கள்.

அதற்கு ஒரு சிறப்பான காரணமும் உண்டு, அவர்களுக்குக் கடவுள் பக்தி மிக அதிகம். நாங்கள் திருப்பணி செய்துள்ள வெண்ணெய்மலை ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலிற்கு அடிக்கடி அவர்கள் தெரிசனம் செய்ய வருவார்கள். எங்கள் தந்தையார் அவர்கள் முருகனுக்குச் செய்யும் அலங்காரங்களைப் பார்த்து; பக்தி மேலிட்டு, தந்தையார் அவர்களுடன் பாராட்டி உரையாடுவதை அப்பொழுதிருந்தே கவனித்துள்ளேன். எங்கள் தந்தையார் காலத்திற்குப் பிறகும், கோவில் விழாக்கள் அனைத்திற்கும் வந்து கோவில் நிர்வாகத்தை மேன்மேலும் சிறப்புறச் செய்ய, அவ்வப்பொழுது ஆலோசனைகள் கூறுவார்கள். குறைகள் இருந்தாலும் அதை எடுத்துக் கூறச் சிறிதும் தயங்க மாட்டார்கள். அது அவர்களின் நல்ல குணங்களில் ஒன்று.

நகரத்தார்களுக்கே உரியது உபசரணைக் குணம் என்றாலும் திரு. சுப. அவர்களிடத்தில் அது விசேஷமாக அமைந்துள்ளது. யார் எப்பொழுது அவர்கள் வீட்டிற்குச் சென்றாலும் சாப்பிடாமல் விட மாட்டார்கள். தானே முன்னின்று உபசரிப்பதில் உணவு அவிப்பதில் அவர்களுக்கு அலாதிப் பிரியம்.

நல்ல காரியங்களுக்குக் கொடுப்பதிலும் அவர்களே முன் வந்து தன் வீட்டிற்கு வந்து கேட்க வேண்டும் என்று நினைத்துக் காத்திருக்க மாட்டார்கள். இது என் சொந்த அனுபவத்தில் பார்த்தது. கரூரில் கல்லூரி கட்ட நினைத்து ஒரு குழு அமைத்தார்கள். ஒரு நாள் காலை என் இல்லத்திற்கு சுப. அவர்கள் வந்து ''என்னய்யா நீங்கள் தானே குழுவின் பொக்கிஷதார், என் பணமும் அதில் சேர வேண்டுமய்யா இந்தாருங்கள்'' என்று ஒரு நல்ல தொகையைக் கொடுத்தது என்னை ஆச்சரியத்தில் மூழ்கடித்தது.

இப்படி நல்ல பண்புகள் நிறைந்த அவர்களுக்குச் சதாபிஷேகம் நடைபெறுவதறிந்து ரொம்ப சந்தோஷப்படுகின்றேன். திரு. சுப.

அவர்கள் மனைவி மக்கள், மாப்பிள்ளை எல்லோருமே அடக்கமான வர்கள். அவர்கள் குடும்பமும் ஆல் போல் தழைத்து, மென்மேலும் சிறப்புடனும், புகழுடனும் விளங்க ஸ்ரீ பால சுப்பிரமணியசாமி திருவருளை நினைந்து பிரார்த்திக்கின்றேன்.

அனுபவப்பழம்

தி. முத்துக்கருப்பன்

கரூர்

அய்யா ஒரு அனுபவப்பழம். அறிவுக்களஞ்சியம். ஒரு சில நிமிடங்கள் அவர்களுடன் பேசினால் போதும், நாம் எத்தனையோ நூல்களைப் படித்தறியக் கூடிய விஷயங்கள் நமக்கு விளங்கிவிடும். (தெளிவாகும்.)

நான் எத்தனையோ முறை உணர்ந்திருக்கிறேன். சிறியோனாகிய எனக்கு விடை கிடைக்காத கேள்விக் கெல்லாம், அனுபவ பூர்வமாக விடை கிடைக்கும், அய்யா அவர்களின் பேச்சில். ஏதோ புகழ்ச்சிக் காக உயர்வாக எழுத வேண்டும், என்று எழுதியவை அல்ல, இவை. நான் நடை முறையில் கண்ட உண்மை.

எனக்குத் தெரிந்தவரை அய்யா அவர்கள் ஓர் உயர்ந்தமனிதர். சிறந்த தேச பக்தர். உயர்ந்த காந்தியவாதி. இராஜாஜியிடம் ஈடு பாடு அதிகம். விருந்தோம்பலில் விருப்பம் மிகுதி. தமிழும், இலக்கி யமும் இவருக்கு குழந்தை. இறையுணர்வு நிறைந்த பண்பாளர். எளிமையான தோற்றமும் நிறைவான பேச்சும் உடையவர்கள் அய்யாதாம் அறிந்தது, பிறரும் அறிய வேண்டும் என்ற பொது நோக்குடையவர். வழிபாடு ஆனாலும் ஆடம்பரத்திற்காகச் செய்யாமல் ஆத்ம திருப்திக்காகவே செய்பவர்.

ஆயிரம் பிறை கண்ட அய்யா அவர்களும், அன்புக் குடும்பத்தாரும் நிறைவுடன் நீண்டகாயம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஆத்தங்குடி பெ. மு. சுப.

க. அரு, க. காடப்ப செட்டியார்

ஆத்தங்குடி

50 ஆண்டுகளுக்கு முன் நான் ஈப்போவில் இருந்தேன் கிள்ளானுக்கு எங்கள் வேலையாக போயிருந்தோம். அங்கு சுப்பையா செட்டியார் இருந்தார்கள். எங்கள் வேலை எளிதாக முடிவதற்கு நிரம்பவும் துணையாக இருந்தார்கள். அன்று முதல் அவர்களுடன் பழகும் சந்தர்ப்பங்கள் பலப்பல இருந்தது. அன்று முதல் இன்று வரை அவர்களிடம் மதிப்பும் இருக்கிறது.

அந்த நாளைய காங்கிரஸ் அபிமானி. காங்கிரஸ் மகாநாட்டிற்குப் போய் வந்தவர்கள். மேடை ஏறிப் பேசமாட்டார்கள். ஆனால் நினைத்ததை அழுத்தமாகச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். பெரியவர்-சின்னவர், வேண்டியவர்-வேண்டாதவர், என்று இல்லாமல் யாரைப் பற்றியும் அவர்கள் நினைப்பதை துணிவாகச் சொல்லி விடுவார்கள்.

காந்திஜீயைப் பற்றி, நேருஜீயைப் பற்றி உயர்வாகப் பேசுவார்கள். ராஜாஜீ என்றால் அறிவின் சின்னம் என்று நாம் எல்லோரும் நினைப்போம். இவர்கள் ராஜாஜீயை இவர்களின் முன்னோர்கள் போலவே நினைத்துத் தன் மகனுக்கு அவர்கள் பெயரை ராஜகோபால்ன் என்று இட்டுக் கூப்பிட்டு வருகிறார்கள். ராஜாஜீயைத் தன் வீட்டிற்கும் தன் பிரிய தெய்வமாகிய வயல்நாச்சி அம்மன் கோயிலுக்கும் அழைத்து வந்து உபசரித்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

ஒருநாள் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி வீட்டிற்கு திரு. அ. லெ. நடராஜனுடன் நான் சென்றிருந்தேன். அங்கு ரசிகமணி டி.கே.சி. அவர்களும், ராஜாஜியும், மேயர் வேங்கடசாமி நாயுடுவும் பேசிக் கொண்டிருந்தார்கள். என்னைக் கூட்டிச் சென்ற நடராஜன் என்னை இன்னார் என்று சொல்ல நினைத்து, ''ஆத்தங்குடி...... என்று சொன்னதும், ராஜாஜீ அவர்கள், சுப்பையா செட்டியார் சௌக்கியமா? அவர் அனுப்பிவைத்த ஊறுகாய் வந்தது. நன்றாக இருந்தது'' என்று சொல்லுங்கள் என்று சொன்னார்கள். ரசிகமணியோ ஆத்தன் குடியில் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளைக்குப் பாராட்டுச் செய்ததை ராஜாஜீடம் விபரமாகச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்கள்.

மூத்தவர் முத்தையா என்னும் பெரிச்சியப்பச் செட்டியார் இவர்கள் மகன் லெட்சுமணன். இளையவர் சுப்பையா செட்டியார் இவர்கள் மகன் லெட்சுமணன், இராஜகோபால் இருவர். இக் குடும்பத்தினர் முத்துப்பட்டிணத்தில் இருந்தவர்கள் இப்பொழுது ஆத்தன்குடியில் இருக்கிறார்கள். எல்லோரும் மனம் இணைந்து, வாழும் நல்ல குடும்பம்!

மூத்தவர் முத்தையா செட்டியாரைத் தெய்வம் என நினைத்து அவர்கள் படத்தைப் பூசை அறையில் வைத்துச் சுப்பையா செட்டியார் வணங்கி வருகிறார்கள். அண்ணனை வாழ்க் கையில் இருக்கும் பொழுது இளையவர்கள் மதிப்பார்கள். இறந்த பிறகும் மதித்து வணங்கி வரும் சுப்பையா செட்டியாரை நாம் மதித்துப் போற்றுவோம்.

சுப்பையா செட்டியார் தொழில் நலங்கருதி ஆரம்ப நாட் களில் மலேசியாவில் கிள்ளானிலும், பிறகு சேலத்திலும், இப்பொ ழுது கரூரிலும் இருந்து வருகிறார்கள். எங்கு இருந்தாலும் அங்குள்ள பொதுக் காரியங்களில் கலந்தே இருப்பார்கள்.

தேசப்பற்று மிகுந்தவர். சமூகப்பற்றும் உடையர். இப்பகுதி யில் பிரபலமாகயிருந்த சொ. முருகப்பா; ராயா. சொ, K.V.AL. RM இராமநாதன் செட்டியார்; C.V.RM குடும்பத்தினர்!C.V.CT. வெங்கடாஜலம் செட்டியார் இவர்களுடனும் இன்னும் பலருடனும் நெருங்கிப் பழகியவர்கள். இன்னும் திரு, சா, கணேசன் அவர்களுடன் நெருக்கமாக இருப்பார்கள். யாருடன் பழகினாலும் அவர்கள் குடும்பமும் இவர்கள் குடும்பமும் ஒன்றாகவே பழகுவார்கள்.

தர்மசிந்தனை இருக்கிறது. எடுத்துக்காட்டாக- அமராவதி புதூர் மகளிர் இல்லத்தில் குழந்தைகள் இருக்கை, கம்பன் மணி மண்டபத்தில் பிள்ளையார் கோயில், வேலங்குடி வயல் நாச்சி அம்மன்கோயில் திருப்பணி இவைகளைச் சொல்லலாம். லோக நாயகி வித்யாசாலை நடந்த பொழுது அதில் சிறப்பாகப் பங்கு கொண்டிருந்தார்கள்.

ஆத்தன் குடியில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைக்குப் பொன் னாடை போர்த்திச் சிறப்பாகப் பாராட்டு விழாச் செய்த அவ்வரலாற்று நிகழ்ச்சியில் பங்கு கொண்டவர்கள்.

எங்கும் இலக்கியக் கூட்டங்களில் காணலாம். அங்கு கேட்டுக் கொண்டிருப்பார்கள். இதேபோல உணவு பரிமாறும் இடங்களிலும் காணலாம்' அங்கு உபசரித்துக் கொண்டிருப்பார்கள். இதிலிருந்து, கற்றலில் கேட்டலே அறிவு என்றும், உண்பதைக் காட்டிலும் உண்பிப்பதே சிறப்பு என்றும் தெளிந்தார் போலும் என்று நினைக்கின்றேன்.

ஆண்டு தோறும் வயல் நாச்சி அம்மனுக்கு நடைபெறும் ஏழூர் செவ்வாயில் தேர்த் திருவிழா அன்று தண்ணீர், மோர், பானகம், கடலை, பிரசாதம் வழங்குவார்கள். அந்த அம்பாளிடம் உள்ள பக்தி விசுவாசத்தால் இவர்களின் 60-ஆம் ஆண்டு நிறைவு விழாவையும், ஆண்டு தோறும் அவர் தம் ஆண்டு நிறைவையும் அங்கேயே கொண்டாடுவார்கள். சமீபத்தில் அந்தக் கோயிலில் இராஜகோபுரத்தில் வர்ணம் வைத்துச் சிறப்பான யாகசாலை பூசைகளுடன் குட முழுக்கு விழா நிரம்பச் சிறப்புறச் செய்து மகிழ்ந்தார்கள்.

காந்திஜீயைப் பின்பற்றி உடைகளைக் குறைத்தவர். பலர் அதில் இந்த சுப்பையா செட்டியார், சா. கனேசன், பள்ளத்தூர் சுப. அருணசலம் நமக்குத் தெரிந்தவர்கள்.

ஓர் அளவான உயரம், சற்று கனத்த சரீரம், நல்ல சிவந்த நிறம், சட்டை அணியாத உடம்பு, கதரே அணியும் வழக்கம், கேட்கும் கருவியும் கூடவே இருக்கும். இவைதான் சுப்பையா செட்டியாரின் தோற்றம்.

திரு வாளர் சுப்பையா செட்டியர் அவர்களும், திருமதி வள்ளியம்மை ஆச்சி அவர்களும், திலகவதி, லெட்சுமணன், இராசகோபால் குடும்பத்தின அனைவரும் எல்லா நலங்களையும் நிறைவாகப் பெற்றுப் பல்வாண்டு வாழ்வார்களாக.

பக்தர் சுப.

கா. அரு. பழ. அருணாசலம்

ஆத்தன்குடி

ஸ்ரீ பெ. மு. சுப்பையா செட்டியாரவர்கள் முன்பு தெய்வம் இல்லையென்று உறுதியாகச் சொன்னார்கள். பிறகு மனம் மாறுதல்கள் அடைந்து கடவுள் பக்திவளர ஆரம்பித்து நம்பிக்கையுமாக வந்து இப்பொழுது தன் குல தெய்வமான வேலங்குடி அம்மனை மட்டும் உறுதியாக வணங்கிவரும் அளவுக்கு மாறிவிட்டதை நினைக்கையில் தான் ஆச்சர்யம் உண்டாகிறது. வருஷத்தில் 10 நாட்கள் மருந்து முதலியன ஏதும் சாப்பிடாமல் விரதமாக வேலங்குடியில் தங்கி இருந்து அம்பாளை வணங்கி வருகிறார்கள். உறுதியான தெய்வ வழிபாட்டை நினைக்கையில் அவர்களை மறக்க இயலவில்லை.

காரைக்குடியில் கம்பன் மணி மண்டபத்தில் வருஷம் தோறும் நடந்துவரும் கம்பன் விழாவில் 4 நாட்களும் கடவுள் பக்தியுடன் கடமை உணர்வோடு உறுதியாகச் சாப்பாட்டுத் தொண்டைச் செய்து வருகிறதை நினைக்கையில் சுப.வின் உறுதியான கொள்கையை மறக்காமல் இருக்க முடியவில்லை.

ஆத்தன்குடியில் நகரத்தார்கள் சம்பந்தப்பட்ட எந்தத் தகராறுகள் வந்தாலும் உடையவர்களை நேரில் கண்டு ஆவனசெய்து சமரசம் செய்து வைப்பார்கள். அதற்காக எத்தனை நாள் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் முயற்சிசெய்து உறுதியாக இருந்து வெற்றியும் காண்பார்கள். நற்குணங்கள் நிறைந்த அவர்கள் பல்லாண்டுகள் வாழப் பிரார்த்தித்து வணங்குகின்றேன்.

உறுதியும், ஒழுக்கமும் நிறைந்த பண்பாளர்

நா. இராமநாதன்

ஆ. முத்துப்பட்டணம்

ஆத்தன்குடி - முத்துப்பட்டணம் என்று சொன்னால் தமிழ்ப்பற்று, நாட்டுப்பற்று, இசைப்பற்று நிறைந்த அன்பர்களின் ஞாபகம் வராமல் இருக்க முடியாது. அந்த நல்லவர்களில் தேசத் தொண்டினையும், மூடநம்பிக்கைகளைக் கைவிட வேண்டுமென்ற குறிக்கோளையும் கொண்டு, ஆன்மீகத் துறையில் நம்பிக்கைவைத்து,

அறுபதாம் ஆண்டு நிறைவு விழா எய்தி, இப்பொழுது எண்பதாம் ஆண்டு நிறைவு பெறுகின்ற பெரியவர் பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்கள் முதன்மையாகத் திகழ்கின்றார்கள்.

சிறிய வயது முதற்கொண்டு காந்தியத்தில் நம்பிக்கைவைத்து, சீர்திருத்தக் காரியங்களில் ஈடுபட்டு அதன் செயலாக ஆ. முத்துப்பட்டினத்தில் ஸ்ரீ லோக நாயகி வித்தியாசாலை என்ற கல்விச்சாலையை சுப. அவர்களின் பெ. மு. குடும்பத்தாரும்; ராம. அழ. குடும்பத்தாரும் நிறுவி, நீண்டகாலம் நடத்தினர்கள். எங்கள் குடும்பத்தில் நடத்தி வந்த ஸ்ரீ கலைமகள் வித்தியாசாலையும் அதோடு இணைத்து சுப. அவர்களின் முயற்சியால் நல்லாசிரியர்களைக் கொண்டு பல ஆண்டுகள் நடத்திேனும். ஸ்ரீ லோக நாயகி கலைமகள் வித்தியா சாலையின் 14- வது ஆண்டு விழா 12-5-1943 ஆம் தேதி கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் தலைமையில் மிகச்சிறப்பாக நடத்தப் பெற்றது.

அந்த நல்ல நாளில் தான் ஆ. முத்துப்பட்டணத்தில் அண்ணுமலை அரசர் அவர்கள் தலைமையில் கவிமணி அவர் களுக்குப் பொன்னுடை அணிவிக்கப் பெற்றது. சென்னையில் அல் லது காரைக்குடியில் நடக்க வேண்டிய கவிமணி அவர்களின் பொன்னுடை போர்த்தும் விழா சுப. அவர்களின் உறுதி நிறைந்த முயற்சியால்தான் ஆத்தன்குடி — முத்துப்பட்டினத்தில் நடந்தது என்று சொன்னல் மிகையாகாது.

ஆன்மீகத் துறையில் முதலில் அவர்கள் வயல்நாச்சி அம்மன் கோவில் திருப்பணி செய்து, இல்லமும் அமைத்து கும்பாபிஷேகம் செய்தது பெரும் காவியம். அதேபோல் சமீபத்தில் இராஜகோபுரம், மற்றும் வேலைகள் பார்த்து மேற்படி அம்மன் கோவில் குடமுழுக்கு செய்வித்தார்கள். அது அவர்கள் பொதுக் குடும்ப காரியம் என்று லும் சுப. அவர்களின் சிரத்தையும், செயல் பாடுந்தான் சிறப்புக் குக்காரணம்.

ஒரு மனிதனின் வாழ்க்கை வளம் பெற வேண்டுமானல் அவனுடைய பொருளாதாரம் வலுவாக இருக்க வேண்டும். நல்ல வழியிலும் திரட்ட வேண்டும். அதைப் பேணிக் காப்பாற்றவும் வேண்டும். அடுத்து நல்ல காரியங்களில் செலவுகள் செய்ய வேண்டும். அதற்கு எடுத்துக் காட்டாக நம் சுப. அவர்கள் தர்ம சிந்தனையுடன் பல நல்ல காரியங்களுக்கு உதவும் மனப்பாங்கு உள்ளவர்கள். நல்லன நாடும் ஒழுக்க சீலர்.

மூதறிஞர் ராஜாஜி அவர்களிடமும் ரசிகமணி, டி. கே. சி. அவர்களிடமும் ஆழ்ந்த பக்தி செலுத்தியவர்கள். ரசிகமணி அவர்களுக்கு நேரிட்ட ஒரு சோதனைபோல் சுப. அவர்களுக்கும் மனதைக் கலக்கும் ஒரு சோதனை நேர்ந்தது. ஆனால் மனதைத் திடமாக வைத்து, தெய்வ நம்பிக்கையின் பேரருளால் அதன்பின் இருமணிகளைப் பெற்று வளமான வாழ்க்கை வாழ்கிறார்கள். அவர்களுக்கு லெட்சுமணன், இராஜகோபாலன் என இருமகன்களும், தன்மூத்த பிள்ளைபோல் நினைக்கும் தமையனார் மகன் பெ. லெ. அவர்களும் உறுதுணையாக நின்று உதவுகின்றார்கள்.

இன்று தினம் எண்பது ஆண்டுகள் நிறைவு பெற்று சதாபிஷேக விழாக்காணும் திருவாளர் பெ. மு. சுப்பையா செட்டியார், வள்ளியம்மை ஆச்சி தம்பதிகள் இன்னும் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துவோமாக. எங்களைப்போல் உள்ள சிறியவர்களுக்கு அவர்கள் நல்லாசிகள் கிட்டுமாக.

வேலங்குடி சுனா பனா அவர்கள்

ரா. தண்ணீர்மலை

ஆ. முத்துப்பட்டணம்

''வேலங்குடி'' ''சுனா பனா'' என்று அழைக்கப்படும் ஆத்தங்குடி திரு. பெ. மு. சுப்பையா செட்டியாரவர்கள் மூதறிஞர் ராஜாஜியின் இனிய நண்பர். கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன் செட்டியாரவர்களும் இவர்களுடைய பெரும் நண்பர். அவர்களுடைய கம்பன் மணி மண்டபத்திற்கு இலட்சசக்கணக்கான நிதி திரட்டிக் கொடுத்ததோடு அங்கு இவர்கள் பெருஞ்செலவில் பிள்ளையார் கோவில் ஒன்றும் கட்டிக் கொடுத்து குடமுழுக்கும் செய்வித்தார்கள்.

கரூரில் வருமானங்களும், சம்பாத்தியங்களும் நன்கிருந்த காலத்தில் செட்டிநாட்டில் நலிவடைந்தவர்களுக்கு திருமணங்களுக்கும், படிப்பிற்கும் இல்லையென்னாது வாரி வழங்கினார்கள். தனக்கு மிஞ்சித்தானே தான தர்மம்; வருமானம் குறைந்த காலை அவற்றைக் குறைத்துக் கொண்டார்கள்.

வேலங்குடி கோயிலில் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள். அது இவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த பொதுக்கோயில் என்றாலும் அதில்

மிகுந்த அக்கறையும், ஈடுபாடும் கொண்டு இரண்டு தடவை குட முழுக்கும், திருப்பணிகளும் செய்வதற்கு இவர்களே முதலாக இருந்தார்கள்.

அங்கு இவர்கள் விடுதியும், கீற்றுக் கொட்டகையும் உண்டு. தென்னஞ்சோலையும், மரக்காவும் மனதிற்கு இதமூட்டுவன. அங்கே திருவிழாக் காலங்களிலும், வேனிற் காலங்களிலும், குறைந்தது ஆண்டிற்குப் பத்துப் பதினைந்து நாட்கள் குடும்பத்தினருடன் தங்குவார்கள். இவர்களுடைய பெரும், பெரும் நண்பர்களெல்லாம் அங்குவந்து வயல்நாச்சி அம்மனைத் தெரிசித்து, அறுசுவையுண்டு அளவளாவுவது உண்டு. அவர்களில் திரு. சொ. முருகப்பா, தமிழ்க் கடல், ராய. சொ. போன்றவர்கள் இளமைக் காலத்தில் அடிக்கடி அங்குவந்து அளவளாவியவர்கள்.

இளமைக் காலத்தில் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்ட இவர்களை வயல்நாச்சி அம்மனின் திருவருள்தான் பக்தி வழிக்கு இழுத்துச் சென்றிருக்க வேண்டும். அண்மையில் நடந்த குடமுழுக்கு சமயம் பூசாரி வரத்தாமதமானபோது ஐயா அவர்களே கற்பூரம் காட்டியது அங்கிருந்த எங்கட்கெல்லாம் மெய்சிலிர்க்க வைத்தது.

இவர்கள் விருந்து உபசரிக்கும் பண்பு, கதராடை கட்டும் இயல்பு, நேர்மை முதலியன இவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியன. என்னைப் பொறுத்தவரை இவர்கள் என்பால் மிகுந்த அன்புகொண்டு எனக்கு அவ்வப்போது புத்திமதிகள் சொல்வார்கள்.

கணவரும், குழந்தைகளும் சிறந்து விளங்குகின்றார்கள் என்றால் அது தாயின் செயல்தான். அப்படிப்பட்டவர்தான் திருமதி வள்ளியம்மை ஆச்சி அவர்கள். வள்ளுவத்தின் இலக்கணத்திற்கு கொப்புடைய இல்வாழ்க்கையில் ஏற்றங்கள் கண்டு; இன்சொல்லுடன் இனிதூட்டிவிருந்தோம்பும் பண்புடையவர். பெரும் குணசெம்மலார். இவர்களின் இந்த எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவில் இவர்களின் ஆசி நம் எல்லோர்க்கும் கிடைக்கிறது. இவர்கள் குடும்பம் என்றென்றும் நன்னேக்கெய்தி நலம்பல சூழ எல்லாம் வல்ல அம்பலத் தானையும் அருள்நாயகியையும் வழிபட்டு வாழ்த்துகிறேன்.

பயன் மரம்

சி. வெ. சி கோவிந்தன் செட்டியார்
கொத்தமங்கலம்

மிக உயர்ந்த உள்ளம் பெற்றுச் சிவநெறிச் செம்மலாய் விளங்குகிற ஆத்தங்குடி திரு. பெ. மு சுப்பையா செட்டியார் அவர்களை யாரும் அறியாமல் இருக்க முடியாது. அவர்களுடன் அடியேன் நாற்பது வருட காலம் பழகும் வாய்ப்பு எல்லாம் வல்ல எம்பெருமானது திருவருலால் கிட்டியது.

வாய் பேசாது உரிமையை எடுத்துச் சொல்லத் தவிக்கின்ற மக்களையும் சிவநெறியில் ஈடுபடுத்திய அவர்களை நாங்கள் ''சுவாமி'' என்றுதான் அழைப்பதுண்டு; ''பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தாற் போல'' அவர்கள் தம்மை நாடி வருவோர்க்கு இன் சொல்லும், இன் முகமும் கூறி உபசரித்து உதவி வந்த காட்சிகள் என்னை இன்றும் மெய்சிலிர்க்கச் செய்கிறது.

''மூர்த்தி, தவம், தீர்த்தம்'' என்ற ஆன்றோர் வாக்குப்படி அவர்களுடன் திருவண்ணாமலை, வடலூர், திருப்பாப்புலியூர் போன்ற சேத்திர தரிசனங்கள் செய்து வந்த புண்ணியங்கள் இன்று கூட என் வாழ்வுக்கு வழி காட்டியாய் இருந்து துணை செய்கின்றன. அவர்களைப்பற்றி அவர்களோடு வாழ்ந்த காலத்தில் நான் எல்லாம் வல்ல சுப்பிரமணியக் கடவுளோடு இருந்ததாகவே எண்ணி இருந்து வந்திருக்கிறேன். என் வாழ்வு அநுபவங்கள் எனக்குப் பக்குவத்தை ஊட்டின அவர்களது திருவருளால் ஞானத்தைப் பெற முடியும் என நான் நிச்சியம் நம்புகிறேன்.

வாழ்க அவர்கள் திருநாமம்!
வளர்க அவர்கள் திருத்தொண்டு!

எங்கள் அண்ணன்

பெ. லெ,. சுப்ரமணியன்
ஆ. முத்துப்பட்டினம்

அண்ணன் திரு. பெ. மு. சுப அவர்களைப் பற்றிய என்னுடைய நினைவுகள் சில வற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தீவிர சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து சாமியில்லை; திருநீறு அணிந்தால் இரத்தத்தை உறிஞ்சி விடும்! கல்லுக்கு ஏன் பாலை ஊற்றுகி

றீர்கள்? அமாவாசைக்கு அய்யருக்குப் பணம் கொடுத்து தர்பணம் செய்தால் பெரியவர்களுக்குப் போய் சேருமா! இதெல்லாம் மூடநம் பிக்கை என்று சொன்னவர்கள். எப்படியோ மனம்மாற அல்லும் பக லும் அன்னை பெரிய நாயகியை அடிபணிந்து தொண்டுகள் பலப்பல செய்து இரண்டு கும்பாபிஷேகங்ளும் செய்து விட்டார்கள், வேலங் குடியில் இருந்து கொண்டு எத்தனையோ திருமணங்களையும், பஞ்சா யத்துக்களையும், வேலை வாங்கிக் கொடுத்தலையும் தலையாய கடமை யாகச் செய்து வருகிறார்கள். எனக்கும் அரியக்குடியில் C.V.CT.V அவர்களைக் கண்டு பேசி இந்தியன் வங்கியில் வேலை வாங்கித் தந் ததுடன் அவ்வப்போது வேண்டிய உதவிகள் செய்து பதவி உயர் வுக்கும் ஏற்பாடுகள் செய்தார்கள். நானும் முப்பத்தைந்து ஆண் டுகள் இந்தியன் வங்கியில் பணிபுரிந்து பல பதவிகள் பெற்று இறுதியில் கணக்குத் தணிக்கையாளராக இருந்து சென்ற ஆண்டு ஓய்வு பெற்றேன். என்னைச் சேர்த்து விட்டவர்களுக்கும் சிபாரிசு செய்தவர்களுக்கும் நல்ல பெயர் கிட்டும்படி செய்து நல்ல பெய ரோடு வைப்புத்தொகைகளையும் பெற்றுக் கொண்டு வெளிவந் தேன். மறுதினமே அண்ணன் அவர்களுக்கும் என் நன்றி அறி தலைத் தெரிவித்துக் கொண்டேன். அவர்கள் பணி மேலும் தொட ரட்டும். அன்னை பெரியநயாகி அருள் புரிவாளாக. நீடு வாழ்க.

என் அருமைச் சித்தப்பா

பெ. லெ. இலக்குமணன்.
ஆத்தங்குடி

இன்று ஆலாய் விரிந்து பரந்துள்ள எங்கள் குடும்பத்தில் நான் மூத்தபிள்ளை. ஆம் செல்லப் பிள்ளையும் கூட. நான் பிறந்த 7ஆம் நாள் முதல் என்னை வளர்த்துத் திருமணம் செய்வித்து ஆளாக்கிய பெரும்பங்கு என் சித்தப்பா அவர்களைச் சாரும். நான் பிறந்த 7 ஆம் நாள் என்பதாய் இறந்து விட்டாள். என்னைத் தூக்கித் தாயாக வளர்த்ததெல்லாம் எனது பாட்டி நாச்சம்மை ஆச்சிதான்.

சித்தப்பாவின் முதல்மனைவி சித்தி உமையாள் ஆச்சி. சித்தியும் சித்தப்பாவும் என்னைச் சொந்தப் பிள்ளையாகவே கருதி வளர்த்தார்கள் ஆனால் துர்பாக்கியமாக சித்தி உமையாள் ஆச்சி காலமாகி விட்டார்கள்.

சித்தப்பாவுக்கு இரண்டாம் தாரமாக சித்தி வள்ளி ஆச்சியைத் திருமணம் முடித்தது இன்றும் எனக்குப் பசுமையாக நினைவில் இருக்கிறது. ஆத்தங்குடியை அடுத்த சொக்கலிங்கம் புதூருக்கு பெண் பார்க்கச் சென்ற என் சித்தப்பா அவர்கள் சிறுபிள்ளையாகிய என்னையும் அழைத்துச் சென்றார்கள். பட்டினத்தார் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்த சித்தப்பா என்னையும் அருகில் அமர்த்திக் கொண்டார்கள். சித்தி எங்கள் முன் அன்னம் போல் நடை நடந்து சென்றதும், சிறுபிள்ளையான நான் பெண் நன்றாக இருக்கிறாள் என்று கூறியதும், சித்தப்பா உடனே பெண் பிடித்திருக்கிறது என்று சொல்லித் திருமணத்திற்குச் சம்மதித்ததும் இன்றும் என் நினைவிலிருந்து அகலாதுள்ளன.

சித்தப்பா ரொம்பக் கண்டிப்பானவர் மாமிசம் சாப்பிட அனுமதிக்க மாட்டார். ஆனால் அவர்களுக்கு தெரியாமல் பாட்டியிடம் வாங்கிச் சாப்பிட்டு பிறகு உண்மை தெரிந்து அவர்களது கோபத்திற்கு ஆளானதுண்டு. ஆடம்பரமாக உடையணிவதை அவர்கள் வெறுப்பார்கள். யாராவது மடிப்புக்கலையாத சலவைவேட்டி கட்டிக் கொண்டு அவர்கள் பார்வையில் பட்டாலோ, பெண்கள் சேலைக்கலரில் ரவிக்கை அணிந்து கொண்டாலோ 'அலட்டிக் கொள்ளத் தான் தெரியும், என்றுவைவார்கள்.

சித்தப்பா அவர்கள் நல்ல காங்கிரஸ்காரர் சிறுவயதிலேயே எனக்குத் தேசிய உணர்வை ஊட்டினார்கள். நேதாஜி சுபாஜ்சந்திர போஸ் தலைமையில் அரிபுராவில் நிகழ்ந்த காங்கிரஸ் மாநாட்டிற்குச் சிறுபையனாக என்னை அழைத்துச் சென்றுள்ளார்கள்.

நல்ல இலக்கியப் பற்றுள்ளவர்கள், மலேயா நாட்டில் இருந்த போது திரு. சரவண முதலியார், திரு. ஞானசம்பந்தம், பிச்சப்பா சுப்ரமணியம், ராய. சொ. முதலியவர்களை மலேயாவுக்கு வரச்செய்து தமிழ் இலக்கிய உணர்வை மலேயாவில் முதலில் பரப்பியவர்கள் இவர்களே.

வெள்ளையர்களிடமிருந்து மலேயா நாட்டுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று திரு. திவி தலைமையில் கம்யூனிஸ்ட் நாதன் முதலியவர்களுடன் சேர்ந்து போராடினார்கள். இதனால் வெள்ளையரசு இவர்களைச் சிறைப்பிடிக்கவும் நாடு கடத்தவும் முயன்றது. இதன் காரணமாகவே மலேயாவிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டார்கள்

இப்பொழுது முன்பிருந்ததைவிடப் பல மாற்றங்கள் அவர்களிடம் ஏற்பட்டுள்ளன. முன்பு மிகக் கண்டிப்பாக இருந்தவர்கள் இன்று பல விஷயங்களில் விட்டுக் கொடுக்கிருர்கள். முன்பு சாமியில்லை என்றவர்கள், இன்று வெள்ளிக்கிழமை தோறும் பொங்கலிட்டு இறைவழிபாடு செய்யாது சாப்பிடுவதில்லை. பணத்தில் அழுத்தமாக இருந்தவர்கள் கார் முதலிய சௌகரியங்களுடன் பல தருமங்கள் செய்கிருர்கள். பிறர் சேலைக் கலரில் ரவிக்கை போட்டுக்கொள்வதைக் கண்டித்தவர்கள் இன்று சித்தி அணிந்துகொள்வதைக் கூட்ட கண்டிப்பதில்லை.

எங்களிடையே சில வேளைகளில் குடும்பப் பிணக்குகள் ஏற்பட்ட போதிலும் இவரது உள் மனதிலும் தனித்த அன்புண்டு. எனக்கு நிகழ்ந்த சாந்திக்கு அவர்கள் ஆசீர்வதித்தார்கள். இன்று அவர்கள் சதாபிஷேகத்திற்கு நான் பணிவிடைகள் புரிகின்றேன். இது எங்களுக்குக் கொடுத்து வைத்த ஒன்று.

எனதருமைச் சித்தப்பாவும் சித்தியும் 101 ஆண்டு மங்களகரமாக வாழ்ந்து எல்லா நலமும் வளமும் பெற அன்னை பெரியநாயகியின் அடிக்கமலங்கள் பிரார்த்தித்து வணங்குகின்றேன்.

அன்பு அம்மான்

சுப இலக்குமணன்
கோனூர்பட்டு

எங்கள் அன்பு அம்மான் திரு. பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்களுக்கு 80 ஆண்டுகள் நிறைந்து விட்டன. நம்ப முடியவில்லை. கோலின் துணையில்லா நடையும், தெளிவான பேச்சும், கம்பீரமான தோற்றமும் கொண்ட அவர்களை பார்த்தவர்கள், சாந்தி வயது என்று தான் மதிப்பார்கள். தோற்றத்திலே எளிமை, சட்டையில்லாத் திருமேனி, தானே துவைத்துடுத்தும் 4 முழ வேட்டி. இவைதான் அம்மானின் உருவப்படம். அம்மான் அவர்கள் எனது தாயாருடன் பிறந்தவர்கள். தந்தையினும் மேலாக எனக்கு வாழ்வமைத்து தந்தவர்கள். அறியா பருவத்தில் நானும் என் குடும்பத்தினரும், தலைவனுக விளங்கிய எனது தந்தையை இழந்த போது தாய்க்குத் தாயாக, தந்தைக்குத் தந்தையாக, என் குடும்பச் சுமைகளை எல்லாம் தன் குடும்பச் சுமையாக ஏற்று எங்கள்

அனைவரையும் வாழ்விக்க வந்த பெருந்தகை எங்கள் அம்மான். எங்கள் குடும்பச் சொத்துக்களை எல்லாம், செவ்வனே பராமரித்து செழித்து ஓங்கச் செய்து, எங்களை ஆளாக்கிய பெருமை அம்மான் அவர்களையே சாரும். என் சகோதர சகோதரிகளை கல்வியிலே கவன மும், கண்டிப்பான பழக்கமும் பெரு வண்ணம் அறிவுரைகள் பல கூறி ஆதரித்து வளர்த்தார்கள். அவர்களது கடுமையான கட்டுபாடு கள் அன்று கசந்த போதிலும், இன்று வாழ்விலே தேனாக இனிக் கின்றன. தனிப்பட்ட முறையில் எங்கள் குடும்பத்தினர் எங்கள் அம்மான் அவர்களுக்கும்' அவர்களுடைய சந்தியினருக்கும் என் றென்றும் கடமைப்பட்டவர்கள் ஆவோம்.

இளமையிலே பகுத்தறிவும் முதுமையிலே மெய் அறிவும் வாழ்வின் முழுமையான அமைப்பு என்பது அறிஞர்கள் கருத்து அவ்வகையிலே பக்குவப் பட்டவர் எங்கள் அம்மான். அம்மான் இளைஞராக இருந்த போது தீவிரமான பகுத்தறிவு வாதியாம் ''கண் மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக'' எண்பதனை குறிக் கோளாகக் கொண்டு வாழ்ந்தவராம். மூடநம்பிக்கைகளைத் தகர்த் தெறிய வேண்டும் என்ற நோக்குடன் விளங்கியதாக தெரிய வரு கின்றது, நான் அறிந்தவரை இன்று அவர்கள் வாழும் இல்லத்தை விலைக்கு வாங்கும் போது அதில் முனியோட்டம் இருக்கிறது; அதில் வசிப்பவர்கள் முன்னேற மாட்டார்கள் எண்றெல்லாம் பயமுறுத்தி னார்களாம், அம்மான் அவர்கள் இவை எல்லாம் முட்டாள்தன மான நம்பிக்கைகள் என்று கூறி உறவினர்களின் எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாது அவ் வீட்டை விலைக்கு வாங்கினார்களாம். இன்று அவர்கள் வாழ்ந்துள்ள வாழ்க்கையே அவர் கொண்ட கொள்கைகளே சிறந்தவை என்பதற்கு எடுத்துக் காட்டாக அமைந் துள்ளது. பகுத்தறிவு வாதி பக்தனாக மாறினால், அதில் ஒரு தனித் துவம் துவங்கும். அம்மான் அவர்களின் தெய்வ பக்தி, மக்கள் சேவையிலும், கோவில் திருப்பணியிலும் சார்ந்தது என்பதற்கு வேலங்குடியிலே அமைந்துள்ள திருக்கோயில் வாழையடி வாழை யாக அவர்களின் இறையுணர்வை பறை சாற்றும் சின்னமாகத் திகழ்கின்றது.

இன்றைய இளைய தலைமுறையினர் அம்மான் அவர்களின் வாழ்வில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் ஏராளம் ஏராளம். காலையில் எழுந்து நீராடாமல் உணவருந்த மாட்டார்கள்.

காந்திஜி, விநோபாஜி, போல திறந்த மேனி, இயற்கையுடன் இயைந்த வாழ்வு, கட்டுப்பாடான வாழ்க்கை முறைகள், பகுத்தறிவும், இறையுணர்வும் இரண்டறக் கலந்த கொள்கை நெறிகள் இவையே அவர்களை 80- வயது இளைஞனாக நம் முன்னே நிறுத்துகிறது.

''தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'' என்பதற்கு ஏற்ப, அப் பெரியார் 100 ஆண்டுகள் வாழ்ந்து நற்பணிகள் மேலும் பலபுரிந்து முழுமனிதனின் இலக்கணமாகத் திகழ இறைவன் அருள் பாலிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

பெரியநாயகியும் திரு. பெ. மு. சுப. அவர்களும்

V. சுப்ரமண்யக் குருக்கள்
கோ. வேலங்குடி

கல்வி வளர்க்குந் தனவணிகர் - நல்ல
கைத் தொழில் காக்குந் தனவணிகர்
பல்வகை யான தருமப் பணிகளைப்
பாரெங்கும் செய்யும் தனவணிகர்
சைவ சமயத்தைப் போற்றிடுவார் — கோயில்
திருப்பணிகளை யாற்றிடுவார் !
தெய்வ பக்தியைப் பரப்பிடுவார் — நாட்டில்
தேவார வோசை நிரப்பிடுவார்

—சுவாமி சந்தானந்த பாரதி

அவ்வழிவந்தவர் சுப்பையா நல்லவர் வணிகர் பெரும் குலம் விளங்க வந்துதித்த புனிதமானவர்! அந்தணரைப் போற்றும் அருங்குல வணிகர் ! முழுநீறு பூசிய முனிவர் ! விடுதலைக்குப் பாடுபட்ட வீரர் !

இராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடியை அடுத்த வேலங்குடி கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு வயல்நாச்சி பெரிய நாயகி அம்மன் கோவில் அவர்கள் குலதெய்வக் கோயிலாகும். சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் அங்கு வந்து தங்கியிருந்து அக் கோவிலுக்கு ராஜகோபுரம், பிரகாரம் முதலிய திருப்பணிகள் செய்து

வைத்தார்கள். அக்கோவிலுக்கு கும்பகோணம் பெரிய ஆச்சார்ய ஸ்வாமிகள், புதுப்பெரியவாள் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், டிகேசி, கவிமணி, கம்பன் அடிப்பொடி, குன்றக்குடி அடிகளார் போன்ற பல பெரியோர்களை அழைத்து வந்து சிறப்பித்து இருக்கிறார்கள். எத்தனையோ கோவிலுக்கு எத்தனையோ தர்மங்கள் செய்திருக்கிறார்கள். ஸ்ரீ வயல் நாச்சியம்பாள் திரு. சுப்பையா செட்டியார் அவர்களது நினைவிலே தோன்றித் தனது வெள்ளிக் கிரீடம் வெளி கண்டுள்ளது என்றும், அதற்குப் புதிதாக ஒரு கிரீடம் செய்து வைக்க வேண்டுமென்றும் சொல்லியதாக அவர்களே வயல் நாச்சி அம்மாளுக்கு வெள்ளிக் கிரீடம் செய்து வைத்துள்ளார்கள்.

ஸ்ரீ அம்பாள் மூலஸ்தானத்திற்குப் பித்தளையில் ஒரு பீடமும், கர்ப்பக்ருகவாசற் படியைச் சுற்றி நான்கு பக்கத்திற்கும் பித்தளைப் படியும் செய்து சாத்தியுள்ளார்கள்.

சில தர்மங்கள் அவர்களாகவே செய்து வருவதைக் கருத்தில் கொண்டு சில கருத்துக்களை அவர்கள் கவனதிற்கு கொண்டு வந்தேன். அதாவது ஸ்ரீ வயல் நாச்சியம்பாளுக்கு உயர்ந்த ரகக் கமலக்கற்கள் வைத்து வெள்ளியில் ஒரு பில்லாக்கும், நெற்றியில் அணிவதற்கு நெற்றிப் பட்டமும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். உடனே அவர்கள் செய்து தந்ததுடன், ஒரு பெரிய பதக்கம், நடுவில் பச்சைக் கற்பதித்து மிக அருமையான முறையில் செய்து ஸ்ரீ அம்பாளுக்குச் சாத்தியுள்ளார்கள்.

ஸ்ரீ அம்பாளுக்கு சந்தன அலங்காரம் செய்து பலமுறை ரசித்து அனுபவித்துள்ளார்கள். அவர்களே பல சந்தனக்காப்பு செய்து உள்ளார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக ஸ்ரீ அம்பாளுக்கு வெள்ளியில் நவரத்தினம் என்று சொல்லுகின்ற பல கற்கள் பதித்த மிகவும் அருமையான சுடர்க்கிரீடம் மிகுந்த செலவில் செய்து சாத்தியுள்ளார்கள். தங்கத்தினால் ஆன கற்கள் பதித்த அட்டிகைப் பதக்கம் அம்பாளுக்கு அன்பளிப்பாக அளித்துள்ளார்கள் இந்தப் பகுதிக்கு எங்கு வந்தாலும் லேலங்குடிக்கு வந்து ஸ்ரீ அம்பாளை தரிசனம் செய்யாமல் செல்ல மாட்டார்கள். ஸ்ரீ அம்பாளின் புன்சிரிப்புடன் கூடிய முக விலாசத்தைக் கண்ட மாத்திரத்தில் ஐம்புலன்களும் ஒடுங்கி உருகிக் கசிந்து கண்ணீர் மல்கி அந்தச் சன்னதியை விட்டு அகல மனமில்லாமல் பின் செல்வார்கள்.

ரௌத்ரி வ. மாதம் வேலங்குடி அருள்மிகு. ஸ்ரீ வயல் நாச்சியம்பாள் கோவிலைமராமத்துச்செய்து கோபுரங்களுக்கு வண்ணம் தீட்டித் திருப்பணிகள் செய்து துன்மதி ஆனி மீ மஹாகும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடத்தி வைத்துள்ளார்கள்.

சுமார் இருபது வருடங்களாக வருடந்தோறும் மாசிமாதத்தில் அவர்கள் பிறந்த பூரட்டாதி நட்சத்திரத்தன்று வேலங்குடி ஸ்ரீ வயல்நாச்சி அம்பாளுக்கு விசேஷமாகப் பழவர்க்கங்கள் ஒவ்வொன்றும் நூறுக்குக் குறையாமல் வரவழைத்து அபிசேஷகம் செய்வித்து மகிழ்வார்கள். ஸ்ரீ அம்பாளும் அவர்களது பக்திக்கு மகிழ்ந்து பல சம்பத்துக்களை அவர்களுக்கு அளித்துள்ளாள். அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் பெற்று, இன்னும் பல திருப்பணிகள் செய்து திடகாத்திரமாக வாழ்ந்து வரும்படியாக எல்லாம் வல்ல பராசக்தி ஸ்ரீ வயல்நாச்சி, பெரிய நாயகி அம்பாளைப் பிரார்த்திக்கிறேன்.

திரு. சுப. வின் பண்புகள்

RM. SV. இராமநாதன் செட்டியார்.

கண்டனூர்

தோன்றிற் புகழோடு தோன்றுக' என்பது பொய்யா மொழி. அதற்கு இலக்கணமாக வாழ்ந்தவர்கள் பலர். இன்று வாழ்பவர்கள் சிலர். அவர்களுள் ஒருவரே ஆத்தங்குடித் தோன்றலாம் திரு. சுப்பையா செட்டியார் அவர்கள். அன்னார் மனிதருள் மாணிக்கம். வணிக குல வலம்புரிச்சங்கு. அந்த ஆன்றோரின் அருங்குணங்களும், உயர்செயல்களும் இந்த அவனியின் அழகுமிக்க ஆணிவேர்களாம்.

இற்றை நாளில் அனைவரும் தம் நலத்தையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்கின்றார்கள். ஆதலால் நாட்டுப் பற்றாளர்களைக் காண்பதே அரிதாக இருக்கின்றது. இந்நிலையில் எண்ணத்தாலும், செயலாலும் எப்போதும் நாட்டிற்காகவே வாழ்பவர் திரு. சுப்பையா செட்டியார் அவர்கள்.

'செயற்கரிய செய்வார் பெரியோர்' என்பது வள்ளுவர் வாக்கு. அவ்வாக்கிற்கிணங்க, எண்ணற்ற திருமணங்களை நடத்தி வைத்து ஆசிகள் வழங்கியுள்ளார், மனு நீதிச் சோழனைப் போன்று பல பஞ்சாயத்துக்களை நடத்தி நீதி வழங்யுள்ளார்.

காந்தியடிகளைப் போன்று தூய, எளிய கதராடை அணிபவர் காலங்கணித்துக் கடமை ஆற்றுபவர்; எதையும் ஆய்ந்தே செய்யும் இயல்பு உடையவர்; எல்லோரிடத்தும் இனிமையாகப் பழகக் கூடியவர். ஊரின்கண் பழுத்த பயன்தரும் மரமாக நின்று தம்மை நாடி வருவோர்க் கெல்லாம் வரையாது வழங்கும் வள்ளலாவார்.

இறைப்பற்று மிக்கவர் வேலங்குடியில் பசிய தென்னை மரங்களும், செந்நெற் கதிர்களும் சூழ வீற்றிருக்கும் வயல் நாச்சி அம்மனிடம் அளவிலா ஈடுபாடு கொண்டவர், அதனாலன்றோ அம்மனின் அருயால் வேலாங்குடி சு. ப. என்றே அழைக்கப் படுகின்றார் போலும்.

கற்புக் கரசி கண்ணகி பிறந்த ஊரானபுகாரில், ஆண்டுதோரும் நிகழும் பட்டினத்தார் திருவிழாவிற்கும் சென்று, பொறுப் பேற்று, இதனைச் சிறப்பாக நடத்திக் கொடுப்பவர்.

இவ்வாறு தன்னலம் கருதாமல் பிறர்நலம் பேணும் ஆத்தங்குடியார், வன் உள்ளளவும், தமிழ் உள்ளளவும் வாழிய! வாழியவே!

சுந்தரப் பண்பு

குறளடிமை பி. சி. சீதாபதி

சேலம்

என் ஆறும் வயதிலே சங்கரியை அடுத்துள்ள ஜமீன்தார் திரு. பொன்னையா கவுண்டர் வீட்டில் ஒரு விருந்து. உணவுப் பட்சனங்களில் நெய் ஒழுகியது. கவுண்டர் உபசரிப்பில் அன்பு நிரம்பி வழிந்தது. என் பிஞ்சு மனத்தில் அவ்வன்பு பசுமரத்தாணியாகப் பதிந்து விட்டது.

பின் 8 வயதில் கொங்கனுபுரம் திரு. நாச்சியப்பக் கவுண்டர் இல்லம். விருந்தில் படைத்த ஜிலேபியின் ஜீராபோல் கவுண்டரின் உபசரிப்பில் இன்பம் பெருகி வழிந்தது.

நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு அதேபோல் ஒரு சுந்தரப் பண்பைக் கண்டேன். ஆம் அது நம் ஐயா அவர்கள்தான். செவிக்கும் வயிற்றுக்கும் இன்பம் தரும் காரைக்குடி கம்பர் விழா, அங்கு ஐயா, என்னை அனுகி, தம்பி இந்த ஆண்டு புதிதாக வந்திருக்கின்-

றீர்கள் போலிருக்கின்றது. சாப்பிட்டீர்களா? என்று கேட்டார் அவருக்கு நான் அளித்த பதிலில் திருப்தி இல்லை. என்னை விடாமல் அழைத்துச் சென்று உண்பித்தார். உண்பது கண்டு மகிழ்ந்தார். இது, எனக்காக அவர் தனிப்படக் காட்டிய அன்பா? அம்மம்ம! அங்கு வந்திருந்த ஒவ்வொருவரிடமும் அன்பொழுகப் பேசி விருந்து பசரிப்பதில் அவர் கொண்ட பெருந்தன்மை என்னென்பேன்!

இன்று அப்பெருந்தகை திரு. சுப்பையா செட்டியார் அவர் கட்கு ஆண்டு எண்பது என்னும் போது அக மிக மகிழ்கின்றேன்.

காட்சிக்கெளியர், கருணை யுளத்தார் நீள்
மாட்சி விருந்தூட்டும் மாண்பினர்—தோட்செவி
சுப்பையா ஆண்டுபல சோர்வின்றி வாழ்ந்திடுவார்
தப்பா திறையருளால் தான்!

சங்கத் தமிழே! எந்நாளும் வாழ்க!

புலவர் மாமணி மா. முத்துராமன் B. Lit
பள்ளத்தூர்

மழை வண்ணன் திருமாலுக்கு, சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாளின் மாண்பதனைத் திருப்பாவையில் படித்திருக்கிறோம். கேட்டிருக்கிறோம். வயல் நாச்சியம்மனுக்குச் சுடர்க்கிரீடம் தந்து மகிழ்ந்த சுந்தரத் திருமகனைக் கண்டு கொண்டிருக்கிறோம். கழிபேறு வகை அடைந்து கொண்டிருக்கிறோம். அந்தத் திருமகன் வேறுயாரு மல்ல. ஏற்றமாய் எண்பதாம் ஆண்டு மணம் கண்டு இன்புறும் ஆத்தங்குடி பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்களே அந்த அற்புதப் பெருமகனார்,

தெய்வீகமும், தேசியமும் சேர்ந்தால்தான் தேசத்தில் பாரதி மிகுதியாய்ப் போற்றப் பெற்றான். அந்த வழியினைக் கடைப்பிடித்தவர் செட்டியார் அவர்கள். இப்போதைய அரசியல் போன்றதல்ல அப்போதைய அரசியல். அதிலே தன்னை அர்ப்பணித்துத் தியாகியாய்ப் பெயர் எடுத்த தேசத் தொண்டர் செட்டியாரவர்.

எழில்மலர் எங்கெங்கு உண்டோ அங்கெல்லாம் வண்டு செல்லும். இலக்கியக் கூட்டம் எங்கெங்கு உண்டோ அங்கெல்லாம் செட்டியார் செல்வார்கள். இலக்கியச் சுவையில் தன்னை மறப்பார்

கள். எண்பது மாறி இருபதாய் உற்சாகம் காட்டி உளமே மகிழ் வார்கள் பொன்னுன தமிழைக் கேட்டு ரசிக்கின்ற புலவராக மட்டும் இவர்கள் இருந்ததில்லே. கண்ணுன தமிழ்க் கழகங்கள் விண்போல் உயர்ந்து விளங்கப் பொன்னுன பொருளே வாரிக் கொடுத்து வள்ள லாக மாறியதும் உண்டு. சொல்வதை செய்வதும், செய்வதை சொல்வதும் இவர்களின் இயல்பாகும்.

மலர்ந்தாலும் மணக்கின்ற மலருக்குத்தான் மாநிலத்தில் மதிப்பு அதிகம் வாழ்ந்தாலும் பண்பு நலன்கள் சிறந்து உயர்ந்த தால் தான் மனிதர்க்குச் சிறப்பாகும். அச் சிறப்புக்கள் அனைத்தும் பெற்றவர்கள் செட்டியாரவர்கள். எளிமையில் இனிமையும், எவ ரையும் வரவேற்பதில் இன்முகத் தோற்றமும் கொண்டவர்கள். சிறியவர் பெரியவர் பேதமின்றி சிந்தை மகிழ்ந்து உறவாடி மகிழ்பவர்கள். உதவிகள் செய்து உயர்த்துபவர்கள். உயர்பவர்கள்.

வெண்ணிலவின் தண்ணொளியாய் தன்னேச் சார்ந்தவர்க் கெல்லாம் அருள் ஒளி தந்து அன்புநலம் வழங்குபவர்கள். ஆயகலே கள் அறிந்து தூய தொண்டில் சிறந்தவர்கள்.

சங்கத் தமிழாய் சந்தம் மிகுந்து எந்த நாளும் வாழ்ந்து சிறந்திட இந்த நாளில் இதயம் மலர்ந்து கந்தனனின் கழலினேத் தொழுதேன்!

மாடிக்கடைச் செட்டியார்

V. R. கணபதி
முன்னாள் பஞ்சாயத்து தலைவர்
வாங்கல்

திரு. பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்களே எனக்கு முப்பது ஆண்டுகளாகத் தெரியும். அவர்கள் வட்டித் தொழில் கரூ ில் செய்து வருகிருர்கள்.

கடன் கொடுத்து வாங்குவதில் அவரைப் போல் ஒருவரும் இருக்க இயலாது, ஏனென்ருல் நல்ல தான் நல்ல நேரம். பார்த்துத் தான் கடன் கொடுப்பார்கள். பணம் தரும் போது ''நல்லாய் இருக்க வேண்டும்'' என்று சொல்லி, திசை பார்த்து கடவுளே வேண்டிப் [illegible] வார்கள். அவசரத் தேவை என்ருல் இரவு நேரமா

னாலும், எந்த நேரமானாலும் பணம் தருவார்கள். எங்கள் 10 மைல் சுற்று வட்டாரத்தில் மிக சாதாரணமானவர்கள் முதல் வசதியானவர்கள் வரை அவரிடம் பணம் வாங்கக் கொடுக்க இருப்பார்கள். யாரைக் கேட்டாலும் "மேல் மாடிக் கடைச் செட்டியார்! மிகவும் நல்லவர் என்பார்கள். கடன் வாங்கினவர் நல்லாய் இருந்தால் தகன் நாம் நல்லாய் இருப்போம் என்று நினைப்பவர்கள். கோர்ட்டில் கேஸ் போடாமல் எவ்வளவு முறை சென்று கேட்க முடியுமோ அவ்வளவு முறை கேட்டு வாங்கிக் கொள்வார்கள். ஒருவருக்கு கஷ்டம் ஏற்பட்டு பணம் தரச்சிரமப் பட்டால் அவர் தருவதை வாங்கிக் கொள்வார்கள்.

கிராமங்களில் நல்லவைகள் நடந்தால் அதற்கு இயன்றவரை பொருளுதவி போன்றவைகள் செய்வார்கள். எங்கள் வாங்கல் சிவன் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னின்று சிறப்புடன் நடத்தி வைத்தார்கள். ரெங்கனாதம்பேட்டையில் பள்ளி கட்ட, ஊருக் காக மிககுறைந்த வட்டியில் பணம் கொடுத்து. பள்ளிகட்ட உதவி செய்தும், அந்த ஊர் கோவிலுக்கு சிலை வைக்க வேண்டிய பொருள் உதவியையும் கொடுத்தார்கள். அவர்கள் பல்லாண்டு வாழ வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

நான் அறிந்த சுப

மரகதவல்லி முருகப்பா

ஆத்தங்குடி அன்பர் திரு. பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்களுக்குச் சதாபிஷேகம் நடைபெறப் போவதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். அன்பர் சுப. தெய்வபக்தி மிகுந்த-வர்கள். எவரிடத்தும் கருணையே வடிவமாக அன்போடு பழகு வார்கள். கடுஞ்சொற்களை அவரிடம் கேட்பது அரிது. தர்ம சிந்தனை மிக்கவர்கள்; எளிய தோற்றமும் கதர் உடையும் அவர்களைச் சார்ந்தது. காந்தி அடிகளிடம் மிகுந்த மதிப்பு உடையவர்கள். இராஜாஜியுடன் இவர்களுக்கு மிகவும் ஆழ்ந்த பிடித்தமான நட்புடன் ஈடுபாடும் நிறைய உண்டு.

இலக்கிய ஆர்வம் மிக்கவர்கள். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையைத் தமிழ் நாட்டில் பத்திரிகை வாயிலாக அறிமுகம் செய்த குமரன் ஆசிரியர், 'சீர்திருத்த செம்மல்' சொ

முருகப்பாவுடன் இணைந்து இலக்கியத் தொண்டும், இலக்கிய விருந்தும் நிறைய ஏற்பாடு செய்து, தானும் இன்புற்றுப் பிறரையும் மகிழ்வித்து, செட்டி நாட்டில் இலக்கிய மலர்ச்சி ஏற்பட ஒரு முக்கிய ஆதரவாளராக இருந்தார்கள். இவ்வாறு நடந்த நிகழ்ச்சிகளுள் இரசிகமணி டி. கே. சி யை மையமாக வைத்துப் பலமுறை இலக்கியக் கூட்டங்கள் ஏற்பாடு செய்து பொன்னுடை போர்த்திச் சிறப்பித்ததும் என்மனத்தில் இன்னும் பசுமையாக இருக்கிறது.

சமூக சீர்திருத்தத்தில், நாடு பழமையிலும், சம்பிரதாயத்திலும் மூழ்கிக் கிடந்த போதே மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். எப்படியாவது நகரத்தார் குல விதவைப் பெண்களுக்கு மறுமணம் செய்விக்க வேண்டுமென மிகுந்த ஊக்கம் காட்டினார்கள். சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பே எங்கள் முயற்சியால் நகரத்தார் குலத்தில் முதல் முதலாக நடத்தி வைக்கப் பெற்ற மறுமணத்தில் தம்பதிகளுக்கு ஊராரின் கடும் எதிர்ப்புக் கிடையில் பாராட்டு விருந்துவைத்து சமூக சீர்திருத்தத்தில் தமக்குள்ள ஈடுபாட்டைக் காட்டினார்கள்.

நாங்கள் 'மகளிர் இல்லம்' என்ற ஒரு அமைப்பை அமராவதிபுதூரில் ஆரம்பித்த போது திரு. சுப. எங்களுடன் இருந்து பலவாறாக உதவிகள் செய்து உறுதுணையாக இருந்தார்கள். அந்நிறுவனத்தின் நிர்வாகக் குழு உறுப்பினராக ஆரம்பகாலத்தில் சுமார் பத்தாண்டு காலம் பணி புரிந்து அதன் வளர்ச்சிக்கும் செட்டி நாட்டில் அது ஆற்றிய சேவைக்கும் முக்கிய காரணமாக இருந்தார்கள்

அவர்கள் மனைவி (வள்ளியாச்சி) கணவனின் உதார குணத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக அமைந்தது திரு. சுப. குடும்பத்தின் மற்றுமொரு சிறப்பு. நல்ல உள்ளத்தின் அடையாளமாக மகன்களும், மகளும், மாப்பிள்ளை, மருமகள்களும், பேரன் பேத்திகளும், பெரிய ஆலமரம் போல் தழைத்து நல்வாழ்வு நடத்துவதைக் கண்டு மகிழும் வாய்ப்பினைப் பெற்ற திரு. சுப. வள்ளியாச்சி தம்பதியரை உளநிறைவோடும் பெருமையோடும் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

R, ரங்கராஜ்

வாங்கல்

உயர்திரு. பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்கள் 80-வது ஆண்டு நிறையப் பெறுகின்றூர்கள் என்று அறிய மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நான் அவர்களுடன் சுமார் 35 ஆண்டுகள் தொடர்பு கொண்டுள்ளேன். பல சந்தர்ப்பங்களில் சிறந்த அறிவுறைகளையும்' கருத்துக்களையும் எடுத்துக் கூறுவார்கள். சிறந்த பண்பாளர். நாட்டுப் பற்று மிக்கவர். காந்தியவாதி. வணக்கத்திற்கும், மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய 80-வது ஆண்டு நிறைவு விழா சீரும் சிறப்புமாக நடைபெற எல்லாம்வல்ல இறைவனை வேண்டி எனது அன்பையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராம. இராமு

ஆ. முத்துப்பட்டணம்

'உண்பதுநாழி உடுப்பது இரண்டு' என 4முழ வேட்டியும், ஒரு மேல் துண்டையும் அணிந்து கொண்டு மகாத்மாவைப் போல் உண்டு, உடுத்து. உழைத்து நமக்கெல்லாம் வழிகாட்டியாகத்திகழும் எங்கள் ஐயாவின் 80வது ஆண்டு நிறைவு விழ்ா இனிது நிகழ்ந்து ஐயா, ஆயா மேலும் ஒரு நூற்றுண்டு வாழ எல்லாம் வல்ல அன்னை பெரியநாயகியைப் பிராத்திக்கின்றேன்.

சொ. சிதம்பரம்

புதுவயல்

சிறுபிள்ளை முதல் எங்களுக்கு பல விதத்திலும் அறிவுரைகள் கூறி அவ்வப்போது கண்டித்து எங்கள் முன்னேற்றத்தில் அக்கரை காட்டியவர்கள் எங்கள் தாயாரின் தந்தையாகிய வள்ளிச்சித்தியும், சித்தப்பாவும் ஆகும். தங்களது குழந்தையாக எங்களையும், பேரப் பிள்ளைகளாக எங்களது குழந்தைகளையும் பாவித்து ஆகியும் அன்பும் தொடர்ந்து செலுத்திவரும் சித்தி - சித்தப்பா இன்னும் ஒரு நூற் றூண்டுக்கு சிறந்து வாழய் பிரார்த்திக்கின்றேன்,

கவிதைகள்

தழைத்துச் சிறந்து வாழியவே

கி. வா. ஜகந்நாதன்
சென்னை

வளஞ்சார் ஆத்தங் குடியதனில்
வணிகர் குலத்தில் தோன்றியவன்
உளஞ்சால் அன்பும் பண்பும்மிக
உடையான் சுப்பை யாவென்னும்
களஞ்சால் புகழ்சேர் நற்றோன்றல்
கடவுள் அருளால் எண்பதென
விளங்கும் அகவை நிறைந்தின்று
மேன்மை சார்ந்து திகழ்கின்றாள்

இனிய சொல்லும் நல்லறத்தை
என்றும் இயற்றும் உயர் பண்பும்
கனிவும் அருளும் கொண்டு பிறர்
கலியைத் தீர்க்கும் பேரியல்பும்
நனிகொண் டுள்ள சுப்பையா
ஞான வடிவேற் பெருமான்றன்
தனிநல் லருளால் பல்லாண்டு
தழைத்துச் சிறந்து வாழியவே !

பீடு சேர்ந்து வாழியவே

தத்புருஷ தேசிகர்
பாலகவி வே. இராமநாதன் செட்டியார்
தேவகோட்டை

தேனர் பொதும்பர் புடைசூழத்
திகழும் ஆத்தன் குடிப்பதியில்
சிவமே பேணும் திருவுடைய
செல்வ வணிகர் குடிப்பிறந்தோன்
மானர் நயனத் தருள்கொழிக்கும்
வயல்வாழ் நாச்சி எனப்புவியோர்
வணங்கும் பெரிய நாயகித்தாய்
மலர்த்தாள் மனத்து மறவாதோன்
ஊனர் உயிர்வாழ் வுறப்பெற்ற(து)
ஒல்லும் வகையால் அறஞ்செய்கென்(று)

உணர்ந்து நலங்கள் பலஉஞற்றும்
ஒருவன் குணத்தால் உயர்ந்துள்ளோன்
பேனு மூனுச் சுப்பையா
பிறைசேர் மவுலிப் பெருமானின்
பெரிய கருணை நிறைவுற்றுப்
பீடு சேர்ந்து வாழியவே
நலமே தழைக.

கூடும் திருவருள் கூட்டுக வாழ்வே

ரா. முருகேச கவிராயர்
ஒட்டன்சத்திரம்

மூதறிவாளன் முத்தமிழ்விரகன்
ஈதற்பண்பில் இணையிலாச்செல்வன்
நல்லோரிணக்கம் நயந்துறவாடும்
தொல்புகழ்மரபின் தொடர்புடைப்பெருமகன்
கற்றோர்தம்மைக் கண்ணெனப்போற்றும்
பற்றும்பாசமும் படர்ந்தபேருளத்தன்
கருவூர்தன்னில் காவியக்கருத்தினை
விரிவுரையாகநான் விளக்கியகாலையில்
தொடர்ந்துவிரும்பிச் சொலும்பொழுதெல்லாம்
உடனிருந்துவகை உளங்கொளமகிழ்ந்து
பொன்னுடைஎனக்குப் போர்த்தியும்களிப்பால்
தன்னுடைஇல்லில் தகுவிருந்தளித்தும்
மனங்கொளவாழ்த்திய வள்ளற்பெருந்தகை
இனியநற்புலவர்கள் எவர்க்கும்நல்லுறவினன்
காரைக்குடியிற் கம்பன்விழாவில்
ஆர்வமும்உவகையும் அன்புமேவிட
உணவுக்கூடலில் உடன்பட்டுநின்று
மணமுறச்செய்யும் மாட்சியாளன்
நவில்தோறும்சுவைதரும் ராஜாஜியின்பால்
அவமதிப்பறியா அனுக்கத்தொண்டன்
அங்கியென்பன அங்கங்கொளாது
சங்கொளிக்கதருடைச் சலாபமேனியன்
பக்திஒழுக்கம் பழமைபாராட்டல்
சத்தியநெறியில் தளர்விலாப்பிடிப்பு

நிறைந்தநற்சான்றோன் நேர்மையாளன்
இறைவழிபாட்டில் இணையிலாமேலோன்
குளிர்பொழிலாத்தங் குடிவருமேன்மை
ஒளிர்தருசுப்பைய ஒண்புகழாளன்
அகவைஎண்பதாண் டதுநிறைவெய்திமேல்
தொகைபலஆண்டு தொடர்ந்துநடைபெற
நீடுவாழ்க நிலைபெற்றுவாழ்க
கூடும்திருவருள் கூட்டுகவாழ்வே.

பாராட்டி வாழ்த்துகிறேன்! பல்லாண்டு வாழியவே!

வெ. நா. மு. இராமநாதன் செட்டியார்
தேவகோட்டை

ஆத்தங் குடிப்பிறந்த அன்புநிறை பெட்டகமாம்!
மாத்தூர்க் கோவில்சேர் மாணிக்கப் பொக்கிஷமாம்!
நண்பர் தம்முடைய நாலிருப தாமாண்டில்
அன்புப் பெருக்காலே ஆவலுடன் வாழ்த்துகிறேன்!

உள்ளத்தால் உயர்ந்தவர்க்கு ஊர்போற்றும் மாதரசி
வள்ளியம்மை ஆச்சியவர் வாழ்க்கையிலே துணையானார்!
அற்புதமாம் இவர்வாழ்வில் ஆனந்தம் பெருகிடவே
கற்பகத்தைப் பிரார்த்தித்துக் களிப்புடனே வாழ்த்துகிறேன்!

திருமகளாய் ஒருமகளும் சிறப்புடனே குலம்விளங்க
இருமகனும் பெற்றவராம் இவ்வுலகில் புகழ்மிகுந்த
செல்வாக்குக் கொண்டவராம் சிறப்புடையபெரியவரைப்
பல்லாண்டு வாழ்கவெனப் பைந்தமிழில் வாழ்த்துகிறேன்!

செட்டியார் முன்வாழ்ந்த சிறப்பான காவிரிப்பூம்
பட்டினத்துத் திருநாளைப் பார்ப்பதிலே ஆர்வமுடன்
அந்தஊர் வளர்ச்சியிலே அக்கறையும் கொண்டவரைக்
கந்தனவன் கழல்போற்றிக் கனிவுடனே வாழ்த்துகிறேன்!

ஆங்கிலத்தார் நம்மவரை அடக்கியதை எதிர்த்துநின்று
காங்கிரசில் மிகப்பற்று காந்தியிடம் மரியாதை
மிகக்கொண்ட பெரியவராம் மேன்மைமிகு நண்பரினை
அகங்குளிரப் பாராட்டி அன்புடனே வாழ்த்துகிறேன்!

தம்மனதை ராஜாஜி தம்மிடத்தில் பறிகொடுத்து
அம்மனிதர் பெயரிட்டு அழைத்திட்டார் ஒருமகனே!
இப்படியாய் அன்பினுக்கோர் இலக்கணமாம் என்நண்பர்
சுப்பையா அன்னவரைச் சொந்தமுடன் வாழ்த்துகிறேன்!
நாத்திகராய் முன்னுளில் நடந்தாலும் இன்றைக்கு
ஆத்திகராய் மாறியந்த ஆண்டவனுர் திருப்பணிக்கே
அள்ளியள்ளிக் கொடுக்கின்ற ஆர்வமுள பெரியவரை
உள்ளமெலாம் பூரிக்க உவகையுடன் வாழ்த்துகிறேன்!
கயல்விழியால் உலகத்தைக் காக்கின்ற நற்ருயாம்
வயல்நாச்சி அம்மனுக்கு வளமான குடமுழுக்கு
நீராட்டுச் செய்வித்த நேர்மைமிகு நண்பரினைப்
பாராட்டி வாழ்த்துகிறேன்! பல்லாண்டு வாழியவே!

பாவாக்கம் பேரன் உ. தெட்சிணுமூர்த்தி M.Sc.,

சீரோடு வாழ்க செழித்து

சிந்தனைக் கவிஞர் *பெரி. சிவனடியான்* எம்.ஏ.
விழுப்புரம்

ஆத்தங் குடியை அணிசெய்யும் நகரகுல
மூத்த தலைவராம் சுப்பையா முத்தமிழில்
நாட்டம் மிகக்கொண்டு நாடறிந்த சான்ருேரின்
கூட்டத்தில் கூடிக் குறையாது உழைத்ததுடன்
காரைக் குடிநகரில் கம்பர் விழாக்களிலே
பேரைக் கருதாது பேருழைப்பை நல்கியவர்
முப்பத் தெட்டாண்டு முன்னின்று உணவுகளைத்
தப்பாமல் பரிமாறித் தனிமகிழ்ச்சி கொண்டமகன்
ராசாசி டிகேசி நாமக்கல் லார்தேவி
ஆசானுய்ப் பெற்றே அனுதினமும் பழகியவர்
கேள்வி ஞானத்தால் கிளர்ந்தமனம் பெற்றே
ஆழ்ந்தநல் அன்புடனே அயராது உழைத்ததனுல்
எண்பதாம் ஆண்டெய்தி இன்றுவிழாக் காண்கின்ருர்
தன்மக்கள் சுற்றத்தார் தாள்பணிந்து போற்றுகின்ருர்
மலரிதனை வெளியிட்டு மாண்பெல்லாம் கூறுகின்ருர்
நிலவுலகில் அவர்பெயரை நிலைபெறவும் செய்கின்ருர்
பேராளர் சுப்பையா செட்டியார் நூருண்டு
சீரோடு வாழ்க செழித்து.

மயிலும் வேலும் தாங்கியவன்

வள்ளிமுத்தையா
கோட்டையூர்

மயிலும் வேலும் தாங்கியவன்
மாண்பார் பெயரைப் பெற்றவராம்
வயல்நா யகியாள் தங்கமகன்
வள்ளிக் கிசைந்த சுப்பையா!

தமிழ்த்தாய்த் தலைமகன் இராஜாஜி
தானே வகுத்த பாதையிலே
அமிழ்தின் இனிய மக்களொடும்
அன்பால் இயங்கும் நடைகொண்டாய்!

எந்தம் இனிய அய்யாவும்
அழைப்பார் உன்னைச் 'சாமி'யென
விந்தையில்லை இதிலுன் பால்
விளங்கக் கண்டார் தெய்வத்தை

பந்து மித்திரர் புடைசூழப்
புனிதநீ ராடும் வேளையினில்
சிந்தால் வாழ்த்தினன்- பல்லாண்டு
சிறக்க! வள்ளிமுத்தையா!

வாழ்க பல்லாண்டு! வாழ்க! வாழ்கவே!

மு.முத்துலெட்சுமி
கரூர்

வள்ளியம்மை மணவாளராம் சுப்பையா
எங்களுக்கு எல்லாம் அன்பு அய்யா
ஆசைக்கோர் பெண் பெற்றார்
புனிதவதியாம் நம் குலத்துதித்த
திலகவதியின் பெயரை இட்டார்
இலக்கியத்தின் இளைய குமரன் இலக்குவன்
இவர்தம் தலைமகன் ஆனார்
மூதறிஞர் இராஜாஜி முறையாக, இராஜகோபாலன்,
இவருக்கு இளையமகன் ஆனார்

அன்புநெறிவாழும் அண்ணுமலையாருடன்,
செல்வம் தழைக்க வந்த செல்வி செல்லமுடன்,
பண்பு காக்க வந்த பாவை பவானியுடன்,
பெரிய நாயகி அம்பாள் பேரருளுடன்,
வாழ்க பல்லாண்டு! வாழ்க வாழ்கவே!

நேர்மை மிக்குடைய நம் ஐயா நீடுவாழ்க

சுப. நாச்சியப்பன்
நா. காந்தி
ஆ முத்துபட்டணம்

ஆக்கம் கொள் நல்ல அறிவுடையார் மேலான
நீக்கமில் லன்பென்ற நீர்மை மிக்குடையார்
ஊக்கம் மிகக்கொண்டே ஊருக் குழைத்த செல்
வாக்கொடு வாழ்வில் வெற்றியும் கொண்டவராம்

சீர்மேவு எங்களன்பின் சுப்பிரம ணியரின்றே
கார்மேவா வானில் கவின்கொள் குளிர்மதிபோல்
ஊர்மேவ உற்ருர் உறவினர் சூழ்ந்திருக்க
பார்மேவும் நல்ல பெருவிழா கொண்டுயர்ந்தார்

எண்பதி யாண்டென்ருல் என்னல்தான் நம்பொணுதே
எண்ணத்தில் செய்கைதனில் என்றும் இளைஞரிவர்
மண்ணகத்தில் வாழும் முறை காட்டி வாழ்கின்ருர்
தண்ணெனும் பார்வை தகவுடைய சொல்லாடல்

என்னுள்ளம் கொண்டார் எனதிரு கண் நிறைந்தார்
பொன்னுள்ளம் கொண்டார் பொற்பின் இருப்பிடம்
தன்னுள்ளம் தானறிந்த தாழ்விலாச் செல்வரிவர்
அன்புள்ளம் கொண்டவரே ஆர்வத்தால் போற்றுகின்றேன்

பெற்றெடுத்த பான்மையால் பேர்பெறும் முத்துநகர்
பெற்றடைந்த மேன்மையாம் பேறுபெறும் ஆத்தநகர்
விற்றதுவும் வாங்கியதும் வாணிபமே யானுலும்
நற்றவமே செய்தனவே நம்மூர் இரண்டும்

வயநாச்சி தன்னருள் வாய்க்கவே பெற்ருர்
சுயமாக ஈட்டியதன் செல்வத்தை அன்பு
பயமான அன்னை மனம் குளிர கோவில்
நயமுடனே நற்குட நன்னீர் சொரிந்துயர்ந்தார்

வெள்ளியது கும்பத்தில் வீற்றிருந்தாற் போலவே
வள்ளியம்மை வந்திணைந்தாள் வாழ்குலம் வீறுபெற
தெள்ளிய தேனமுதாய் தான்பெற்ருர் செல்வரை
தள்ளிய சுற்றம் தழுவியதே சீர்பெற

பெண்கிளேயே வாழ்வின் பெருங்கிளே என்பரால்
புண்ணியராம் ஐயாபெற்ருர் திலகவதிப்
பெண்கொடியை, பின்பிறந்தார்பேர் சொல்லும் பேராளர்
நுன்மான் நுளேபுலத்தின் நல்லார் இலக்குவரும்

மண்ணுலக மேதை இராசாசி பேருடையார்
எண்ணத்தில் மேம்பட்டார் என்றும் உயர்ந்திடுவார்
பண்பில் உயர்ந்தவர் பாராட்டுப் பெற்றிடுவார்
நேர்மை மிக்குடைய நம்ஐயா நீடு வாழ்க,

பாவாக்கம் புலவர் இராமசந்திரன்.

அப்பத்தாளுடன் நீடூழி வாழியவே

பேத்தி எல். இந்திரா
கோனுபட்டு.

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலேப் பட்டவர்க்கு -குறள்

சீரான வாஞளில் சிறப்பான தவவாழ்வும்
சிந்தை தனில் ஓயா சிற்றம்பல(னி)ன் நினைவும்
செல்வமிகுதி கண்டும் செருக்கிலா ஞானமும்பூண்டு
வாழ்வாங்கு வாழ்ந்திடும் வள்ளல்மிகு ஐயாவே!
வள்ளியெனும் அப்பத்தாளுடன் நீடூழி வாழியவே !

பள்ளிப் பருவத்திலே துள்ளி விளையாடிய என்னைப்
பாங்காகப் பள்ளிக்குப் பயணம் செய்வித்தவரே
பலவகுப்புதனில் படித்துத்தேறிடும் முன்னே
பல்வித நெறிகளைப் பழகிட வைத்தவரே
காலைப் போழ்தினில் கோலம் போடவைத்துக்
காப்பிக்குப் பதிலாக பதநீரைத் தந்தவரே
பலகாரம் சாப்பிட உட்காரும் முன்னே
பச்சை முட்டையைப் பருகிட வைத்தவரே
எண்ணெய்க் குளிப்பு என்பதற் கென்றே
ஏற்றமிகு வெள்ளியில் நீராட வைப்பவரே
துவாலையில் துவட்டிதலை காய்ந்த பின்னே
தேங்காய்க் கஞ்சியைக் குடித்திடச் செய்தவரே
பள்ளிவிடுப்புகளில் பயிற்சி நோட்டுதனில்
பருமனான எழுத்துக்களால் எழுதிடக் கண்டவரே
உயர்வான முறைதனில் எழுதிடவில்லையெனில்
உருளைத்தடி கொண்டு ஓங்கியே அடித்தவரே
மலேயா நாட்டு அங்காடி அஞ்சல்களை
மறவாமல் என்னையே எழுதிட வைத்தவரே
இராப் போழ்து தவறாது திருவாசக மணிதனை
இனிமையூட்டும் இன்னிசையுடன் பாடச்செய்தவரே
சின்னஞ்சிறு வயதுமுதல் சீர்மிகுந்த பழக்கத்தை
சிரமமின்றிச் சொல்லிய சீலமிகு ஐயாவே
எமனென்ற கூற்றுவனை ஏப்பமிட்டு, நீவிரிருவரும்
என்றென்றும் நீடுவாழ இறைவனை இறைஞ்சுகின்றேன்.

உ. கோவிலூர
KOVILOOR
MADALAYAM
மடாலயம்
8823
031

எப்பொழுதும் வாழ்க, இசைந்து

S.K. இராமராசன், R. விஜயகௌரி
வேலூர்

கம்பன் புகழ்வாழ்க! வாழ்கபல்லாண்டு
கன்னித்தமிழ்வாழ்க! வளர்கபல்லாண்டு

செம்மைபெறு பரம்பொருட்குக் குன்றம்போலத்
திருந்துபல பெருங்கோவில் எடுத்தும் என்றும்
மெய்ம்மையினை உணர்த்தியருள் நாமகட்கு
மேலாய கலைக்கோவில் அமைத்தும் மக்கள்
தம்மையுணர் தரமடங்கள் எங்கும் பண்பால்
தாபித்தும் உயர்கின்ற நகரத் தார்கள்
மும்மையினும் புரிகின்ற அருட்பண் பாக
முகிழ்த்தொளிரும் சுப்பையா! வள்ளல்! வாழ்க!

நமையாட்கொள் கவிச்சக்ர வர்த்தி கம்பன்
நாடெல்லாம் உவகைக்கூத் தாடச் செய்த
இமயமலைக் காவியம்போல் பழகுந் தோறும்
இனிக்கின்ற நும்பண்பை எண்ணும் தோறும்
உமைமடந்தை மணவாளன் சிரத்தில் ஏந்தும்
ஒப்பற்ற கங்கையினில் தோய்ந்தாற் போல்
எமையறியாத் தனிச்சாந்தி உளத்தில் தேங்கும்
எவ்வண்ணம் நும்வண்ணம் இயம்ப வல்லேன்

செப்புதிரு வள்ளுவன்பால் விருந்தோம் பற்குத்
தேர்ந்தினிய நல்லுரையை வழங்கு கென்று
திப்பியமார் பதம் பணிந்து கேட்டேன்: அந்தத்
திருவாளன் 'கருவூர்க்குச் செல்க அங்கே
ஒப்பரிய மாரியம்மை கோவில் பக்கம்
உள்ளதொரு நல்வீட்டில் கதரே கட்டும்
சுப்பையா என்பவரே அதனுக்கேற்ற
தூயவுரை! பிறவுரைவெற் றுரையே' என்றான்

எச்சகமும் புகழ்ந்தேத்தும் வள்ளு வன்றன்
எழிற்குறளே காந்தியெம்மான் பாதம் ஆகி
இச்சகத்தில் வந்ததென உணர்வில் ஆராய்ந்
ஏதப்பொழுதும் அவன் பாதச் சுவடே நோக்கி
முச்சகமும் வியப்பெய்த நடக்கும் நின்கால்
முள்ளறியா மேடுபள்ளம் அறியா அங்கு
நச்சகங்கொள் அரவுகளும் சாந்தம் கண்டு
நன்மனத்தைப் பெற்றினிதே மீளும் ஐயா!

பொங்கியநற் சீலத்தை இல்லம் ஆக்கிப்
பொலிவுடன்வாழ் சான்ருேரே! பண்புமிக்க
தங்களுளம் நினைப்பதையே செந்நா பேசும்
தனிச்செந்நா உரைப்பதையே உள்ளம் என்னும்
மங்கலமார் இலக்குவனுய் இராம ஞய்முன்
வந்தவர்கள் இதயமுடன் செந்நா ஆகி
இங்குவந்து பிறந்தனரோ அன்றித் தங்கள்
இதயமே நன்ஞவாய் மாறும் போலும்

அறிவென்ற பெருங்கோவில் உச்சி யின்கண்
அமைந்திட்ட கலசம்போல் பொலிராஜாஜி
செறிவொன்று நும்அன்பின் பண்பு கண்டு
சிறப்புடனே நீவிர்தரும் விருந்தை உண்டு
நெறிநின்ற நாவாலே உவகை யோடு
நேயத்தா லே'புனித ஆன்மா' என்று
பொறியொன்றிப் புலஞென்றிப் பகர்ந்தார்; அத்தப்
பொன்மொழியைக் கேட்டவன்யான் உண்மை! உண்மை!

பாங்குடனே 'ராஜகோ பாலன்' என்று
பண்புடைய நும்நாமம் எனது மைந்தன்
ஓங்கியநன் னலம்எய்தப் பெற்ருன் என்றே
உவப்புடன்வந் துறுகடிதம் தன்னைக் கண்டு
நீங்கரிய அன்புடனே அமுதம் ஊட்டி
நேயமுடன் என்னைவளர்க் கின்றீர் என்று
பூங்கரத்தால் வரைந்திட்ட ராஜா ஜிக்குப்
பொலிவுடைய நும்மீது கொள்ளை யன்பு

எப்பொழுதும் அறிவென்ற சிகரத் தின்கண்
இருக்கின்ற ராஜாஜி உம்மைக் கண்டால்

செப்பமுடன் மெல்ல மெல்ல இறங்கி வந்து
சீர்மிக்க பேரன்பின் வடிவம் ஆகி
ஒப்பற்ற இன்மொழிகள் நிரம்பப் பேசி
உவப்பின்கண் மூழ்கிடுவார் என்ருல் உம்மை
எப்படியான் புகழவல்லேன் தும்கை பட்டால்
இரும்பெல்லாம் பொன்னுக மாறும் ஐயா!

வண்ணமுறு கற்பனெனும் கடலின் கண்ணே
மாண்புடைய இதயமெனும் மத்தை நட்டு
நண்ணுமுணர் வென்கின்ற கயிற்றைச் சுற்றி
நாவென்னும் கரத்தாலே கடையுந் தோறும்
விண்ணவரும் மயக்கமுறப் புதுமை காட்டும்
வீறுடைய டி. கே. சி. இதயத் தின்கண்
புண்ணியஞ்சேர் மலரானீர்! அவர்தம் ஆன்மா
பூரிக்க மணம்பொழிந்தீர்! வாழ்த்துப் பெற்றீர்!

திருமருவும் நற்பாரி அருளி ஞலே
சீர்மருவும் ஒல்லேதரு மலரைப் போலக்
கருதுகின்ற போதெல்லாம் மணத்தை நல்கும்
கலைநலஞ்சேர் கவிதைபுனை யன்புச் செல்வர்
மருவுபுகழ்க் கவிமணியின் புனித நாவில்
மலர்ந்திட்ட கவிமாலை சூடப் பெற்ற
பெருமை உற்றீர்! சுப்பையா நம்பி! உம்மைப்
பீடுபெறு தமிழ் வாழ்த்தும் உலகம் வாழ்த்தும்

உலகமெலாம் பரவுகின்ற கம்ப நாடன்
உவப்புடனே மணிமுடியை இனிதே சூடி
நலமுடனே ஆட்சிசெய உள்ளம் நல்கும்
நற்செல்வர் கம்பனடிப் பொடியாம் நம்பி
இலகுமுவப் புடன் உம்மைப் போற்றிப் போற்றி
ஏற்றமுடன் வாழ்த்துகின்ருர் அவர்தம் வாழ்த்து
தலமனைத்தும் புகழ்கின்ற அகத்தி யன்றன்
தனிவாழ்த்தாம்! தமிழ்வாழ்த்தாம்! உலகவாழ்த்தாம்!

எவ்விடத்தில் தனித்தூய்மை யுளதோ; எங்கே
இனிமைபெறு நல்எண்ணம் உளதோ; யாண்டு
செல்விபெறு அறர்உளதோ; அங்கே அந்தத்
தெய்வந்தான் வீற்றிருக்கும் என்று சொல்வர்

திவ்வியநற் குணம்உம்பால் கண்டேன் அன்பு
சிறந்தோங்கல் பலகாலும் கண்டேன் ஐயா!
இவ்வியல்பால் நும்உள்ளம் சிவபி ரானுக்
கேற்றமுறு நற்கோவி லாகும் உண்மை,

நற்றருமன் யாகத்தில் விருந்துண் போரை
நலமுடனே கண்ணபிரான் உபசரித்த
பெற்றிதனைச் சான்றோர்கள் பகர்வர்; குன்றாப்
பீடுடைய கவிச்சக்ர வர்த்தி கம்பன்
உற்றுமகிழ் திருநாளில் வந்தோர்க் கெல்லாம்
உவப்புடனே நல்லமுதை வாரிவாரிப்
பற்றுடனே பரிமாறும் உங்கள் பண்பு
பாட்டுக்குள் ஏட்டுக்குள் அடங்கிப் போமோ!

உலகமுறு சராசரங்கள் யாவும் அந்த
ஒப்பற்ற சூரியனின் வெப்பத் தாலே
இலகுறுநன் னலமெய்தும் அதனைப் போல
ஏற்றமுறு கருவூரில் தங்கள் கையால்
நலமமைந்த புலவரினம் விருந்தை உண்ணும்
நற்கம்பன் கூடஒரு நாள்வந் துங்கள்
இலகியநல் லமுதுண்டு செல்வான்! அந்த
ஏற்றத்தைப் பெற்றஉமை வாழ்த்துகின்றேன்

மலரனைய உளமுடைய பெரியீர்! அன்பு
வடிவான ஆட்சியோடும், பொன்னே போல
இலகுபுகழ் மக்களொடும் மேலும் மேலும்''
இசைந்துவரும் நற்பேரக் குழுக்க ளோடும்
புலம்மருவும் பெருங்கீர்த்தி, செல்வம், வாழ்நாள்
பொலிவுடைய நற்சாந்தி யாவும் எய்திப்
பலர்புகழப் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க!
பரந்தாமன் திருவருளால் என்றும் வாழ்க!

கன்னித் தமிழ் ஓங்கக் கம்பன் புகழ் ஓங்க
மன்னு கணேசன் மகிழ்வோங்க — நன்னயமார்
சப்பைய நம்பி! துலங்கும் திருவருளால்
எப்பொழுதும் வாழ்க இசைந்து.

வாழ்க, வாழ்க

சுற்றமும் — நட்பும்

அன்பர்க் கருளும் அண்ணலே வாழ்க
அருந்தவர் போற்றும் அன்பே வாழ்க
அச்சந் தவிர்த்த ஐயா வாழ்க
அயரா உழைப்பு அமைந்தாய் வாழ்க
அடிமை அகற்றும் அருங்குணம் வாழ்க
ஆற்றல் பேனும் அழகே வாழ்க
இனிப்பரும் பெருமை இனைந்தாய் வாழ்க
இயல்பு தவரு இனியோய் வாழ்க
முயல்பு கைக்கொளும் முதல்வா வாழ்க
ஒற்றுமை காணும் உன்னதா வாழ்க
வேற்றுமை விரும்பா வேதியோய் வாழ்க
குன்றென நிமிர்ந்த குரவா வாழ்க
சூழுறும் துன்பம் துடைப்பாய் வாழ்க
நித்தமும் நலனே நினைப்பாய் வாழ்க
முத்தென வாழும் முறையோய் வாழ்க
நேர்படப் பேசும் நிமலா வாழ்க
நிறைவுறு செயலால் நிமிர்ந்தாய் வாழ்க
முறைப்படி கடமை முயன்ருய் வாழ்க
சிந்தா குலத்தின் செம்மல் வ்ாழ்க
செயலில் சிறந்த சிந்தையாய் வாழ்க
தீயோர்க் கஞ்சாத் திண்ணியாய் வாழ்க
தோல்வியில் கலங்காத் தோளாய் வாழ்க
தன்னே ரில்லாத் தோளாய் வாழ்க
நன்றே கருதும் நம்பி வாழ்க
நலனே விழையும் நல்லாய் வாழ்க
நூலணர் வறிந்த நுண்ணியாய் வாழ்க
நண்பர் போற்றும் நண்பா வாழ்க
பண்பில் குறையா பண்பாய் வாழ்க
பூவின் நாற்றம் போன்ருய் வாழ்க
காவின் நிழல்போல் கவிந்தாய் வாழ்க
அவையின் நடுவே அஞ்சாய் வாழ்க
சுவையின் பெருமை உணர்ந்தாய் வாழ்க

பெருமை மிளிரும் பெரியோய் வாழ்க
சிறுமை தவிர்க்கும் சீரோய் வாழ்க
அருமை காக்கும் ஆன்றோய் வாழ்க
பொறுமைக் கணியாம் பெண்ணுடன் வாழ்க
பூமயில் தன்னுடன் பொலிவாய் வாழ்க
தையல் நேரிழை தன்னுடன் வாழ்க
வள்ளி யம்மை மாதுடன் வாழ்க
நிறைந்த அன்புடன் நேராய் வாழ்க
அமைதியின் உருவே அம்மை வாழ்க
குனத்தின் குன்றே குலமே வாழ்க
மனைக்கியல் மாண்புறு மாதே வாழ்க
மங்கல மாகிய மங்கை வாழ்க
கொழுந்தனைத் தொழுதிடும் கோதை வாழ்க
பீடு தந்த பெண்ணே வாழ்க
கேடு நினையாக் கிழத்தி வாழ்க
பழிஅஞ் சிவாழும் பாவாய் வாழ்க
கனவிலும் இன்னது காணுய் வாழ்க
செய்யாள் உறையும் செல்வி வாழ்க
மலைமிசைத் தோன்றும் மதியே வாழ்க
அலையிடைத் தோன்றும் அமுதே வாழ்க
கலையிடைத் தோன்றும் கவினே வாழ்க
சிலைபோல் கலங்காச் சிந்தையாய் வாழ்க
நிறையின் நெறியின் நெகிழாய் வாழ்க
பொறையின் உருவாய்ப் பொழிந்தாய் வாழ்க
மறையோர் போற்றும் மானே வாழ்க
கறையில் வாழ்வு காத்தாய் வாழ்க
முகத்திலும் அகத்திலும் முனியாய் வாழ்க
சகத்தார் போற்றும் தாயே வாழ்க
விருந்து பேணும் மருந்தே வாழ்க
அறம்பொருள் இன்பம் ஆற்றிநீர் வாழ்க
உறுபசி போக்கி உயர்ந்துநீர் வாழ்க
செறுபகை நீக்கிச் சிறந்துநீர் வாழ்க
உன்னதநோக்கால் உயர்ந்துநீர் வாழ்க
மன்றின் நடுவே மதித்துநீர் வாழ்க
குன்றின் ஒளியாய் நின்றுநீர் வாழ்க
குடத்துள் விளக்காய் இருந்தீர் வாழ்க
காரன கருணை காத்துநீர் வாழ்க
தரன திண்மை சேர்ந்துநீர் வாழ்க

வேரன வலிமை வீற்றுநீர் வாழ்க
நீரென நெஞ்சம் நெகிழ்ந்துநீர் வாழ்க
ஏரென ஏற்றம் ஏற்றுநீர் வாழ்க
சுற்றம் காத்துச் சுகமுடன் வாழ்க
நற்றவர் பேணி நலமுடன் வாழ்க
உற்றவர்க் கருளி உயர்ந்துநீர் வாழ்க
கற்றவர் காத்து களிப்புடன் வாழ்க
செற்றவர் நீக்கிச் சிறப்புடன் வாழ்க
சிந்தை மகிழச் சீருடன் வாழ்க
முந்தையர் பிந்தையர் போற்றிநீர் வாழ்க
விருந்து புரந்து விருப்புடன் வாழ்க
பண்பார் வாழ்க்கை பாவித்து வாழ்க
வருதுயர் போக்கி வலிவுடன் வாழ்க
நேயர் மனதில் நீங்காது வாழ்க
நாயகம் பேணித் தரணியில் வாழ்க
செம்மை ஏறித் தேர்ந்துநீா வாழ்க
செல்வம் எட்டும் எய்திநீர் வாழ்க
சீரும் சிறப்பும் அடைந்துநீர் வாழ்க
பேரும் புகழும் பெற்றுநீர் வாழ்க
ஊரும் உலகமும் உயர்ந்தநீர் வாழ்க
கவலை ஒழித்துக் களிப்புடன் வாழ்க
மழைச்குக் குடையாய் மாறிநீர் வாழ்க
குடிமையும் குணமும் குன்ருது வாழ்க.
முதுமையில் இளமை பெற்றுநீர் வாழ்க
பொன்னும் பொருளும் பொலிந்து வாழ்க
மண்ணும் புகழும் வாய்த்துநீர் வாழ்க
பண்ணும் அறநெறி பரவிநீர் வாழ்க
பெயரர் தம்முடன் பெருமையாய் வாழ்க
பெயரர் பெயரரும் சூழ வாழ்க
வளமெலாம் பெற்று வாழ்க வாழ்க
வையகம் போற்ற வாழ்க வாழ்க
ஞாலம் துதிக்க வாழ்க வாழ்க
புவனம் போற்ற வாழ்க வாழ்க
மண்ணெல்லாம் மதிக்க வாழ்க வாழ்க
பாரெல்லாம் பாடிட வாழ்க வாழ்க
பன்னூ ருண்டு வாழ்க வாழ்க
பல்லூழி காலம் வாழ்க வாழ்க
வாழ்க வாழ்கென வாழ்த்துவம் யாமே

பாவாக்கம் அ. திலகவதி

பேரன் பேத்தியர் அன்புடன் வழங்கும் பாமாலை

விருந்தோம்பல்

செல்லம்

அகவாழ்வின் பயன்எல்லாம் விருந்து செய்யும்
அன்புடைமை எனக்கொண்டு அன்பர் தம்மை
குகன்அன்று ராமனிடம் வைத்த அன்பாய்க்
குழைவாக வரவேற்பார்! குளிர்சி ரிப்பால்
வகைவகையாய்ப் பணியாரம் நெய்யும் தேனும்
வாயூற வயிறுரக் கனியும் பாலும்
தொகை தொகையாய் உண்ணவைத்து அன்னை யாவார்
தொண்டுசெய்து பழுத்த பழம் எங்கள்ஐயா!

ஐயாவின் குறிப்பறிந்து ஆயா வள்ளி
அள்ளி அள்ளி இலைநிரப்பி அன்பைக்கொட்டி
தைமாதப் பொங்கலென உபச ரிப்பார்!
தனிப்பசுவின் நெய்யுருக்கி விருந்துசெய்வார்!
கையெடுங்க! சாப்பிடுங்க! பச்ச டிங்க
கற்கண்டுப் பொங்கலுங்க இன்னும் என்பார்!
மெய்யெல்லாம் விருந்துகமழ் ஐயா ஆயா
மேன்மேலும் மகிழ்ச்சியுடன் வாழ்க! வாழ்க!

பக்திச்சிறப்பு

உமையாள்

வெண்ணீரும் குங்குமமும் விவங்கும் நெற்றி!
வேதத்தின் மெய்ப்பொருளைத் துதிக்கும் நெஞ்சம்!
விண்ணிறைந்த பேரொளியை வியக்கும் கண்கள்!
விழுப்பொருளின் திருப்புகழை விரிக்கும்செவ்வாய்!
பண்ணிறைந்த அருட்பாடல் கேட்கும் காது!
பரம்பொருளை அலங்கரித்து நுகரும் மூக்கு!
கண்ணிறைந்த ஓம்சக்தி வணங்கும் கைகள்
கொடைபுகழ்ச் சுப்பையா எங்கள் ஐயா!

திருத்தலமாய் வேலங் குடிக் கொண்டார்!
தேவாரப் பாடல்வழித் திகழும் நல்லார்!
அருள்பெரிய நாயகியாம் அம்மை வாழும்
ஆலயத்தின் குடமுழுக்கைப் பலரும் ஏத்த
இருமுறைகள் செய்வித்த திருவின் செம்மல்!
இன்தொண்டால் தொண்டருக்கும் தொண்டர் ஆவார்!
திருப்பணியே சிந்திக்கும் ஐயா! ஆயா!
தெய்வத்தின் இன்னருளால் வாழ்க! வாழ்க!

நட்பு

கதிர்காமநாதன்

தாதவிழ்ந்த தாமரைபோல் தமிழ்மணக்கும்
தமிழ்க்கடலார் ராயசொ அவரைநன்கு
ஆதரித்து வளர்த்துவிட்ட சொமுருகப்பா
அருந்தமிழ்தேர் ரசிகமணி
ஈதலுக்குத் துணைநின்ற ஸிவிஸிடி!
எண்ணம் சொல் செயலாலே சிறந்தசெம்மல்
மூதறிஞர் ராஜாஜி, கொள்கைபோற்றி!
முன்னேற்றம் கண்டரா கிருஷ்ணமூர்த்தி
கல்விக்கும் தமிழுக்கும் மக்களுக்கும்
காலமெல்லாம் தொண்டுசெய்த இவர்களோடு
உள்ளத்தால் நட்பாகி உயர்ந்தவர்ஐயா!
உலகத்துச் சிறப்பெல்லாம் ஒருங்கு பெற்றார்
அள்ளூறும் தமிழ்க்கம்பன் தனைவளர்க்கும்
அடிப்பொடியாம் சாகணேசர் தன்னைப்போல்
வள்ளுவத்தின் வழிநடக்கும் ஐயா ஆயா
வளர்நட்பால் வாழ்வாங்கு வாழ்க! வாழ்க!

உழைப்பு

சுப்பையா (கண்ணன்)

வண்ண வண்ண மலர்சிரிக்கும் சோலை தன்னை
வாழ்விக்கும் தெய்வம்யார்? மழைநீர் தானே!

உண்ணஉண்ண நலங்கொடுக்கும் தாய்ப்பால்போல
உயிர்நலங்கள் தருவதுயார்? உழைப்புத்தானே!
எண்ணஎண்ணப் பெருமகிழ்ச்சி! அன்றும் இன்றும்
ஏற்றதாழ்வு உழைப்பினிலே பார்க்கமாட்டார்!
தன்னருகில் இருப்பவரும் உழைக்குமாறு
தகைசான்ற பணிசெய்யும் எங்கள் ஐயா!

சாதனையைச் சந்திக்கும் மனிதர் ஆகிச்
சரித்திரத்தைச் சந்திக்கும் மனிதர் ஆனார்!
ஊதியத்தைக் கணக்கிட்டு உழைக்கும் நாளில்
ஊதியமே உழைப்பென்று வாழும் ஐயா!
காதலுடன் அடுத்தடுத்துக் கடமை செய்வார்!
காரியங்கள் கைகொடுப்பார் அப்பத்தாளும்!
ஈதலுடன் இசைபடவே வாழும் ஐயா!
என்றென்றும் இன்பமுடன் வாழ்க! வாழ்க!

ஈட்டல்

(பெரிச்சியப்பன்)

உருள்தேருக் கச்சாணி போல இந்த
உயிர்வாழ்வின் அச்சாணி செல்வம் தானே!
பொளீட்டப் பலவழிகள் உண்டு; ஐயா
புகழ்வழியில் நடுநெறியில் நின்றுநாளும்
திருமகளை மனைவிளக்கம் ஆக்கிக்கொண்டார்!
திரைகடலைக் கடந்தன்று செல்வம் சேர்த்தார்!
கருவூரில் திருவிளங்கும் ஐயா! என்றும்
கலைநிறைத்துப் பெருமிதமாய் வாழ்க! வாழ்க!

கொடை

(தம்பி சுப்பு)

கற்றவர்க்குச் சிறப்புண்டு அறிவுச் செல்வம்
காசினிக்குத் தருவதனல்! பொருள் வளங்கள்
பெற்றவர்க்குச் சிறப்புண்டு! எளியவர்க்குப்
பெருங்கொடைகள் தருவதனல்! இதை உணர்ந்து

நற்றமிழைக் கற்றவர்க்கும், நலிந்தவர்க்கும்
நல்லபொருள் கொடை தந்தார்! சீர் அப்பத்தாள்
பொற்பணிகள் செய்வதற்குத் துணையாய் நிற்க,
புகழ்பொலிந்து எங்கள் ஐயா வாழ்க! வாழ்க!

அன்பு

[நன்முல்லை, உமையாள்]

அன்பிருக்கும் நெஞ்சத்தில்; வெளிப்பார்வைக்கு
அதட்டுவது போலிருக்கும் உண்மை இல்லை;
பண்பிருக்கும் வார்த்தைகளில்; கேட்பவர்க்குப்
படபடத்தல் போலிருக்கும்; உண்மை இல்லை;
இன்பிருக்கும் அரவணைப்பில் எம்மை அள்ளி
இதயத்தின் பக்கத்தில் தழுவிக் கொள்வார்!
கண்ணீருக்கும் கருமணியாய்க் காக்கும் எங்கள்
காதல்ஐயா அன்பினிக்க வாழ்க; வாழ்க

பாவாக்கம் பழ முத்துவீரப்பன்
—பேத்தி பாப்பிள்ளை



பேரன் பேத்திகளின் நடுவில்

தமிழ் இசை ஆர்வம்

சுப. இலக்குமணன்

சு. இராஜகோபால்

எங்கள் தந்தையார் அவர்கள் தமிழில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தமைக்கு அவர்கள் டி. கே. சி வட்டத்தொட்டியில் இருந்ததும், தொடர்ந்து கம்பன் கழகத் தொண்டராக இருந்து வருவதுமே சிறப்பான சான்றுகள். அவர்கள் தமிழ்க் கவிஞர்களான தேசியவிநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் ஆகியோரிடம் கொண்டிருந்த தொடர்புகள் தமிழ்ப் பாடல்களில் அவர்கள் கொண்டிருந்த பற்றுக்குச் சிறந்த சான்றுகளாகும். எனினும் அவர்கள் தமிழிசையை எப்பாடு பட்டாகிலும் பரப்ப வேண்டும் என்ற நாடிதுடிப்புடன் விளங்கினார்கள் என்பது தமிழகத்தில் இசைசசங்கம் நிறுவிய திரு ராஜா. சர். அண்ணாமலை செட்டியாரவர்களுடன் கொண்டிருந்த கடிதத் தொடர்பால் நன்கு விளங்குகிறது. எங்கள் தந்தையார் அவர்கள் எழுதிய கடிதமும் ராஜா. சர். அவர்களது பதிலும் இங்கு தரப்படுகின்றன.

கனம் டாக்டர் ராஜா. சர். அவர்கள்
அடையார் 27–5–1943

சபானு வைகாசி 13

அன்பு கெழுமிய ஐயா,

வணக்கம் பல.

தாங்களும் எங்கள் வித்யாசாலையின் விழாவில் வந்து கலந்து கொண்டு சிறப்பித்தமைக்கு மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.* எனது உயரிய வாப்பா சி. வி. சி. டி அவர்கள், விழாவில் பொன்னாடை போர்த்தியது பற்றிய பாடலை எழுதியனுப்பும்படி தாங்கள் விரும்பியதாகத் தெரிவித்தார்கள். அது போல் எழுதியுள்ளேன்.

---

* தந்தையார் அவர்கள் நடத்திய ஸ்ரீலோகநாயகி வித்யாசாலையின் 4வது ஆண்டு விழாவில் கவிமணிக்கு ராஜாசர் பொன்னாடை போர்த்தினார்கள்.

அன்று எங்கள் வீட்டில் ராஜாசர் விருந்துண்டார்கள். ரூ 500க்கு செக் ஒன்று அனுப்பி ஆண்டு தோறும் முதல் மதிப்பெண் பெற்றுத்தேறும் மாணவனுக்கும் பரிசுகொடுக்கச்சொல்லியுள்ளார்கள்

தங்கள் பேருக்கு ஏற்ப தமிழ் இசைக்கு ஒரு ராஜாவாக இருந்து நடத்திவருவது கண்டு மட்டடாங்கா மகிழ்ச்சி அடைகி றேன். தமிழ் இசையைப் பற்றிப் பிரசாரம் செய்து நமது நாட் டை அசைக்க முடியாத ஒரு கோட்டையாகக் கட்டிவிடவேண்டு மென்று பேரவா அடியேன் உள்ளத்தில் துடித்துக் கொண்டேயி ருக்கிறது.

நமது நாட்டில் உள்ள தமிழ்ச்சங்கம் இரண்டிலும் சுத்தத் தமிழ் ரத்தம் ஓடித் தமிழ்ப்பாட்டை வளர்க்க வேண்டுமென்கிற எண்ணம் இருப்பதாக அடியேன் உணரமுடியவில்லை, சங்கத்தில் தலைமையாக இருந்து 'மாலை போட்டுப் பலரைப்பழக்கம் செய்து கொண்டால் போதுமென்கிற அளவில்தான் இருக்கிறது.

மேற்படி இரு சங்கங்களிலும், எல்லோருக்கும் தெரிந்த பெரிய வித்வான்களையே கூப்பிடுகிறார்கள். அவ்வித்வான்களும் வாய்ப்பாட் டுக்காரர்களாகவும் இல்லை. புல்லாங்குழல், வீணைபோன்ற வாத்யங் களாகவும் போய்விடுகிறது. அவர்களுக்குப் பணம் கொடுக்கிற கட் டாயத்துக்காக தமிழ்ப்பாட்டைப் பாடிவிட்டுப் போகிறார்களே தவிர தமிழ் பாட்டை அபிவிருத்தி செய்ய வேணுமென்கிற எண்ணமே கிடையாது. நமது சங்கத்தார்களோ பல பேர் களை மெம்பராகச் சேர்த்து பணத்தை வசூலித்து தமிழுணர்ச்சியில் லாத பழயவித்வான்கள் கையில் தொடுத்து தமிழ் வளர்வதாக நினைத் துக் கொண்டு நம்பை ஏமாறச் செய்து விடுகிறார்கள். இங்கே ரூ 200 வாங்கிக் கொண்டு தமிழ் பாடுகிற வித்வான்கள் மற்ற இடத்தில் 50 100 வாங்கிக் கொண்டு தெலுங்கைத்தான் பாடுகி றார்கள்.

பொது ஜனங்கட்கு வேறே தமிழ்பாடும் வித்வான்கள் இருக் கிறார்களா? இல்லையா? என்பதும் தெரியாது. திரும்பத் திரும்ப இந்த வித்வான்களையே கல்யாணம் மற்ற விஷேசங்களுக்குக் கூப்பிடுகிறார்கள்.

ரேடியோவில் அநேக பெண்கள் தமிழ்ப்பாட்டுக்களை நன்று கப் பாடுகிறார்கள் அவர்களை அழைத்து வந்து கச்சேரிகள் வைத்துப் பார்த்து பொது ஜனங்களுக்கு அவர்களை அறிமுகப்படுத்தினால் தமிழ்ப் பாட்டுக்கச்சேரிகள் நடக்கவசதியாகவும் நமது இயக்கம் வளரவும் ஏதுவாயிருக்கும். பாடக்கூடியவர்களைப் பற்றியே பொது ஜனங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை.

சமீபத்தில் டி. கே. சி வந்தபோது அவர்களையும் சொ. முரு. அவர்களையும் கலந்து பேசியதில் இப்போது நடக்கும் கச்சேரிகளால் இயக்கத்துக்கு அதிகம் பிரயோசனம் இல்லையென்றும், நீங்கள் சொன்னது போல் ஏதாவது புதியவர்களாகவும், தமிழ்ப்பாட்டுக்களில் நம்பிக்கை உடையவர்கள்ளாகவும். பார்த்து ஜனங்கட்குத் தெரிவிப்பது தான் நல்லதென்றும் சொன்னார்கள். தாங்கள் யோசித்து ஏதாவது ஒருவழி காண்பித்தால் அதைபின்பற்றி நாங்கள் உழைக்கத் தயாராகயிருக்கிறோம். இப்போதிருக்கிற பெரியவித்வான்கள் இருந்தபடியேதான் தெலுங்குக்கு அடிமையாக இருக்கிறார்கள். நம்மள் சங்கத்தில் மட்டும் பாடிப் பணத்தை வாங்கிக் கொள்கிறார்கள். ஒருநாளைக்கு அதிகப் பணத்தைக் கொடுத்துக் கட்டாயப்படுத்தித் தமிழைப் பாடுவதால் அவர்கள் நம்மைப் பைத்தியகாரர்களென்று கூடக் கருதும்படியிருக்கிறது. *

அன்பும் பணிவுமுள்ள

பெ. மு. சுப்பையா செட்டியார்

RAJAH
SIR ANNAMALAI CHETTIAR
OF CHETTINAD

THE PALACE
CHETTINAD
4-7-1943

மகாஸ்ரீஸ்ரீ

பெ. மு. சுப்பையா செட்டியாரவர்கள்

ஆத்தங்குடி

பிரியமுள்ள ஐயா, தங்கள் கடிதங்கள் கிடைத்தன.

தமிழ் இசை வளர்ச்சியில் தங்களுக்கு இருக்கும் பேரார்வத்தைப் பார்க்க மனதிற்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாகிறது. உள்ளதை

---

* எங்கள் வீட்டில் வெகுநாளாகத் 'தமிழிசையைப் போற்றுங்கள்' என்று ஒரு தகரப் போர்டு மாட்டித் தொங்குகிறது. அதன் காரணம் இக்கடிதத்தைப் பார்க்கும் போதுதான் புரிகிறது.

உள்ளபடியே எழுதியிருக்கிறீர்கள். புல்லாங்குழல், பிடில், வீணை முதலிய தனி வாத்தியக்கச்சேரிகளைப் பற்றி எழுதியிருப்பதும் சரியே! அவைகளுக்கு அவ்வளவு முதன்மை தர வேண்டுவதில்லை. தமிழ் இசை இயக்கத்திற்கு ஆதரவளிக்கும் பொருட்டுச் சில வருஷங்களுக்கு வாய்பாட்டுக் கச்சேரிகள் மிக மிக அதிகமாக வேண்டும். இவைகளுக்கு அனுசரணையாக அவசியமாக விருக்க வேண்டிய பக்க வாத்தியங்களே போதுமானவை. இளம் பாடகர், பாடகிகள் முன்னுக்கு வரவேண்டியதைச் செய்யவேண்டியது தமிழ் இசைச் சங்கங்களின் முக்கியக்கடமைகளில் ஒன்று. தமிழ் நாட்டில் இளம் வித்வான்களில் அநேகர் மெச்சத்தகுந்த விதமாய்ப் பாடுகிறார்கள். முக்கியமாய் இவர்களாலேயேதான் தமிழ் இசை இயக்கம் பரவ வேண்டும். ஒரு வழியில் ஊன்றிபோன பாடகர்களை, அதாவது தெலுங்குப் பாட்டுக்களை அதிகமாகப் பாடிவரும் பாடகர்களை, மனம் மாறச்செய்து, புதுத்துறையில் இறங்கித் தமிழ் மக்கள் விரும்பும் தமிழ்ப் பாடல்களை அதிகமாகப் பாடச்செய்வது சிரமமான காரியம். இளம் வித்வான்களால் சுலபமாக முடித்துக் கொள்ளக்கூடிய ஒரு காரியத்தைத் தமிழ் இசையில் நம்பிக்கை இல்லாதவர்களைக் கொண்டோ அல்லது நம்பிக்கை குறைவாகவுள்ள பிரபல பாடகர்களைக் கொண்டோ சாதித்துக் கொள்வதென்பது முடியாது. தமிழ் நாட்டில் தமிழ்ப்பாட்டுகளைப் பாடவேண்டுமென்று வற்புறுத்தினல் தான் தமிழ் இசை இயக்கம் பெரிதும் பயன் அடையும். என்னல் கூடியதைச் செய்வதற்கு எப்பொழுதும் சித்தமாக விருக்கின்றேன்.

சென்னையில் ஸ்தாபித்திருக்கும் தமிழ் இசைச் சங்கம் வித்வான்களின் ஜாப்தா ஒன்று தயார் செய்து வருகிறது. அது பூர்த்தியடைந்த மேல் தங்களுக்கு ஒரு நகல் அனுப்புகிறேன்.

செட்டிநாடு, குமரன் பத்திராதிபர்களுக்கு இதன் நகலை அனுப்பியிருக்கிறேன்.

தங்கள்

(ஒ. ம்) மு. அண்ணுமலைசெட்டியார்

ஆத்தங்குடி அண்ணல்

கம்பன் அடிப்பொடி
காரைக்குடி

ஆத்தங்குடி திருவாளர் பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்கள் ஓர் அருமையான மனிதர். கரவிலா வெள்ளை உள்ளம் படைத்த கர்மயோகி. காந்தியடிகளை மனமார நேசித்து அப் பெருமானிடம் அசைவிலாத பக்தி கொண்டவர். மூதறிஞர் ராஜாஜியைத் தமது லட்சிய புருஷராகக் கொண்டு வாழ்பவர். தமது இளைய மகனுக்கு ராஜாஜியின் நினைவாக ராஜகோபாலன் என்று பெயர் சூட்டி மகிழ்பவர். 'என்னை உங்கள் வீட்டில் வைத்து ஊட்டி வளர்க்கின்றீர்கள்' என்று வாய் குளிரக் கூறி மகிழ்ந்தார் ராஜாஜி. இவரைக் கடந்த ஐம்பது ஆண்டுகளாக நன்கறிவேன் யான்.

சமுதாயம், நாடு, தெய்வம், இலக்கியம் போன்ற பல துறைகளிலும் ஈடுபாடுடையவர். எங்கெல்லாம் இலக்கிய விழாக்கள் நடக்கின்றனவோ அங்கெல்லாம் இவர்களைக் காணலாம். ஆலயங்கள், அங்கு நடைபெறும் திருவிழாக்கள், எல்லாவற்றிலும் பங்கு கொண்டு பணியாற்றும் பாங்குடையவர். தங்கள் சம்பந்தப்பட்ட கோயில்களில், எல்லாம் சரிவர நடைபெறப் பல நாளும் முயன்று பலரையும் சேர்த்துப் பிடித்து காரியங்களைச் சாதிப்பதில் தனித் திறமையுடையவர்.

இலக்கிய ஆர்வத்தால் ரசிகமணி டி. கே. சி. யிடம் மிக்க மதிப்புடையவர். குற்றாலத்திலும் போயிருந்து அவரிடம் பெரும் பற்றுக் கொண்டு உரையாடுவதுடன் அவர் விளக்கும் பாடல்களை எல்லாம் ஈடுபாட்டுடன் கேட்டு ரசிப்பார். இவரைக் கண்டு விட்டால், ரசிகமணியும் இவரை அருகில் அழைத்து வைத்துக் கொண்டு பாடல்களை வெகு சுவாரஸ்யமாக விளக்கத் தொடங்கி விடுவார்.

என்னவோ நாங்கள் விழித்துக் கொண்ட நேரம், நல்ல நேரம்! என்னிடமும் யான் ஈடுபடும் எல்லாத் துறைகளிலும், என்றும் பற்றும், பரிவும் கொண்டு உதவி வருகின்ருர். கம்பன் திருநாளில் தவருமல் வந்திருந்து, வரும் அன்பர்கட்கெல்லாம் நல்வரவு கூறி, பந்திக் கட்டில் உபசரிப்பதைத் தமது பெரும் பேருகக் கொண்டு

ஒழுகுவார். இங்கு மட்டுமா? தமது இல்லத்திலும் நண்பர் கட்கும் அன்பர்கட்கும் விருந்தளித்து மகிழ்வதையே தமது பெரும் பேருகக் கருதிவாழ்கின்ருர். கம்பன் திருநாள் போன்ற இலக்கிய விழாக்களில் மட்டுமா? இல்லை; அடியேன் ஈடுபட்ட தேர்தல்களிலும் கூட முழு மனத்துடன் ஈடுபட்டுப் பெரும் பணியாற்றியவர். ஒரு தேர்தலில் தோற்றுப் போனதைக் கண்டு பெரிதும் வருந்தி 'அறம் தோற்ருதே!' என்று ராஜாஜிக்குப் பெரும் வருத்தத்துடன் கடிதம் எழுதித் தமது மெய்யன்பைப் புலப்படுத்திக் கொண்டார்.

இளமைக் காலத்தில் திரு. ஈ. வே. ராமசாமி நாயக்கர் அவர்களின் உரையால் ஈர்க்கப் பெற்று நாத்திகம் பேசி நாத்தழும் பேறியவர் தான். ஆனல் பின்னர் காந்தியடிகள், ராஜாஜி, ரசிகமணி, 'கம்பன்', இவர்களின் உறவாலே தெய்வப் பற்றும், வழிபாடும் மிக்கவராய்த் திகழுகின்ருர். இன்று, நாள்தோறும் நெடுநேரம் கண்ணீர் சோரப் பிரார்த்தனை செய்வதைக் காணலாம். 'கம்பன் மணிமண்டப வளாகத்தில் திருவருட் பிள்ளையர் கோயில் மலர்ந்து பயன் சுரக்கின்றது' என்ருல் எல்லாம் இவர்களின் நல்லாதரவாலே தான்.

வேலங்குடி வயல் நாச்சியம்மன் திருக்கோயிலை வனப்புறக் கட்டியதுடன் பலகாலும் அங்கிருந்து முப்போதும் அம்மன் திருமுற்றத்திலிருந்து வழிபடும் வாடிக்கை உடையவராய் விளங்குகின்ருர். தாம் வழிபடுவதுடன் மட்டுமின்றி ராஜாஜி, காஞ்சிப் பெரியவர்கள் போன்ற அறவோர்களையும் அழைத்துச் சென்று வழிபாடு செய்யச் செய்வார். இப்படியே கரூரில் உள்ள பல கோயில்கட்கும் அன்பர்களை அழைத்துச் சென்று தரிசனம் செய்து வைப்பார்.

கல்விப் பணியில் ஆர்வமுற்று அன்பர் சிலர் கூட்டுறவுடன் ஆத்தங்குடியில் ஸ்ரீ லோக நாயகி வித்யா சாலையை நிறுவிப் பல ஆண்டுகள் தேசிய நெறியில் நடத்திப் பயன் சுரக்கச் செய்தார். அங்கு ரசிகமணி, கவிமணி முதலியவர்களை எல்லாம் அழைத்துச் சென்று விழாக்களை நடத்தி மகிழ்ந்தார்.

கம்பன் திருநாளில் '**கவிஞரைப் போற்றல்**' என்றொரு நிகழ்ச்சியை ஏற்படுத்தி அன்று சிறந்த கவியாகத் திகழ்ந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களை அழைத்து வந்து அவர்க்குப் பொன்

ஞடை போர்த்திப் புகழ் மாலை சூட்டுவது என்று திட்டமிட்டிருந்தேன். ஆனால் எதிர்பாராதவாறு 'வெள்ளையனே வெளியேறு' என்ற போராட்டம் தொடங்கி விட்டது. அதில் அடியேன் மும்முரமாய் ஈடுபட்டுச் சில காலம் கரந்துறை வாழ்விலும், பின்னர் சரணடைந்து தண்டனை பெற்று, நெடுநாள் சிறை வாழ்விலும் இருக்க நேரிட்டது. ஆனாலும் என் அன்பர்களான திரு. நா. சித. சிதம்பரம், சொ. முருகப்பா, பிச்சப்பாசுப்பிரமணியம் முதலியோர் எப்படியாவது கம்பன் திருநாளில் கவிமணியைப் பாராட்டி விட முயன்றனர். அப்போது ஜில்லா போலீஸ் சூப்ரண்டெண்டாக இருந்த தேவசகாயம் என்பவர் கம்பன் திருநாளுக்கு தடைவிதித்து விட்டார். டாக்டர். ராஜா, சர். அண்ணாமலை செட்டியார் அவர்களே நேரில் சென்று தேவசகாயத்திடம் எவ்வளவோ மன்றாடியும் இசையவில்லை. இது அரசியல் சம்பந்தமுடையதல்ல; தாம், டி. கே. சி. போன்றவர்கள் ஈடுபட்டு நடைபெறுவது, தாமே விழாவில் தலைமை தாங்கிப் பொன்னாடை போர்த்தவுள்ளேன் என்றெல்லாம் எடுத்துச் சொல்லியும் தேவசகாயம் தமது பிடிவாதத்தை விட்டுக் கொடுப்பதாய் இல்லை. ''கணேசன் சம்பந்தப்பட்ட எந்த விழாவையும் நடத்த அனுமதிக்க மாட்டேன்'' என்று வன்கண்மையாக இருந்து விட்டார்.

அப்பொழுது இந்த சுப்பையா செட்டியார் அவர்கள்தான் கம்பன் கழகப் பெயரோ, கணேசன் பெயரோ இல்லாமல் விழாவை நடத்தி விடுவோம், ஆனால் கணேசனின் எண்ணத்தை நிறைவேற்றினால் போதும் என்று ஒரே ஆர்வமாக நின்று கவிமணியின் பாராட்டு விழாவை ஆத்தங்குடியில் ஜாம் ஜாம் என்று நடத்தி முடித்தனர். டாக்டர். ராஜா. சர். அண்ணாமலை செட்டியாரவர்கள் தலைமை தாங்கிப் பொன்னாடை போர்த்திக் கம்பன் கழகம் செய்து வைத்திருந்த வெள்ளித் தட்டை வழங்கினார். டி. கே. சி., சொ. முருகப்பா, பிச்சப்பா சுப்பிரமணியன் முதலியவர்களைப் பாராட்டுரை வழங்கச் செய்திருக்கிறார். கவிமணி ஆனந்தக் கண்ணீர் பெருக்கி நாத்தழுதழுக்க நன்றி கூறியிருக்கிறார்.

இப்படியெல்லாம் அடியேன் இல்லாதபோதும் அடியேன் எண்ணத்தை அருமையாக நிறைவேற்றிய இப்பெருமகனாரின் கீர்த்தியை எத்துணைப் பாராட்டினாலும் தகுமன்றோ? முதன் முதலாகப் பொன்னாடை போர்த்தி ஒரு கவிஞரைப் பாராட்டிப் பரவிய நிகழ்ச்சி இதுதான். அதை எண்ணி எண்ணி இன்றும் நன்றி பாராட்டிக் கொண்டிருக்கின்றேன், நான்.

இவர்கள் மலேசியாவில் ஒப்பற்ற ஒரு துறைமுகமாக இன்று விளங்கும் கிள்ளான் என்னும் நகரில் வங்கித் தொழில் நடத்திக் கொண்டிருந்தார்கள். அப்பொழுதும் பொதுநல சேவையில் ஈடுபட்டு நின்ருர்கள். காந்தி, காங்கிரஸ் மட்டுமன்றி தொழிலாளர் இயக்கத்திலும் ஈடுபட்டுத் தீவிர வாதியாக விளங்கினர்கள். அப்பொழுது அந்நாட்டை ஆண்டு கொண்டிருந்த வெள்ளையரின் சீற்றத்துக்கு இவர் ஆளானதில் வியப்பொன்றுமில்லை. இவரையும் இவருடன் தோழமை கொண்டிருந்த R. H. நாதன் என்பவரையும் கைது செய்ய ஏற்பாடு நடைபெறுவதை அறிந்து யாரும் அறியாமல் அடுத்த நாள் பினங்கு சென்று அங்கிருந்து கப்பலேறிச் சென்னைக்கு வந்து விட்டனர். அதன் பிறகு மலேசியாவிற்குச் செல்லவில்லை. அதனுல் இவர்க்குப் பெரு நஷ்டம் ஏற்பட்டது. அன்று இவர்க்கு அங்கிருந்த சொத்துக்களை விற்காதிருந்தால் இன்று பெரும் பொருளுக்கு அதிபராக இவர் விளங்கக்கூடும்.

ஆண்டாண்டு தோறும் காரைக்குடிக்கு, கம்பன் திருநாளுக்கு வந்து பந்திக்கட்டில் அன்பர்களை உபசரிப்பதையே தம் அரும்பணியாகக் கருதியொழுகுவதை அன்பர்கள் யாவரும் நன்கறிவர். ஆனுல் ஓராண்டு, கரூரில் மாரியம்மன் திருவிழாவில் பங்கு கொண்டதால் காரைக்குடிக்குக் கம்பன் திருநாளுக்கு வர இயலாமற் போயிற்று. அந்த ஆண்டு ஆத்தங்குடியில் இவர்கள் வீட்டில் நகைகளைத் திருடர்கள் களவாடிச் சென்று விட்டனர். இவர்கள் அப்பொழுது ஆத்தங்குடியில் இல்லை. செய்தி அறிந்து ஆத்தங்குடிக்கு வந்து உரிய முறையில் போலீசில் வழக்கைப் பதிவு செய்து வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டார்கள். என்ருலும் இவர்கள் உள்ளத்தில் ஏதோ ஒரு குறுகுறுப்பு இருந்திருக்கிறது. கம்பன் திருநாளில் கலந்து கொள்ளாததன் குறையே இது என்று கருதினர்கள் போலும். ஒரு நாள் என்னிடம் வந்து, 'நீங்கள் இரண்டு நாள் ஆத்தங்குடி வந்து எங்கள் வீட்டில் தங்கி ராமாயணம் படிக்கவேண்டும்' என்று கூறினார்கள். மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டு அவர்கள் குறிப்பிட்ட நாளில் ஆத்தங்குடி போய்ச் சேர்ந்தேன். உள்ளூரில் உள்ள பல அன்பர்களையும் அழைத்து ஒரு ரசிகர் கூட்டத்தையே கூட்டி விட்டார்கள்.

யானும் முறைப்படி கம்பராமாயணத்தைப் படிக்கத் தொடங்கினேன். முதல் நாள் காலையும், மாலையும் சுமார் இரண்டிரண்டு மணி நேரம் குறிப்பிட்ட பாடல்களைக் கூறி உரைநயம் எடுத்

னுரைத்து முடித்தேன். முதல் நாள் பால, அயோத்யா, ஆரண்ய, கிஷ்கிந்தா காண்டம் வரை நான்கு காண்டங்களின் கதையை முடித்தேன். மறுநாள் காலை 9 மணிக்குச் சுந்தரகாண்டப்பகுதியைத் தொடங்கினேன். சுமார் 10.30 மணியிருக்கும்.

"கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்"

என்ற பாசுரத்தை ஓதி "கண்டேன் சீதையை" என்று அனுமன் கூறினன் என்றேனே இல்லையோ? போலீஸ்காரர் இருவர் 'தடதட' என்று நுழைந்தனர்; "திருடனைப் பிடித்தாயிற்று; பொருளும் கிடைத்து விட்டது." என்றார்கள். கேட்க வேண்டுமா அங்கிருந்தவர்களின் ஆனந்தத்துக்கு?

இந்த நிகழ்ச்சியிலிருந்தே திரு. சுப்பையா செட்டியாரின் நம்பிக்கை எத்துணை வலிவுடையது என்பது புலப்படுகிறதல்லவா? இல்லாவிட்டால் மகாகவி பாரதிதான்

நம்பினோர் கெடுவதில்லை — இது
நான்கு மறைத் தீர்ப்பு.

என்று பேசுவானா என்ன? இப்பொழுதெல்லாம் தவறாமல் கம்பன் திருநாளில் சுப்பையா செட்டியாரவர்களைக் காணலாம்.

இவருக்கு இரு மைந்தர்கள். இருவரும் தந்தையாரைப் போலவே அன்பும், பண்பும் நிரம்பியவர்கள். இளைய மைந்தன் தான் ராஜாஜியின் பெயரைப் பெற்ற இராஜகோபாலன். அந்த மைந்தனை எதற்குப் படிக்க வைக்கலாம் என்று என்னை ஆலோசனை கேட்டார்கள். வரலாற்றுத் துறையில் M. A. படிக்கச் செய்யுங்கள் என்று கூறினேன். அப்படியே செய்தார்கள். செல்வன் இராஜகோபாலனும் வரலாற்றுத் துறையில் M. A. தேறி இன்று மாநில அரசின் பழம் பொருளாய்வுத் துறையில் கல்வெட்டு, படிமக்கலை, சிற்பக்கலை முதலிய துறைகளில் புலமை மிக்க ஒரு சிறந்த ஆராய்ச்சியாளனாகத் திகழ்கின்றான்.

இப்படி எத்தனையோ வகைகளில் எனக்கும் இவர்க்கும் ஒரு நெருங்கிய - உளமொத்த - உறவு வேரூன்றி விட்டது. நல்ல அன்பும், பண்பும் நிரம்பி, தெய்வம் தெளிந்து, தெளிந்தோர்ப் போற்றி தேசபக்தி நிரம்பி, இலக்கிய ஆர்வம் மிக்கு, தொண்டுள்ளம் பெற்றுப்

பிறங்கும் இப்பெருமகனுர் இன்று எண்பதாண்டு நிறைந்து சதாபிஷேகம் கொள்ளுகின்றுர். ஆம்; மனைவி, மக்கள், மருமக்கள், பேரன் பேத்திகள், சூழ இறைவனைப் போற்றி இன்ப விழா கொள்ளுகின்றுர். இந்த நல்ல நாளில்,

எட்டுப்பத் தாண்டுகளை
  எய்தி மகிழ் சுப்பையா
பிட்டுக்கு மண் சுமந்தான்
  பேரருளால் - எட்டுணையும்
நோயின்றி இவ்வுலகில்
  நூறுண்டு சீரோங்கி
நேயமுடன் வாழ்க நிலைத்து

என்று மனமார வாய்குளிர வாழ்த்தி மகிழ்வோமாக!

எங்கள் தந்தையும் டி.கே.சி.யும்

சுப. இலக்குமணன், சு. இராஜகோபால்

எங்கள் தந்தையார் டி.கே.சி. அவர்களது வட்டத் தொட்டி-யில் ஒருவர். தந்தையார் அவர்களும், டி கே.சி. அவர்களும் ஒருவரை ஒருவர் சந்திக்கும் முன்பே ஒருவரை ஒருவர் தங்கள் தங்கள் நண்பர்கள் மூலம் அறிந்து வைத்துக் கொண்டனர். இருவரின் தாராளமான பண்பும், குண நலன்களும், விருந்தோம்பல் சிறப்பும் ஒருவரை ஒருவர் நெருங்கிச் சிநேகிக்கும் அளவில் கொண்டு வந்து நிரந்தரச் சிநேகிதர்களாக்கின. முதல் முறையாக எங்கள் தந்தையார அவர்களைச் சந்தித்ததையும், வேலங்குடியின் இயற்கை அமைப்பையும் வெகுவாக ரசித்த டி.கே.சி அவர்கள் இப்படி ஒரு கடிதம் எழுது கிறார்கள்.

டி. கே. சிதம்பரநாதமுதலியார்

வண்ணார் பேட்டை
திருநெல்வேலி
13-6-1942

அருமை நண்பர்,
சுப்பைபா செட்டியார்
அவர்களுக்கு

தேரெழுந்தூர், சிதம்பரம் முதலிய இடங்களுக்குப் போய் விட்டு சென்ற சனிக்கிழமை இங்கு வந்து சேர்ந்தேன். ஒரு வாரம் தங்களுடன் உறவாடக் கிடைத்தது பெரும் பாக்கியம். தங்கள் அன்பையும், விருந்தோம்பலையும், வேலங்குளத்தின் அமைப் பையும் ஒரு நாளும் மறக்க முடியாது. தங்களைப் பற்றிப் புகழ்ந்து அ.லெ. நடராஜன், ராமசாமி, சொ. முருகப்பா எல்லோரும் எவ்வளவோ பேசுவார்கள். தங்களை அது காரண மாகப் பார்க்க வேண்டுமென்ற ஆசை ரொம்ப இருந்தது. திருப்திகரமாய் உறவாட நேர்ந்தது. ரொம்ப சந்தோஷம்.

தங்கள்
டி.கே. சிதம்பர நாதன்

மீண்டும் தந்தையார் அவர்களும் டி.கே.சி அவர்களும் மதுரையில் சந்தித்தார்கள். தொடர்ந்து தந்தையார் அவர்கள் குற்றாலத்துக்குச் சென்று தங்கியிருந்தார்கள். அளவளாவி ஊர்

திரும்பியதும் நினைவுகளைக் கூறி டி.கே.சி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினுர்கள். புதிதாகத் துளிர்த்து விட்ட நட்பு நெருங்கித் தழைத்ததை டி.கே.சி அவர்கள் எழுதிய கடிதம் தெளிவாகக் காட்டுகிறது.

வண்ணுர் பேட்டை
திருநெல்வேலி
15-8-42

அருமை நண்பர்
சுப. அவர்களுக்கு

அன்பான கடிதம் கிடைத்தது. வைகைக் கரையில் தங்களோடு உறவாடும் பாக்கியம் கிடைத்தது. வேலங்குடியில் தங்களது விருந்தும் உபசாரமும் கிடைத்தன. பிறகு எங்கே தங்களைப் பார்க்கப் போகிறேம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனுலும் குற்ருலநாதர் நம்மைக் கைவிடவில்லை. குற்ருலத்துக்கே தங்களைக் கொண்டுவந்து சேர்த்தார். சில நாள் குற்ருலத்தை உடனிருந்து அனுபவித்தோம். நான் சொன்ன விஷயங்களை மிக்க ஆர்வத்தோடு இதயம் ஒட்டிக் கேட்டீர்கள். இதெல்லாம் எனக்கு எவ்வளவு சந்தோஷத்தைக் கெசடுத்ததென தாங்கள் தெரிந்து கொள்ள முடியாது. முருகய்பா, அ.லெ.ந., வெ.ரா., இவர்கள் எல்லோரும் தங்களை எவ்வளவோ பாராட்டிப் பேசுவார்கள். தங்கள் அரிய குணங்களை நேரில் அனுபவித்த பிறகு தான் நண்பர்களது பாராட்டுரைக்குப் பொருள் தெரிந்தது.......

தங்கள்
டி.கே. சிதம்பர நாதன்.

கவிமணி அவர்களுக்குச் செட்டி நாட்டில் பாராட்டுவிழா ஏற்பாடுகள் நிகழ்ந்து வந்தன. இச்சமயத்தில் டி.கே.சி அவர்களும் கவிமணியுடன் செட்டி நாடு வர வேண்டுமென்றும், வரும்போது மீண்டும் வேலங்குடியில் சிலநாட்கள் தங்க வேண்டுமென்றும் தந்தையார் அவர்கள் கடிதம் எழுதினுர்கள். ஏற்கனவே வேலங்குடியில் தங்கி ரசிகர் கூட்டத்துடன் டி.கே.சி அவர்கள் செயல் முறையில் 'தனித்தனி முக்கனி பிழிந்து', பாடலில் சொல்லியபடி சுவைத்ததும், விடுதியை எட்டி அமைந்து ஊரணியின் சுகமான காற்றை அனுபவித்ததும் டி.சி அவர்களை வெகுவாகக் கவர்ந்து விட்டன எனவே அவர்கள் எழுதிய பதில் கடிதத்தில்.

"தாமரைக் குளத்துக்கு கவிஞர் தேசிய விநாயகம் பிள்ளையுடன் வந்து ஜாகையில் இருந்து விருந்துண்டு உறவாடல் என்றால் அதை வேண்டாம் என்று யாரால் சொல்லமுடியும்" (12-3-1943 கடிதம்) என்று எழுதினார்கள். அதே கடிதத்தில் தந்தையார் அவர்களது அன்பைப்பற்றியும், ரசிகத் தன்மையைப் பற்றியும் பின்வருமாறு எழுதுகின்றார்கள்.

"இரண்டு கடிதங்களும் தங்கள் அன்பை எப்படியோ கொட்டுகின்றன, வைகைக்கரையிலும் இங்கே குற்றாலத்திலும் தாங்கள் என்னுடன் ஒட்டியிருந்து தமிழைச் சுவைத்த நயத்தை நான் மறக்கமுடியாது. தமிழைச் சுவைப்பார் தற்காலத்தில் அருமை என்பது தங்களுக்குத் தெரிந்த காரியம் தானே. இந்தயுகத்தில் தங்களைப்போன்ற ரசிகர்களைக் காணுகிறதென்றால் பூர்வத்தில் செய்த புண்ணியந்தான் தங்களை அன்பும் பாராட்டுதலும் கிடைத்தற்குரிய காரியமே".

கவிமணி அவர்களுடன் டி. கே. சி. அவர்களும் ஆத்தங்குடி வந்தார்கள். கவிமணிக்கு நடந்த பாராட்டு விழாவில் டி. கே. சியின் பாராட்டுதல்களும் மிகுந்திருந்தன. ஸ்ரீலோக நாயகி வித்யா சாலை ஆண்டு விழாவில் பள்ளிக்கூடங்களைக் கண்டாலே பிடிக்காத டி. கே. சி அவர்கள் கலந்து கொண்டார்கள். பள்ளி நாடகத்தை வெகுவாக ரசித்தார்கள். ஆம்! நாடகம் கம்பரில் ஒரு காட்சிதான். பள்ளியையும் கீழ்க்கண்ட விதத்தில் பாராட்டினார்கள். அதைக் குமரன் 13-5-1943 இதழ் 'ஸ்ரீலோக நாயகி கலைமகள் வித்யா சாலை ஆண்டு விழா' என்ற தலைப்பில் பின்வருமாறு எழுதியது. 'ரசிகமணி டி. கே. சி அவர்கள் பேசுகையில் பள்ளிக்கூடங்களில் தமக்கு நம்பிக்கையில்லை என்றும் அதிலும் சர்க்காரிடம் கிராண்டு வாங்கும் பள்ளிக்கூடங்களில் நம்பிக்கை அறவே போய் விட்டதென்றும் மிக நன்றாக எடுத்துச்சொன்னார். ஆனால் கிராண்டு வாங்காத சில பள்ளிக்கூடங்கள் செட்டியார் நாட்டில் மிக நன்றாய் நடத்தப்பட்டு வருகிறதென்றும் பிற பகுதிகளில் இவ்விதப் பள்ளிக் கூடங்களைப்பார்ப்பது அரிதென்றும், லோக நாயகி வித்யா சாலை மிக நன்றாய் நடத்தப்பட்டு வருகிறது என்றும் சொன்னார். திருவாளர்கள் பெ. மு. சுப்பையா செட்டியார், ராம. அழ. அழகப்பச் செட்டியார், சி. ராம. நா. நா. இராமனுதன் செட்டியார் ஆகிய மூவரும் சேர்ந்து இவ்வளவு சிறப்பான பள்ளிக்கூடத்தை நடத்தி வருவதைப் பற்றி மிகவும் பாராட்டிக் கூறினார்."

இப்படியொரு பள்ளி நடந்ததற்கு நல்லாசிரியர்களான திரு. ஆண்டியப்பா, தோழர் திரு. ப. ஜீவானந்தம் முதலியவர்கள் உறுதுணைதான் காரணம் என்று எங்கள் தந்தையார் அவர்கள் அடிக்கடி கூறுவதுண்டு. பிறகு நல்லாசிரியர்கள் இல்லாததால் பள்ளிக்கூடம் நிறுத்தப்பட்டது என்று அறிகின்றோம்.

இவ்வாண்டு விழாவில் செட்டி நாட்டரசர் அவர்கள் கவிமணிக்குப் பரிசாகக் கொடுத்த ரூ 1001/-யை வெள்ளிச்சாமான் களாகச் செய்து கவிமணிக்குச் சேர்ப்பதற்காக மீண்டும் தந்தையார் அவர்களுக்கும் டி. கே. சி அவர்களுக்கும் கடிதத் தொடர்புகள் இருந்தன. திருநெல்வேலிக்குத் தந்தையார் அவர்கள் சென்று ராவ்பகதூர் திரு. ஆவுடையப்ப பிள்ளை, டி. கே. சி அவர்களுடன் சேர்ந்து புத்தேரியில் கவிமணிக்குக் கொடுத்து மகிழ்ந்தார்கள்.

திரும்பிய போது சில நாட்கள் குற்றாலத்தில் தங்கினார்கள். குற்றாலத்தில் தங்கிய அந்த நாட்கள் அவர்களுக்கு கிடைத்தற்குரிய நண்பரும், குருதேவருமான ராஜாஜி அவர்களை அறிமுகப்படுத்தி நண்பர்களாக்கியது. ராஜாஜி, டி. கே. சி, கல்கி, தந்தையார் மற்றுமுள்ளோரும் அருவிகளுக்குச் சேர்ந்து நீராடப் போவதும், வழியில் அவர்கள் பேசும் இலக்கியச் சுவைகளை ரசிப்பதுமாக அந்நாட்கள் கழிந்தன. ஊர் திரும்பியதும் ஒரு கடிதம் டி. கே. சிக்குத் தந்தையார் அவர்கள் எழுதினார்கள்.

திரு. டி. கே. சி. அவர்கள்
குற்றாலம்

ஆருயிர் ஐயா! வணக்கம் பல. அடியேன் காலை 10 மணிக்கு இவடம் சௌக்கியமாக வந்து சேர்ந்து, மாலை அரியக்குடி போய் பேரன்பர்கள் சி. வி. ஆர். எம், சி. வி. சி டி. அவர்களைக் கண்டு மகிழ்ந்து பெருமாளைச் சேவிக்கும் பாக்கியம் பெற்றேன். கவிமணி அவர்களின் சாமான்களைச் சேர்ப்பிக்க வந்ததில் நான் பெற்ற இன்பம் பலப்பல.

கிடைப்பதற்கு அரிதான மாயனையும் வெல்லுகின்ற திறமை வாய்ந்த திரு. ராஜாஜி அவர்களின் தெரிசனமும், கற்பனாசக்தி உலகில் திறமை வாய்ந்த கல்கி அவர்களின் நட்பும், ஆங்கிலம் நிறைந்த வார்த்தைகளை அள்ளிக்கொட்டி அன்புக் கயிற்றால் கட்டிய

திரு. ஆவுடையப்ப பிள்ளை அவர்களின் ஆசிர்வாதமும் பெற்றது நான் செய்த தவப்பயனே.

'சுற்றுத ஊர் தோறும் சுற்ற வேண்டாம், புலவீர்
குற்றாலம் என்று ஒருக்கால் கூறுமின்'—என்று

தாங்கள் கூறுவதில் மிக உண்மை இருக்கின்றது.

குற்றால அருவி நீரோ புறத்தூய்மையைச் செய்கிறது
குற்றால நாதரோ அடியார்க்குக் காட்சிஅளித்து அருளுகின்றார்
குற்றாலவாசி சிதம்பரநாதரோ அன்பருக்கு அன்பராயிருந்து

'நான் நான்' என்று கூறும் ஆணவ மலத்தை உயரிய பாக்களால் போக்கி அன்பர்களை ஆட்கொள்கிறார்.

நமது அருமை நண்பர் சி. வி. ஆர். எம். அழகப்பா அவர்கள் ஆனிமாதக் கடைசியில் வருவதாக இருந்தார்கள். நான் பெற்ற இன்பத்தை அவர்களும் பெறவேணுமென்று கருதியும், ராஜாஜி அவர்கள், கல்கி அவர்கள் தங்கள் அருகில் இருக்கும் போது உண்டாக்கும் தங்கள் அமிழ்தச்சொற்களை அள்ளி உண்டு ஆனந்தக்கடலில் தவழவேண்டுமென எண்ணியும் பயனம் செய்து அனுப்பினேம்.

அன்பன்

பெ. மு. சுப்பையா.

தந்தையார் அவர்கள் இப்படி எழுதிய கடிதத்திற்குச் சில காலமாக பதில் கிடைக்க வில்லை. இது குறித்துத் தந்தையார் அவர்கள் கடிதம் எழுதினார்கள். அதற்கு டி. கே. சி அவர்கள் எழுதிய கடிதம்

டி. கே. சி

திருக் குற்றாலம்

23 - 11 - 44.

அருமை நண்பர் சுப. அவர்களுக்கு

வணக்கம்.

நமக்கிடையே கடிதப் போக்குவரத்து வெகு நாளாய் இல்லாமல் போய்விட்டது. சரி எழுத நான் ஆரம்பித்து விடுகிறேன். சென்ற ஒரு மாசமாக எனக்கு உடம்பு சரியாய் இல்லை காலில் அதாவது முழங்காலில் ஏதோ சிறு புண் உண்டாய் அது பெரிய உபத்திரவமாய்ப் போய் விட்டது. சென்ற ஒரு வாரமாக எல்லாம் சௌகரியந்தான். புண் நன்ருய் ஆறி வருகிறது. காய்ச்சல் நின்றுவிட்டது. நீரில் சர்க்கரை இல்லை. ஒரு வாரத்தில் சௌகரியப் பட்டு விடும் என்று டாக்டர் சொல்லுகிருர்.

காலில் கட்டுகள் (பாண்டேஜ்) இருந்த காரணமாக உட்காருவது கஷ்டம். நடப்பதோ முடியவே முடியாது. அதனுல் தான் கடிதம் எழுதாமல் இருந்து விட்டேன். ஆனுலும் தங்கள் அன்பையும் ரசிகத் தன்மையும், பரோபகாரக் குணத்தையும் மறக்க முடிவதில்லை. அழ. அவர்களைக் குற்ருலத்துக்குத் துரத்தினீர்களே. அந்த சினேகத்தின் மாட்சியை எப்படி எடுத்துச் சொல்ல முடியும்.

கோயில் திருப்பணி நன்ருய் நடந்தேறும் என்று நம்புகிறேன், தாமரைக் குளத்திலிருந்து வாசனை குற்ருலத்துக்கே வருகிறது. ஊதை, கொட்டகை, தாமரை இவைகளை எப்படி மறக்க முடியும். அப்படியேதான் தங்கள் உள்ளன்பையும், உபசாரத்தையும் மறக்க முடியாது.

தாமரை மணிகள் இருந்தால் நூறே, இருநூறே அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன். வீட்டில் அம்மாள் எல்லாரும் சௌக்கியந் தானே. அன்பர்களது ஆர்வத்தால் எனக்கு உடம்பு நன்ருய்த் தேறிவருகிறது.

தங்கள்

டி. கே, சிதம்பரநாதன்

தந்தையார் அவர்கள் குற்ருலத்தில் ராஜாஜி அவர்களுடன் பழகியது காரணமாக மிக்க பக்தி கொண்டார்கள். ராஜாஜி அவர்களை ஆத்தங்குடிக்கு அழைத்து உபசரிக்க வேண்டுமென்ற வேட்கையில் டி. கே. சி அவர்களுக்குக் கடிதம் எழுதி ராஜாஜி அவர்களை ஆத்தங்குடிக்கு வரவேண்டுமென்று தனக்காகச் சிபாரிசுக் கடிதம் எழுதச் சொல்லி எழுதினுர்கள். அதற்கு டி. கே. சி அவர்கள் ராஜாஜிக்குக் கடிதம் எழுதிவிட்டுத் தந்தையார் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுகிருர்கள்.

திருக்குற்றாலம்
7.12.4•

அருமை நண்பர் சுப. அவர்களுக்கு

தாங்கள் கடிதம் கிடைத்தது. ரொம்ப அழகாய் எழுதியிருக்கிறீர்கள். அன்புமயமாய் இருக்கிறது கடிதம். ராஜாஜி அவர்கள் வடக்கே வார்தா பக்கம் போயிருப்பதால் அவர்கள் குமாரருக்கு எழுதியிருக்கிறேன். தாங்கள் ராஜாஜியை ஆத்தங்குடிக்கு அழைப்பதாகவும், அழைப்பென்றால் மறுக்கக் கூடிய அழைப்பு அல்லவென்றும், தங்களுக்கு ரொம்ப உரிமையுண்டென்றும் எழுதியிருக்கிறேன். தந்தையார் சென்னை வந்ததும் சொல்லி ஆத்தங்குடி அழைப்பை ஞாபகப் படுத்த வேண்டும் என்றும் எழுதியிருக்கிறேன். சௌகரியம் செய்து கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன்.

தாங்கள் விருந்துக்கு ராஜாஜி வரும் போது நானும் உடன் இருக்க முடியவில்லையே என்று தான் ஆற்றாமை. தாமரை மணிகளைச் சாவகாசமாய் அனுப்பலாம் எனக்கு உடம்பு ரொம்ப சௌகரியம். வீட்டுக்குள் நடமாடுவதில் கஷ்டம் இல்லை

தங்கள்
டி.கே.சி.

தாமரைப் பூவின் நடுவில் உள்ள மணிகளைத் தந்தையார் அவர்கள் டி.கே.சிக்கு அனுப்பி வைத்தார்கள். அவை கிடைத்ததற்கு டி.கே.சி அவர்கள் ஒரு கடிதம் எழுதினார்கள். அடுத்து டி.கே.சி அவர்களுக்கு வைசூரி வந்திருப்பதாகத் தந்தையார் அவர்கள் அறிந்து அது பற்றி விசாரித்து ஒரு கடிதம் எழுதினார்கள். அதற்கு டி.கே.சி அவர்கள் எழுதிய அழகான கடிதத்தில் வைசூரி வந்து போய் விட்டது என்றும் அவரது ஆருயிர் நண்பர்களான தந்தையார். ராஜாஜி கல்கி, சதாசிவம் சின்ன வெங்கட்டராஜா முதலிய எல்லோரும் சதா அன்பை அவர் பால் செலுத்திக் கொண்டிருக்கும் போது, அந்த ஆன்ம சக்தி வீணாகவா போய் விடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

டி.கே.சி அவர்கள் சென்னையிலிருந்த போது, திரு. C.V.R.M அழகப்பா அவர்கள் வீட்டில் ஒரு திருமணம் நடந்தது. திரு.

அழகப்பா அவர்கள் டி.கே.சி, கல்கி, ராஜாஜி முதலியோர் திருமணத்திற்கு வரும் போது வேண்டிய வசதிகள் எல்லாம் எங்கள் தந்தையார் அவர்கள் கவனித்துக் கொள்வார்கள் என்று சொல்லியதைச் சுவையாக டி.கே.சி இப்படி எழுதுகின்ருர்

"எங்களை எல்லாம் தங்கள் பாதுகாப்பிலேயே வைத்து விடுவதாகச் கசர்ன்ஞர்கள் அழ- தாங்கள் தான் எல்லோரையும் மன்னிக்க வேண்டும்". (21.8 45உ கடிதம்)

அடுத்து 22.7.1946ல் டி.கே.சி அவர்கள் எழுதிய ஒரு நீண்ட கடிதம் வந்தது. அதில் தந்தையார் அவர்களுக்கு இருக்கும் 'திருவாசகத்தை டி.கே.சி அவர் விளக்கிக் கேட்க வேண்டும்' என்ற ஆர்வத்தை மிகவும் புகழ்ந்துள்ளார்கள். டி.கே.சி அவர்கள் எழுதியவற்றைப் புத்தகமாக்க வேண்டுமென்ற தந்தையார் அவர்கனது விருப்பத்திற்கு செய்யலாம் அவசரமில்லை, என்று எழுதியுள்ளார்கள். மேலும் வேலங்குடித் திருப்பணி பற்றியும், ராஜாஜி அவர்கள் பற்றியும் அதில் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை இங்கு பார்ப்போம்.

"அன்று வேளங்குடியில் சுவாமி தெரிசனம் விருந்து எல்லாம் அழகாய் இருந்தது மனசில் பதிய வைத்து ஆனந்தித்துக் கொண்டிருக்க வேண்டிய புனித காரியம் கோயில் திருப்பணி மூலமாகத் தங்கள் வள்ளன்மையும் பக்தியும் என்றென்றும் விளங்கிக் கொண்டிருக்கும்.

"எத்தனையோ விதத்தில் நாம் சந்தோஷம் அடைந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ராஜாஜியைப் புறக்கணித்தார்கள். திட்டிஞர்கள் இப்படித் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளுகிருர்களே ஜனங்கள் என்று வருந்திஞேம். வருந்தத்தான் முடிந்தது. வேறென்றும் செய்ய முடியவில்லை.

இப்போது எங்கேயோ வடநாட்டில் உள்ளவர் (நேருஜி தமிழர் அல்ல) ராஜாஜியை மதித்து அரசியல் கட்டுக்கோப்புக்கு இன்றியமையாத வஸ்து ராஜாஜியின் யோசனை என்று கண்டு அங்கீகரித்திருக்கிருர்.

நாம் சந்தோஷப்பட வேண்டியது தான். இந்த விதமாக

சந்தோஷப் பட்டுக் கொண்டும், வருந்திக் கொண்டும் இருக்க வேண்டியது நம்முடைய விதி. நம்மால் செய்யக் கூடியது ஒன்றுமே இல்லை.

தாங்கள் தான் ஒரே நிலையில் ராஜாஜியிடம் அன்பு வைத்துக் கொண்டிருக்கின்றீர்கள். எவ்வளவோ திருப்தியாய் இருக்கிறது."

ஒரே ஆண்குழந்தை இறந்த துக்கத்தில் 2 ஆண்டுகள் ஓடிய பின் ஜூலை 1947ல் இன்றைய மூத்த மகன் இல்க்குமணன் பிறந்தான். இந்தச் செய்தி தந்தையின் நண்பர்கள் எல்லோருக்கும் நல்ல செய்தி. கவிமணி, ராஜாஜி, நாமக்கல் கவிஞர், அன்றைய செட்டி நாட்டு ராணி சீதை ஆச்சி, நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் எல்லோரும் மிக்க மகிழ்ச்சியடைந்தார்கள். டி. கே. சி அவர்களும் குற்றாலத்திலிருந்து நல்லதொரு கடிதம் எழுதி, எல்லா நண்பர்களும் ஒன்று கூடியிருந்து செய்தி கேட்டு மகிழ்ந்ததை 28.7.47உ கடி தத்தில் எழுதியுள்ளார்கள்.

பம்பாய்க்குச் சென்று விட்டு 3.3.48ல் சென்னை திரும்பிய டி. கே. சி அவர்கள் கல்கிக் காரியாலத்தில் இருக்கும் போது தந்தையார் அவர்களது 24 . 2 . 48 கடிதத்தைக் கண்டு இன்புற்றார்கள். அன்றே தந்தையார் அவர்களுக்கு கடிதத்தைப் பாராட்டி ஒரு கடிதமும் எழுதினார்கள். கல்கியில் வந்த 'பொய்யா விளக்கே விளக்கு" என்னும் கட்டுரையில் பதிந்த பழைய நினைவுகளைக் கொண்டு வருவதாகத் தந்தையார் அவர்கள் குறிப்பிட்டிருந்ததை டி. கே. சி. கீழ்வருமாறு பாராட்டுகிறார்.

"கல்கியில் வந்த 'பொய்யா விளக்கே விளக்கு' என்னும் கட்டுரை அருமையான காட்சிகளை ஞாபகத்துக்குக் கொண்டு வந்து விட்டது. செண்பகாதேவிப் பக்கத்தில் உள்ள ஓடையின் பக்கமாக இருந்து சொன்ன குறள், தென்காசியில் சொன்ன திருவாசகம் எல்லாவற்றையும் ஞாபகப் படுத்தி விட்டது. இங்குள்ள நண்பர்கள் தங்கள் இலக்கிய உணர்ச்சியையும், பக்தியையும் ஒரே படியாய்ப் பாராட்டி வியந்து கொண்டிருக்கிறார்கள். ராஜாஜி அவர்களும் ரொம்பவும் அனுபவிப்பார்கள். கடிதத்தை அவர்களுக்கு அனுப்புகிறேன்.

"ராஜாஜிக்கு எவ்வளவோ வேலை தான் தொந்தரவு தான் ஆனாலும் தங்கள் அன்பு நிறைந்த, பண்பாடு நிறைந்த கடிதம்.

ஆறுதல், அமைதி, ஆனந்தம் எல்லாவற்றையும் கொடுத்து விடும். தங்கள் அன்புக்கு மிக்க நன்றி.

டி. கே. சிதம்பரநாதன்

(3.3.48 கடிதம்)

1949ல் கல்கி குடும்பத்தில் ஆனந்தி அவர்களுக்குத் திருமணம். தந்தையார் அவர்களும், கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்களும் திருவண்ணுமலை சென்று அங்கிருந்து சென்னைக்கு அத் திருமணத்திற்குச் செல்வதாய் இருந்தார்கள். ஆனுல் ரயில் போக்கு வரத்துத் தடைபட்டதால் திருவண்ணுமலையிலேயே தங்கி அதற்கு மேல் சென்னை செல்ல இயலாது போய் விட்டது. இது பற்றி கல்கி, டி. கே. சி., ராஜாஜி அனைவருக்கும் கடிதம் எழுதினுர்கள். டி. கே. சி. அவர்கள் அதற்குத் தந்தையார் அவர்களது கடிதத்தைப் பாராட்டி யும், தந்தையார் அவர்கள் திருமணத்தில் கலந்து கொண்டிருந்தால் எல்லோருக்கும் மகிழ்ச்சியாய் இருந்திருக்கும் என்றும், டெல்லி யிலிருந்து சென்னை வந்திருந்த ராஜாஜி அவர்களும் சந்தோஷப் பட்டிருப்பார்கள் என்றும் 18.5.49 தேதியிட்ட கடிதத்தில் எழுதி யுள்ளார்கள்.

21.2.1952-ல் ஒரு கடிதம் டி.கே.சி. அவர்கள் தந்தையார் அவர்களுக்கு எழுதினுர்கள். அது டி கே.சி அவர்களது ஹாஸ்யப் பேச்சு, எழுத்து நடை, கருத்துக்களுக்குச் சிறப்பான எடுத்துக் காட்டாகும்.

டி.கே. சிதம்பரநாத முதலியார்

திருக்குற்றுலம்,
தென்காசி,
21.2.52.

அன்பான சுப. அவர்களுக்கு வணக்கம்.

போஸ்ட் பார்சலில் கோல்டன்பங் பிஸ்கட் வந்தது. மிக்க சந்தோசம். ராஜாஜி சதா புகார் சொல்லிக் கொண் டிருக்கிறுர்கள். நான் சரியான படிக்கு ஆகாரம் உட்கொள்ள வில்லை என்பதாக. தாங்கள் அனுப்பிய பிஸ்கட்டை ஒரு கை பார்க்கிறேன். தேகம் திடம் பெற்று விடும். ராஜாஜியின் புகாரும் நின்றுவிடும். மிக்க சந்தோசம்.

தீப. தங்கம்மாளது கலியாணம் ஜனவரி 28வ. முடிவடைந்தது. வரிசை செய்கிற காரியமோ தொடர்ந்து கொண்டே வருகிறது. வெகு அழகான நாகரிகமான பட்டுத் துண்டுகளும், டேப்பு களும் வந்தன. தீப. தங்கம்மாள் இங்கேதான் இருக்கிறாள். அவளுக்கும் மற்றவர்களுக்கும் வரிசைகள் போஸ்ட் பார்சலில் வந்ததும் ஒரே சந்தோசம். தாங்களும், ஆச்சியும் எவ்வளவு அன்பு காட்டுகிறீர்கள். தாங்களும், ஆச்சியும் குழந்தையும் குற்றாலத்தை விட்டுப் போனதும் வீடு வெறிச்சோடிப் போய் விட்டது.

கொப்பனாப் பட்டியில் குமாரத்தி சௌக்கியந்தானே; பரிஷையைப் பற்றிக் கவனிக்க வேண்டாம்; எப்படியோ அது தொலையட்டும்; தேகத்தைத் தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டும், என்று மகளுக்கு எழுதுங்கள். உபாத்யாய வர்க்கத் துக்கும் எழுதிவிடுங்கள். உபாத்தியாய வர்க்கத்துக்குப் பச்சா தபாமே கிடையாது. தங்களுக்கும் தெரிந்தது தானே. ஆனாலும் எழுதிவிடுங்கள்.

எல்லோருக்கும் இங்கு எல்லாருடைய அன்பும்

டி. கே. சிதம்பரநாதன்.

1954-ஆம் ஆண்டு தந்தையார் அவர்களது நட்புக் குழாத்திற்கு நன்மை பயக்காத ஆண்டு. ஆம். இவ்வாண்டில் தான் கவிமணியும், டி.கே.சி.யும் காலமானார்கள். 17.2.1954-ல் டி.கே.சி. அவர்கள் கால மான செய்தி பத்திரிக்கைகளில் வெளியானது. மிக்க துக்கமடைந்த தந்தையார் அவர்கள் ஆறுதலுக்காக சென்னைக்கு ராஜாஜிக்கு அவர்களுக்கு ஒரு தந்தியும், குற்றாலத்துக்கு தீப. நடராஜன் அவர் களுக்கு ஒரு தந்தியும் கொடுத்தார்கள். ராஜாஜிக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதற்கு ராஜாஜி அவர்கள் ஒரே வரியில் அழுத்தமாக "நம் பெருஞ்சொத்தை இழந்து விட்டோம்" என்று பதில் எழுதி னார்கள். தந்தையார் அவர்கள் டி.கே.சி. அவர்களது ஈமச்சடங்குகளுக்கு குற்றாலம் சென்று கலந்து கொண்டு திரும்பினார்கள்.

இக்கட்டுரை எழுதும்போது டி. கே. சி. அவர்களது பேரன் திரு. தீப. நடராசன் அவர்கள், எங்கள் தந்தையார் அவர்கள் டி. கே. சி. அவர்களுக்கும், திரு. தீப. நடராசன் அவர்களுக்கும்

30 ஆண்டுகளுக்கு முன் எழுதிய இரு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்கள். ஆம் எங்கள் தந்தையார் அவர்கள் டி. கே. சி. அவர்களது கடிதங்களைப் பத்திரமாக வைத்திருந்து எங்களுக்கு இன்று பொக்கிஷமாகக் கொடுத்தது போலவே, குற்றாலத்திலும் டி.கே.சி. அவர்களும், அவர்கள் பேரன் அவர்களும் கடிதங்களைப் பத்திரமாக வைத்திருக்கிறார்கள் என்பதை அறிந்ததும் எங்களுக்குப் புல்லரித்துப் போய் விட்டது. இன்று, தீப. நடராஜன் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் 'நம் தந்தை' என்றே பல இடங்களிலும் எங்கள் தந்தையார் அவர்களைக் குறிப்பிட்டு எழுதும் பாங்கு எங்களை மெய்மறக்கச் செய்கிறது. ஆம்! இது தந்தையார் அவர் களும், டி.கே.சி. அவர்களும் கொண்டிருந்த நட்பின் ஆற்றல்தான்.

கவிமணியும் எங்கள் தந்தையும்

சுப. இலக்குமணன், சு. இராஜகோபால்

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களுக்கும் எங்கள் தந்தையாரவர்களுக்கும் இடையிலானநட்பு திரு சொ· முருகப்பா அவர்கள் மூலம் 1943 ஆம் ஆண்டிற்கு முன்னதாக ஏற்பட்டது. அந்நட்பு கவிமணி அவர்களது மறைவுக்குப் பிறகும், அவர்களது மாப்பிள்ளை திரு. குமாரசாமி அவர்களுடன் தொடர்ந்திருந்தது.

ஒருமுறை தந்தையார் அவர்கள் கவிமணி அவர்களை ஆத்தங்குடிக்கு வரவேண்டும் என்று அழைத்துக் கடிதம் எழுதியிருந்தார்கள். அதற்கு கவிமணி அவர்கள் ஒருகடிதம் எழுதினர்கள்.

புத்தேரி
10.3.43

அருமைநண்பர் திரு சுப்பய்யாச்செட்டியார்
அவர்களுக்கு.

தாங்கள் அன்புடன் அனுப்பின கடிதம் வந்து சேர்ந்தது. படித்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன். காரைக்குடிக்கு வந்து அப்பக்கத்திலுள்ள நண்பர்களையெல்லாம் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கு நெடுநாளாக ஏற்பட்டிருப்பதுண்டு. எந்நோயின் காரணத்தால் அது இதுவரையிலும் நிறைவேறவில்லை. வரப்போகிற கம்பர்விழாவோடு நிறைவேறுமென்று எண்ணிக்கொண்டிருக்கின்றேன். உடல்நலம் சீராயிருந்தால் தங்களையும் வந்து தரிசிப்பேன்.

நாமெல்லோரும் சேர்ந்து எடுத்தபடம்* எப்பொழுதும் என் கண் முன்னேயே இருக்கிறது. அதனல் தங்களையும் நண்பர் திரு. முருகப்பா அவர்களையும், ஸ்ரீமதிமரகதவல்லி அம்மாளையும் அவர்களது செல்வச்சிறுவனையும் ஒரு நிமிஷமேனும் மறந்திருப்பதில்லை.

தங்களுக்கு எல்லா நன்மைகளும் திருவருளால் உண்டாவதாகுக

தங்கள் அன்பன்
தேசிகவிநாயகன்.

---

*இந்தப்படம் 20 5.1943 குமரன் பத்திரிக்கையில் வெளிவந்துள்ளது.

அடுத்து இருமாதங்களில் கவிமணியே ஆத்தங்குடிக்கு வந்து விட்டார். அவர்கள் வருகை செட்டிநாட்டிற்கே பெருமை தருவதாக அமைந்தது.

காரைக்குடி கம்பன்கழகம் 'கவிஞரைப்போற்றுதல்' என்று ஒரு நிகழ்ச்சி முறையே ஏற்படுத்தியது. வெள்ளித்தட்டு ஒன்றும் (புதிதாகப் பொன்னுடை' என்ற 'சொல்லை உண்டுபண்ணி) பொன்னுடை போர்த்தப் பொன்னுடை ஒன்றும் தயார் செய்தது. அதில் முதல் கவிஞராக கவிமணி அமைய முடிவுசெய்தது. ஆனால் 'வெள்ளையனேவெளியேறு' இயக்கம் மும்மரமாக இருந்த தால் கம்பன் கழகச் செயலாளர் சிறைவைக்கப்பட்டார். அன்றிருந்த அரசு அதிகாரி செயலாளர் திரு சா. கணேசன் அவர்களது பெயரோ, கம்பன்கழகப்பெயரோ வெளிவருவதைச் சற்றும் விரும்பவில்லை. செட்டிநாட்டரசர் வேண்டுதல் கூட எடுபடவில்லை.

செட்டிநாடு கவிமணியைப் பாராட்டியே தீறுவது என்று முடிவு செய்தது, எனினும் பாராட்டுவிழா என்றால் கவிமணி வருபவரில்லை. ஒன்று கம்பன்விழா என்றால் வரக்கூடியவர். ஆனால் அதுவோ சாத்தியமில்லாது போய்விட்டது. எனவே காரைக்குடி அன்பர்கள் பல பொது நிகழ்ச்சிகளை ஏற்படுத்திக் கவிமணியை அழைக்க முனைந்தனர்.

அன்று எங்கள் குடும்பம், அழ அரு. குடும்பம், சி. ராம. நா. நா. ராம குடும்பம் ஆகியவைசேர்ந்து ஆத்தங்குடி முத்துப் பட்டிணத்தில் ஸ்ரீ லோகநாயகிவித்யாசாலை ஒன்று நடத்திவந்தன. அப்பள்ளியின் 14-வது ஆண்டு விழாவுக்கு கவிமணி அவர்கள் தலைமைதாங்க அழைக்கப்பட்டார். ஏற்கனவே இருவரிடமும் நட்பிருந்ததால் கவிமணி அவர்கள் எளிதில் ஒப்புக் கொண்டுவிட்டார்.

கவிமணியைக் காரைக்குடியில் பல அன்பர்கள் செட்டி நாடு சார்பாகப் பாராட்ட முனைந்தனர். ஆனால் தந்தையார் அவர்களது விடாமுயற்சியால் அப்பாராட்டுவிழா ஆத்தங்குடிக்கு மாற்றப்பட்டு ஆத்தங்குடியில் நிகழ்த்தி வெற்றிகண்டார்கள்.

ஆண்டு விழா நிகழ்ச்சிகளுக்கு முன்னதாகப் பாராட்டு விழா நிகழ்வதற்கான ஏற்பாடுகள் நிகழ்ந்தன. காரைக்குடி திரு. கி.

நாராயணன் செட்டியார் அவர்களது செல்வாக்கால் அன்றைய செட்டிநாட்டரசர் ராஜாசர் அண்ணாமலைச்செட்டியார் அவர்கள் ஆத்தங்குடிக்கு வந்து செட்டிநாட்டவர் சார்பாகக் கவிமணிக்குப் பொன்னாடை போர்த்துவதற்கு ஒப்புக்கொண்டார்கள். கவிமணிக்கு பொன்னாடை போர்த்தி மகிழ்ந்து ஒரு பாடலும் பாடப்பட்டது.

(பல்லவி)

பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தோம் புகழ்பாராட்டிப்
பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தோம்.

(அ. ப. வி)

எந்நாட்டவரும் புகழ்-தென்னாட்டரசன்
ராஜ அண்ணாமலை அவர்கள் வண்மைக் கரங்களினால் (பொன்)

(சரணம்)

ஓங்கும் பல வளங்கள் தாங்கும் நாஞ்சி நாட்டினில்
ஊராம் புத்தேரிதனில் சீராய் இளங்கிடுவோன்
எங்கும் தமிழன்னையின் இதயம் குளிர்ந்திடவே

இன்றமிழ் மலர் மாலை தந்த கவிமணிக்கே (பொன்)

இப்பாராட்டு விழாவுக்கு செட்டி நாட்டுப் பகுதியிலிருந்து பலரும் பல இலக்கியச்சங்க அமைப்புகளும் ஆத்தங்குடிக்கு வந்தனர் அவரவர் சார்பில் பாராட்டுப்பத்திரங்கள் வாசிக்கப்பட்டும், கம்பன் கழகத்தின் வெள்ளியால் ஆகிய தட்டும் வழங்கப்பட்டும் கவிமணி அவர்களுக்கு பாராட்டு விழாச் சிறப்பாக நிகழ்ந்தது. கவிமணி அவர்கள் தமிழ்த் தொண்டாற்றி வரும் நகரத்தார்களைப் புகழ்ந்த தோடு மட்டுமல்லாமல் செயல்பட்டு வரும் குமரன் காரியாலயம் சக்தி காரியாலயம், நவயுகப்பிரசுராலயம், புதுமைப் பதிப்பகம் ஆகியவற்றையும் புகழ்ந்தார்கள்.

அடுத்து கவிமணி அவர்களது தலைமையில் பள்ளி ஆண்டு விழா நிகழ்ந்தது. ஆண்டு விழாவில் பள்ளி மாணவர்கள் நடித்த நாடகம் பலரையும் கவர்ந்தது. பள்ளியின் சிறப்பும் செயற்பாடு களும் பலருக்கு நன்கு தெளிவாக பெரியதந்தையார் அவர்கள்

வாசித்த அறிக்கைகளின் மூலமும், பிறர் ஆற்றிய உரைகளின் மூலமும் விளக்கப்பட்டன. கவிமணி அவர்களுடன் மேடையிலிருந்த டி. கே. சி. அவர்கள் பள்ளியை வெகுவாகப் பாராட்டினூர்கள் பள்ளி களையும், உபாத்தியாளர்களையும் அறவே வெறுத்த டி. கே. சி அவர்களே பள்ளியை வெகுவாகப் பாராட்டினூர்கள் என்பது பள்ளிக்குக் கிடைத்த சிறப்பாகும். *

பள்ளி விழாவும், பாராட்டு விழாவும் நிகழ்ந்தகாலம் உலகப் போரால் விலைவாசிகள் எக்கச்சக்கமாக இருந்த பஞ்சகாலம் என்பது நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய ஒன்றுகும். இதை நினைவுபடுத்துவது போலக் 'கல்கி' அவர்கள் அனுப்பிய ஹாஸ்ய மான வாழ்த்துச்செய்தி அமைந்தது. நூல் விலை அதிகமாக இருக்கும் இக்காலத்தில் பொன்னுடையைப் போர்த்திக் கவியைத் தண்டிக்கலாமா? நூல் விலை அதிகத்துக்கும் பொன் என்றுல் காகித விலை அதிகப்பட்டதற்காக வெள்ளித்தாம்பாளம். பஞ்சமேற்பட்டால் தன வணிகர்களுக்கு நூல் பொன்னுகவும், காகிதம் வெள்ளியாகவும் மாறிவிடும்.

ஆத்தங்குடி, காரைக்குடி, பள்ளத்தூர் இன்னும் பிற இடங்களில் விருந்தும், விழாக்களும் முடிந்து கவிமணி அவர்கள் ஊர் திரும்பினூர்கள். ஆனுல் அவர்கள் நினைவில் தந்தையார் அவர்கள் நிலைத்து விட்டார்கள். கவிமணியின் மாப்பிள்ளை அவர்கள் கவிமணி அவர்கள் ஊர் திரும்பியதும் எழுதிய கடிதம்.

புத்தேரி
1-6-43.

உயர்திரு ஐயா, அவர்களுக்கு அநேக நமஸ்காரம்.

எனது மாமனுர் திரு. தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் கழிந்த மே 23ம்தேதி ஷேமமாக இங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்குச் செட்டிநாட்டுப் பெருமக்களாகிய தாங்கள் எல்லோரும் செய்த உபசாரமும் பாராட்டும் மிகச்சிறப்பாக இருந்த தென்பதைக் குமரன் பத்திரிக்கையிலிருந்தும் மாமனுர் அவர்கள் வாயிலாகவும் நன்றுக அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

பள்ளி ஆண்டுவிழா கவிமணி அவர்களுக்குப் பாராட்டு விழா நிகழ்ச்சிகளை அன்றைய 'குமரன்' வாரப்பத்திரிக்கை 13-5-43, 20-5-43 ஆகிய இதழ்களில் விரிவாக வெளியிட்டுள்ளது.

தங்களுக்குத் தமிழில் ஏற்பட்டிருக்கும் அன்பு அளவிற்கரியது ஆத்தங்குடியில் நடைபெற்ற பாராட்டில் தாங்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டதாக மாமனூர் அவர்கள் சொன்னார்கள் செட்டி நாட்டில் நடந்த இந்தப்பாராட்டு விழா மாமனூர் அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு விசேஷ சம்பவமாகும். இப்பெருமை தங்களைப் போன்ற நண்பர்களுடைய பயனே என்பதை ஒருநாளும் மறக்க முடியாது. தங்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாக இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

தங்களன்புள்ள

குமாரசுவாமி.

பொன்னாடை போர்த்திய ராஜா. சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் கவிமணிக்கு அன்பளிப்பாக ரூ 1001 எங்கள் தந்தையார் அவர்களிடம் கொடுத்துச் சேர்ப்பிக்கச் சொன்னார்கள். இந்தத் தொகையை வெள்ளிப் பாத்திரங்களாகச் செய்து கவிமணிக்கு வழங்க முடிவு செய்தார்கள்.

வெள்ளிப் பாத்திரங்கள் செய்வதிலும் பிறபல அலுவல்களாலும் 9 மாதகாலம் ஓடிவிட்டது. காலதாமதம் தந்தையார் அவர்களை வருத்தியது.[1] குற்றாலத்திற்கு டி. கே. சி அவர்களுக்குக் கடிதம் எழுதி டி. கே. சி அவர்களையும் புத்தேரிக்கு வந்து கவிமணி அவர்களுக்கு அரசர் அன்பளிப்பை வழங்க ஏற்பாடுகள் செய்தார்கள். வெள்ளிச் சாமான்களுடன் காரைக்குடியிலிருந்து புறப்பட்டு 28.5 44ல் திருநெல்வேலி வந்தார்கள். டி. கே. சி அவர்கள் திருநெல்வேலி ரயில் நிலையம் வந்து தந்தையார் பிற செட்டி நாட்டு அன்பர்களை அழைத்துக் கொண்டு திருநெல்வேலி திவான்பகதூர் ஆவுடையப்பப் பிள்ளை அவர்கள் வீட்டுக்கு வந்தார்கள். 29.5.44 அன்று தந்தையார், டி. கே. சி, திரு. ஆவுடையப்ப பிள்ளை அவர்கள் முதலானோர் புத்தேரி சென்று செட்டி நாட்டரசர் அவர்களது அன்பளிப்பான வெள்ளிப் பாத்திரங்களை வழங்கி மகிழ்ந்தார்கள். கவிமணி அவர்கள் தனது கடிதத்தில் 'தாங்கள் கொண்டு வந்த பெருமையால் அந்த வெள்ளிப் பாத்திரங்களைச் சொர்ண பாத்திரங்களாக நாங்கள் மதிக்கிறோம்' என்று குறிப்பிட்டுள்ளார்கள் மேலும் லோகநாயகி வித்யாசாலையைப் பாராட்டி ஒரு பாடலும் எழுதியனுப்பினார்கள். அந்தக் கடிதமும், பாடலும்:-

புத்தேரி
4.7.44

அருமை நண்பர் திரு. சுப்பய்யாச் செட்டியார்
அவர்களுக்கு.

தாங்கள் அன்புடன் அனுப்பின கடிதம் வந்து சேர்ந்தது. கடிதம் முழுவதும் ஒருமுறைக்கிருமுறை படித்துப் பார்த்தேன். என் மீதும், தமிழின் மீதும் தங்களுக்குள்ள அன்பு பொங்கி வழிந்திருக்கிறது. தாங்கள் செட்டி நாட்டுக்கு நான் வந்திருந்த பொழுது என்னேடு உடனிருந்து செய்த உபசாரமும், காட்டிய அன்பும் இம்மட்டு அம்மட்டல்ல. செட்டி நாட்டு ராஜா அவர்கள் எனக்களித்த பரிசுகளைத் தாங்கள் நண்பர் உயர்திரு. டி. கே. சி அவர்களோடும், திவான் பகதூர் ஆவுடையப்பப் பிள்ளை அவர்களோடும் இங்கு கொண்டு வந்தது மிகவும் பாராட்டற்குரியதாம். யாத்திரை வசதியில்லாத இக்காலத்தில் எவ்வளவோ சிரமமெடுத்து சொந்த அலுவல்களையும் மறந்து இங்கு வந்தீர்கள். தாங்கள் கொண்டு வந்த பெருமையால் அந்த வெள்ளிப் பாத்திரங்களைச் சொர்ணப் பாத்திரங்களாக நாங்கள் மதிக்கிறோம்.

மேலும் எனக்காகத் தாங்கள் ஊரிலிருந்தே பலகாரங்கள் செய்து கொண்டு வந்ததை நினைத்தால் என்மீது எவ்வளவு அன்பு தங்களுக்கு இருக்கிறது நீன்பது நன்ருகத் தெரிகிறது.

எனக்கு இப்பொழுது உடல்நலம் சீராய் இல்லை. எக்ஸீமவின் தொந்தரவு கொஞ்சம் இருந்து வருகிறது. அடிக்கடி தலைச் சுற்றும் உண்டாகிறது. ஆயினும் தங்கள் விருப்பத்தை நிறை வேற்ற வேண்டுமென்னும் ஆசையால் ஒரு பாடல் எழுதி இதனேடு அனுப்பியிருக்கிறேன்.

தாங்களும் செட்டி நாட்டார்களும் சகல நன்மைகளும் பெற்று நீடுழி காலம் வாழவேணுமாய் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

தங்கள் அன்புள்ள
தேசிக விநாயகன்.

கடிதத்துடன் வந்த பாடல்

வாழ்த்து

பாரோங்கு புகழ் வணிகர் மரபில் வந்தோர்
பைந்தமிழை மிகப்பேணி வளர்க்கும் அன்பர்
நேரோங்கு நெறிகண்டு தருமம் செய்வோர்
நெஞ்சு வந்து கைகுளிர நீதியளித்துச்
சீரோங்கு மாமுத்துப் பட்டணத்தில்
ஸ்ரீலோக நாயகியின் சிறப்புவாய்ந்த
பேரோங்க நிறுவிய நல்வித்தியாசாலை
பெருகிநிதம் தழைத்தோங்கி வளர்கமாதோ!

(சீரோங்கு மாமுத்துப்பட்டணம் = சீரோங்கும்-ஆ-முத்துப்பட்டணம் கைகுளிர நிதியளித்து—குறைவிலா நிதியளித்தது)

தந்தையார் பக்தியோடு வேலங்குடியே தஞ்சமென்றிருந்து திருப்பணி செய்து பெரியநாயகி அம்மனுக்குக் கும்பாபிஷேகம் நடத்தினுர்கள். அதற்குக் கவிமணி அவர்களுக்குவர ஆசை. உடல் நலத்தால் இயலவில்லை என்றும், கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும், அம்பாள் திருவருளால் அனைவரும் சுகமாய் வாழவும் தேவி பெரியநாயகியை இங்கிருந்தபடியே பிரார்த்தனை செய்து கொண்டிருக்கின்றேன், என்றும் புத்தேரியிலிருந்து கடிதம் எழுதினார்கள். கும்பாபிஷேகத்திருப்பணிகள் நிகழ்ந்து வரும்போது-1945ல் எங்கள் மூத்தசகோதரர் தவறிவிட்டார்கள் அதற்குக் கவிமணி அவர்கள்,

புத்தேரி
10.6.45

அருமை நண்பர் ஸ்ரீ சுப்பையாச் செட்டியார் அவர்களுக்கு,

தங்கள் கடிதம் வந்து சேர்ந்தது. பார்த்துத் திடுக்கிட்டுப் போனேன் 16 வயதுப் பையன் அதிலும் ஒரே பையன் என்றால் அவனுடைய பிரிவு ஒருவராலும் பொறுக்க முடியாததே. என்ன செய்யலாம். நம்மாலாவது ஒன்றுமில்லை மனதை ஆடவிடக் கூடாது. சமாதானமாயிருக்க வேண்டியதுதான். தங்களைப் போன்ற அறிஞர்களுக்கு விசேஷமாக நான் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை.

தங்கள் அன்பன்
தேசிக விநாயகன்

1947-ல் இன்றைய மூத்த பையனுன இலக்குமணன் பிறந்தான் அந்தச் செய்திக்குக் கவிமணி அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்து 29. 7. 47ல் கடிதம் எழுதினார்கள்.

அடுத்து 1952ம்ஆண்டு பிப்ரவரி மாதம் மனேவி, இரண்டு வயது இளேயமகன் ராஜகோபால் ஆகியோருடன் புத்தேரி சென்று கவிமணி அவர்களுடன் இருதினமிருந்து அளவளாவினுர்கள். அங்குக் கவிமணி அவர்கள் குடும்பத்துடன் ஒரு புகைப்படமும் எடுத்துக் கொண்டார்கள். கவிமணி அவர்களேப் 'பாட்டா' என்று அழைப்ப வரும், ஓவியப்புலவர் என்று வழங்கப்பட்ட ஆசிரியருமான திரு ஆதிமூலப்பெருமாள் அவர்கள் அந்தப் புகைப்படத்தை எடுத் திருக்கிறுர்கள், அதற்கு எங்கள் தந்தையார் கொடுத்த பணத்தை வேண்டாம் என்று கூறியிருக்கிறுர்கள். இல்லே என்று தந்தையார் அவர்கள் கொடுத்து விட்டார்கள். இதனே நினேவு கூறி திரு. ஆதிமூலப்பெருமாள் அவர்கள் 12-3-1952ல் ஒரு கடிதம் எழுதினுர் கள். அதில்

> "அன்று தாங்கள் எங்களிடம் 'ஐய! இந்த ரூபாயை நான் கொண்டு சென்றுல் இதற்கு 50 பங்கு எனக்குச் செலவாகி விடும் ஆகையினுல் இதைப் பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும், என்று கூறிய அமுதப்பொன் மொழியை எண்ணி எண்ணி உள்ளம் பூரிப்படைகின்றேன். சந்தர்ப்பங்களில் பிறரிடமும் உவமானமாகவும் கூறிவருகின்றேன். ஆகவே தங்களேப் போன்ற பெருமக்கள் நாட்டில் பெருகவேண்டுமென நம்பனேப் பணி கின்றேன்"

அவ்விரு நாட்களைக் கவிமணி அவர்களது மருமகன் அவர்கள் 3. 2. 52 கடிதத்தில் இவ்விதம் நினைவு கூர்கிறுர்கள். "தாங்கள் எங்களோடு இங்கிருந்த இரண்டு நாட்களையும் என்றும் மறக்க முடியாது. தாங்கள் காந்தியத்தைப் பற்றியும் உண்மையைப்பற்றியும் பேசிக் கொண்டிருந்த ஒவ்வொரு பேச்சும் என்மனத்தில் நிலேபெற்று விட்டன. தங்கள் அன்பிற்கு என்றும் கடமைப்பட்டுள்ளேன்."

கவிமணி அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டதை அடுத்துப் பையன் இராஜகோபாலன் மீது கவிமணி அவர்களேச்

கொண்டு பாடல்களை இயற்றவேண்டுமென முனைந்தார்கள். பாடல்களே எழுத இயலாதும், உற்சாகமில்லாதுமிருந்த கவிமணி அவர்கள் பாடல்கள் இயற்றினுர்கள் அப்பாடல்களுடன் ராஜாஜி, டி. கே. சி ஆகியோர் மீது கவிமணி அவர்கள் ஏற்கனவே பாடிய பாடல் களையும் சேர்த்து சிறுபுத்தகமாக அச்சிட்டு அன்பளிப்பாக அனைவருக்கும் வழங்கி மகிழ்ந்தார்கள்.

1954 ஆம் ஆண்டு எங்கள் தந்தையார் கவிமனி ஆகியோருக்கு இடையில் இருந்த நட்பிற்கு ஒரு துயரச் செய்தியைத் தந்தது. ஆம்! அவ்வாண்டு 26-9-54 ல் கவிமணி அவர்கள் காலமாகி விட்டார்கள். காலமாவதற்கு முன்னதாக உடல்நிலை பற்றி விசாரித்து எழுதிய கடிதத்திற்குக் கவிமணி அவர்களது மருமகன் அவர்கள் 15.9.54 ல் கீழ்வருமாறு பதில் தந்துள்ளார்கள்.

'தங்கள் கடிதம் கண்டு நெடுநாளாகிறது. மாமனுர் திரு. தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களின் உடல்நலம் மிகவும் மோசமாய்க் கொண்டே இருக்கிறது. உணவருந்தவும் பேசவும் இயலாதவர்களாக இருக்கிருர்கள். கவலைக்கிடமான நிலையிருக்கிறதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்."

மீண்டும் 18.9.54ல் தந்தையார் அவர்கள் கவிமணியின் உடல் நலம் பெறப் பிராத்தித்து எழுதினுர்கள். ஆனுல் இறைவன் கவிமணி அவர்களை 26.9.54ல் அழைத்துக் கொண்டு விட்டான். இச் செய்தியைப் பத்திரிக்கை வாயிலாகக் கண்ட தந்தையார் அவர்கள் துக்கமடைந்து அனுதாபத் தந்தி கொடுத்தார்கள். 9. 10. 54 அன்று புத்தேரி சென்று திரு. குமாரசாமி, திருமதி தேசிக விநாயகம்பிள்ளை ஆகியோரைத் துக்கம் விசாரித்தார்கள். 10.10.54 அன்று நிகழ்ந்த சடங்குகளில் கலந்து கொண்டார்கள். வடசேரியில் கவிமணி நிலையத்தையும், தேரூரில் கவிமணி அவர்களது இல்லத்தையும் கண்டு வணங்கினுர்கள். அங்குக் கவிமணியின் பெரியஅளவு உருவப் படம் அவர்களைப் பரவசப்படுத்தியது. 11 ஆண்டுகளுக்கு முன் கவிமணி அவர்கள் ஆத்தங்குடி வந்தபோது பொன்னுடை போர்த்தி வாசித்தளித்த வரவேற்புப் பத்திரமும் அங்கு காட்சிக் கிருந்து, அவர்களை உருக்கியது. மாலையில் திரு. வையாபுரிப் பிள்ளை அவர்களது தலைமையில் அனுதாபக் கூட்டம் நிகழ்ந்தது. அதில் தந்தையார் அவர்களும் பேசி அன்பின் அடையாளத் திற்கு அஞ்சலி செலுத்தினுர்கள்.

எங்கள் தந்தையும் ராஜாஜியும்

சுப. இலக்குமணன், சு. இராஜகோபால்

ராஜாஜி அவர்கள், தந்தையார் அவர்களுக்கு எழுதிய கடிதங்கள் சுமார் 50க்கு மேற்பட்டவை உள்ளன. இவற்றைத் தந்தையார் அவர்கள் பொக்கிஷமாகப் போற்றிப் பாதுகாத்து வருகிறார்கள்.

தந்தையார் அவர்களைப் பற்றிப் புத்தகம் வெளியிட முனைந்த போது எங்களைப் பார்த்து முசம் சுழித்தார்கள். நாங்கள் கண்டு கொள்ளாமல் மேலும் முனைந்த போது, "நான் புகழைத் தேடி 80ஆண்டுகள் வாழவில்லை நீங்கள் புத்தகம் போடுவது பிடிக்கவில்லை" என்று எதிர்வரிசையில் நின்றார்கள். எல்லோருக்கும் வேண்டுகோள் கடிதங்கள் அனுப்பிய போது அவர்களுக்கு மேலும் கடுப்பு, கோபம், வருத்தம்.

மெல்ல "என்ன புத்தகம் போடப் போகிறீர்கள்" என்று கேட்டார்கள். புத்தகத்தையே வெறுத்தவர்கள் மெல்ல விபரம் கேட்க வரும்போது நாங்கள் சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. ஆம், அவர்களுக்குப் பிடித்தது போல "ராஜாஜி பின் கடிதங்கள் பற்றிப் போடப் போகிறோம்" என்று சொன்னோம். மெல்ல எங்களுக்கு ஜயலட்சுமி அறிமுகமானாள்.

அவர்களிடமிருந்து ராஜாஜி மட்டுமல்லாது மற்றும் டி. கே. சி. கவிமணி முதலியோர் எழுதிய கடிதங்களைப் பெற்றோம். மெல்ல மெல்லக் கருத்துகளைப் பெற்றோம், நாங்கள் எடுத்துக் கொண்ட பணி தடைப்படக்கூடாது என்ற அளவில் அவர்கள் கருத்துக்கள் வட்டமிடும்படி வெற்றி கண்டு விட்டோம். எங்களுக்குப்பணி எளிதாகி விட்டது. எல்லா உதவிகளும் செய்ய முன்வந்து விட்டார்கள். ஆம்! ராஜாஜி எங்கள் தந்தையை எங்கள் வழிக்குக் கொண்டு வந்து விட்டார். 'ராஜாஜியிடம் அன்பு செலுத்துவது ஒன்றையே நோக்கமாகக் கொண்டவர்கள்' என்று திரு. சா. கணேசன் அவர்கள் குறிப்பிடுவார்கள் தந்தையார் அவர்களும் சுற்றம், நட்பு மற்றும் எல்லோரிடமும் ராஜாஜிக்கும் அவர்களுக்கும் நிலவிய அன்புப் பரிமாற்றத்தை அடிக்கடிப் பேசிப்பேசி மகிழ்வார்கள் எனவே இவ்விருவருக்கும் இடையே நிலவிய அன்பு பற்றிப் பேசப்போகும் புத்தகத்திற்கு அவர்கள் தடை விதிக்காததில் வியப்பில்லை.

1923ஆம் ஆண்டில் 21 வயதே நிரம்பிய எங்கள் தந்தையார் அவர்கள் 1920ல் காங்கிரசில் சேர்ந்ததின் பயனுகக் கதர்க்கடை வைக்க வேண்டுமென ஆவல் கொண்டார்கள். தமிழ்க்கடல் ராய. சொ. அவர்களுடன் ஈரோட்டுக்குப் பெரியார் ஈ. வே. இராமசாமி நாயக்கரை பார்க்கச் சென்ருர்கள். பெரியாரைக் கண்டு பிறகு பெரியாரிடம் சிபாரிசுக் கடிதம் பெற்றுக் கொண்டு சேலத்தில் ராஜாஜியைச் சந்தித்தார்கள். மீண்டும் சில தினங்களில் ராஜாஜியை பெரியார் அவர்கள் இல்லத்தில் சந்தித்தார்கள். ஆனுல் இந்தச் சந்திப்பு ராஜாஜி அவர்கள்பால் தந்தையார் அவர்களுக்கு ஒரு தொடர்பை ஏற்படுத்தித் தரவில்லை. இதற்கு ஒரு காரணம் உண்டு அது தந்தையார் அவர்கள் அடிக்கடி மலேசியாவுக்குச் சென்றதும். தொடர்ந்து பல தடவைகள் ஓரிரு ஆண்டுகள் அங்கேயே தங்கியது மாகும்.

1943 ஆம் ஆண்டு கவிமணிக்கு ஆத்தங்குடியில் பாராட்டு விழா. 1944 ஆம் ஆண்டு ராஜா. சர். அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் கவிமணிக்குத் தந்த ரூபாய் 1001 ஐ வெள்ளிப் பாத்திரங் களாகச் செய்துகொண்டு புத்தேரி சென்று திரும்பிய போது சில நாட்கள் டி. கே.சி அவர்களுடன் குற்ருலத்தில் தங்கினுர்கள். அப்பொழுது அங்கு டி.கே.சி அவர்களது விருந்தினராக ராஜாஜி அவர்கள் வந்தார்கள். தினமும் டி. கே. சி, ராஜாஜி, கல்கி, தந்தையார் மற்றும் சிலரும் செண்பகாதேவி அருவிக்குச் செல்வதும், வழியெல்லாம் பல இலக்கிய விவாதங்கள் செய்வதும் வழக்கமாக இருந்தது. திருக்குறள், திருவாசகம், கம்பராமாயணம் போன்றவை அவர்கள் விவாதங்களில் இடம் பெற்றன. இது தந்தையார் அவர்களை வெகுவாகக் கவர்ந்தது. டி. கே. சி, ராஜாஜி அவர் களுடன் ஒரு நெருங்கிய நட்புணர்வையும் பாசத்தையும் ஏற்படுத் தியது. குற்ருலம் விட்டு ஊர் வந்ததும் ராஜாஜி, டி. கே. சி முதலியவர்களுக்கு, இனிப்பு அதிரசங்கள் அனுப்பி "எனது செவி களுக்கு இன்சுவை அளித்த உங்கள் திருவாய்களுக்கு இனிப்புகள் அனுப்பியுள்ளேன்" என்று எழுதினுர்கள். அதற்கு ராஜாஜி அவர்கள் எழுதிய கடிதம் :-

தியாகராயநகரம் 21.6.44.
சென்னை

நமஸ்காரம்,

தங்களுடைய அன்பான கடிதம் குற்ருலத்தில் கிடைத்தது.

அதிரசமும் மற்ற பணியாரங்களும் எல்லாம் இருந்தாலும் தங்களுடைய அன்பும் குணமுமே நாங்கள் தினமும் பேசிப் பேசி அனுபவித்தோம். தாங்கள் குற்றுலம் விட்டுப் போனது முதல் ஊர் பெரும் வெளியாகத் தோன்றிற்று. அதற்கு ஓரளவு ஈடாகத் தங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். தங்களைக் கண்டது எனக்குப் பெரிய அனுபவம்.

இவண்
இராசகோபாலாச்சாரி.

1945ல் எல்லோராலும் புகழப்பட்ட எங்கள் சகோதரர் பெரிச்சியப்பன் அவர்கள் 16 வயதில் காலமுற்றுர்கள். இஃது எல்லோரையும் மிக வருத்தமுறச் செய்ததுடன் எங்கள் தந்தையாரை வெகுவாகப் பாதித்தது. அவர்களுக்கு ஆறுதல் கூறி ராஜாஜி அவர்களிடமிருந்து வந்த கடிதம் :-

குற்றுலம்
9.6.45

அன்பும்,
நமஸ்காரமும்.

தங்களுடைய கடிதம் இன்று இவ்விடம் என் கைக்கு வந்து சேர்ந்தது. இதற்கு முந்தியே ஸ்ரீ அ.மு. அவர்கள் மூலம் வருத்தப்பட வேண்டிய விஷயம் தெரிந்தது. மனிதனுக்கு எத்தனை பெரிய துக்கம் வந்தாலும் பொறுத்துக் கொள்ளக் கூடிய சக்தியை ஆண்டவன் தந்திருக்கிறுன். எதிர்பாராதபடி தங்களை வந்து அடைந்த இந்தத் துக்க சம்பவத்தைக் கேட்டது முதல் என் உள்ளம் துடித்தது. ஆனுல் நான் என்ன செய்ய முடியும்? அவரவர்கள் பாரம் அவர்களுக்குத் தான். தங்களுக்கு ஆண்டவனிடம் உள்ள பக்தி தங்களுக்கு உதவும். இறந்தவர்களுக்கு ஒரு துக்கமும் இல்லை. அதை நன்ருக மனதில் உணர்வதே நம்முடைய துயரத்தைத் தீர்க்கும் வழி.

இராஜகோபாலாச்சாரி

1946 ஆம் ஆண்டில் இரண்டு கடிதங்கள் ராஜாஜியிடமிருந்து வந்துள்ளன. அதில் ஒன்று **Member for Education** என்று டில்லி

யிலிருந்து வர்துள்ளது. இரண்டும் தந்தையார் அவர்கள் எழுதிய கடிதங்களுக்கு வந்த பதில்கள். தந்தையார் அவர்கள் எழுதிய கடிதங்களுக்கு நகல் இல்லாததாலும் ராஜாஜி அவர்கள் மிகச் சுருக்கமாக ஓரிரு வரியில் பதில் எழுதியிருப்பதாலும் விஷய பரிமாற்றத்தை யூகிக்க இயலவில்லை.

1947 ல் இன்று மூத்த மகனுக இருக்கிற திரு. இலக்குமணன் அவர்கள் பிறந்தார்கள். பிறந்த செய்தி கடிதத்திற்கு டில்லியிலிருந்து ராஜாஜி கடிதம் எழுதினர்கள்.

டில்லி 30-7-47

அன்பும் ஆசிர்வாதமும்

கடிதம் படித்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன். குழந்தைக்கும் பெற்றேருக்கும் என் ஆசிகள். எல்லா பாக்கியங்களையும் குழந்தை அடைய ஆண்டவன் அருள வேண்டும்.

இராஜகோபாலாச்சாரி

1950 ல் இன்றைய இளைய மகன் திரு. இராஜகோபால் அவர்கள் பிறந்தார்கள். அதற்கு ஆசிச் செய்தி வந்தது. அடுத்து சில தினங்களில் காரைக்குடியில் கம்பர் விழா. விழாவுக்கு ராஜாஜி, டி. கே. சி, கல்கி ஆகியோர் வந்திருந்தார்கள். ரயில் நிலையத்தில் ராஜாஜிக்குத் தந்தையார் அவர்கள் மாலை அணிவித்தார்கள். ராஜாஜி வேடிக்கையாகக் 'குழந்தை சார்பாகவா' என்று கிண்டல் செய்தார்கள். குழந்தைக்குப் பெயர் வைக்க எங்கள் வேலங்குடிக் கோயிலில் பூக் கட்டி வைத்து அன்னையின் திருவுளம் அறிவது மரபு. கட்டி வைத்த பூக்களில் ராஜாஜி அவர்களது பெயர் கொண்ட பூவே கிளம்பியது. தந்தையார் அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. இது குறித்து ராஜாஜி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினர்கள். அதற்கு இராஜாஜி அவர்களுடமிருந்து வந்த கடிதம்:-

சென்னை
18. 4. 50

அன்புடன்

உங்கள் 7உ கடிதம் இன்றுதான் பார்த்தேன. இத்தனை நாட்களும் கண் வலியில் படுத்த படுக்கை. எந்த எழுத்தும் பார்வை இல்லை.

சரி, இனி என்னை வீட்டிலேயே வைத்துக் கொண்டு அன்னம் ஊட்டி வளர்க்கிறீர்கள்.

ஆண்டவன் அருள்
இராஜகோபாலாச்சாரி

1951 - ஆம் ஆண்டில் எங்கள் சகோதரி அவர்களுக்குத் திருமணம். திருமண வைபவத்திற்கு வரவேண்டுமென்று மிகுந்த அன்புடனும், பக்தியுடனும் ராஜாஜி அவர்களை அழைத்தார்கள். ராஜாஜி அவர்களால் திருமணத்திற்கு வர இயலவில்லை. ஆசி செய்தி கூறி கடிதமொன்று எழுதினர்கள். அந்தக் கடிதத்தைத் தந்தையார் அவர்கள் அப்படியே கண்ணாடி, சட்டம் போட்டுப் பல காலம் வீட்டில் மாட்டியிருந்தார்கள் பிறகு அதன் புகைப் படத்தைக் கண்ணாடி போட்டு மாட்டியிருக்கிறார்கள்.

27.11.51

அன்பிற்குரிய
சுப்பையா அவர்களுக்கு,
ஆசீர்வாதம்.

திலகவதிக்கு என் உள்ளத்து அன்புடன் ஆசீர்வாதம். அவள் வாழ்க்கை ஆண்டவன் அருள் பெற்று எவ்விதத்திலும் சுகமாக நடைபெறவேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன். உங்களுடைய அன்பைப் பற்றி நான் என்ன சொல்லுவேன். இத்தகைய ஆன்மாக்களும் நம் நாட்டில் இருக்கிறார்கள் என்று எண்ணும் போது மனதில் தைரியம் உண்டாகிறது.

நான் திருமணத்திற்கு நேரில் வருவது முடியாதாயினும் என் உயிர் உங்கள் பக்கத்தில் இருக்கும். நானே பெண்ணை உங்கள் கை வழியாக நீர் வார்த்துக் கொடுத்ததாக வைத்துக் கொள்ள வேண்டும். மணமகனுக்கும் என் ஆசிர்வாதம்.

இராஜ கோபாலாச்சாரி.

இக்கடிதத்தில் ராஜாஜி, தந்தையார் அவர்கள் பற்றிக் கொண்டிருந்த கருத்தை மிக அழுத்தமாகக் கூறுகிறார்கள். ஆம் 'புனித ஆத்மா' என்றே கூறுகின்றார்கள்.

திருமணத்தின் போது கூட ராஜாஜி அவர்களை இல்லத்திற்கு அழைத்து உபசரிக்காத குறை தந்தையார் அவர்கள் மனதில்

இருந்து கொண்டே இருந்தது. 1952-ஆம் ஆண்டில் அந்த ஆசை நிறைவேறியது. அது ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலம். காரைக்குடிப் பகுதிக்கு வந்த ராஜாஜி அவர்களை எங்கள் இல்லத்திற்காவது அல்லது வேலங்குடிக் கோவிலுக்காவது வர-வேண்டுமென்று அழைத்தார்கள். அழைப்பைத் தட்ட இயலாத ராஜாஜி அவர்கள் வேலங்குடிக்கு வரச் சம்மதித்தார்கள் 24.10.1952-ல் வேலங்குடிக்கு வருகை தந்தார்கள். தந்தையார் அவர்களது உபசரிப்பிற்கும் பக்திக்கும் ஆளானுர்கள், ராஜாஜி அவர்கள் வருகையால் அன்பும், பக்தியும் கொண்ட தந்தையார் அவர்களது உள்ளம் பூரிப்பு அடைந்தது. இந்தப் பூரிப்புக்கு காரணம் டி. கே. சி. அவர்களே என்றும் அவர்களால்தான் ராஜாஜியின் அன்பு கிடைத்தது என்றும் எண்ணினுர்கள். இவற்றையே ராஜாஜி அவர்களுக்கு 30. 10. 1952-ல் இவ்விதம் எழுதுகிறுர்கள்.

30.10.1952.

உயர்திரு,
ஆருயிர் குருதேவரவர்களுக்கு,

வணக்கம்.

வேலங்குடியில் தாங்கள் புனித திருப்பாதம் படப்பெற்று அடியேனும் குழந்தைகளும் குடும்பத்தார்களும் தங்கள் திருவடி வனங்கித்தொழ அன்னை பெரியநாயகி அருள்புரிந்ததும் பெற முடியாத பெரும் பாக்கியமே.

அடியேன்பால் அன்புகனிந்து எங்கள் எல்லோரையும் ஆசீர்வதித்துச் சென்றமைக்கு எங்கள் இதயம் நிறைந்த வணக்கம். வணக்கம். வணக்கம்.

நமது அருமை ரசிகமணி அவர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளேன்.

குற்ருலநாதர் குழல்வாய் மொழி பங்கன் அருளாலும் ரசிகமணி அருளாலும்தான் தங்கள் அன்பைப் பெறும் பாக்கியம் பெற்றேன். அவர்கள் என்றும் மறவேன்.

அன்பன்
சுப்பய்யா

ராஜாஜி அவர்களது திருவடிகளைப் போற்றி வணங்கியது கடிதத்தில் மட்டும் எழுதிய ஒன்றல்ல. எப்போது ராஜாஜி

அவர்களைச் சந்தித்தாலும் சாஷ்டாங்கமாக பாத நமஸ்காரம் செய்வது தந்தையார் அவர்களுக்கும், எங்களுக்கும் வழக்கம். தந்தையார் அவர்களது இந்தக் கடிதம் கிடைத்தும் கிடைக்காமலும் இருக்கும் தாவாயிலேயே ராஜாஜி அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அது ராஜாஜியிடம் தந்தையார் அவர்கள் கொடுத்தனுப்பிய பழம், பலகாரங்களைக் குறிப்பிடுகிறது,

சென்னை
31.10 52.

ஆசீர்வாதம்.

பழமும் பணியாரமும் எல்லோரும் அனுபவித்தார்கள் உங்களுடைய கடிதமும் வந்தது தங்களுடைய வீட்டிற்கும் கோயிலுக்கும் சென்று திரும்பி வந்ததே இந்தத் தடவை காரைக்குடிக்கு நான் போனதின் முக்கிய விசயம்.

அன்புடன்
இராஜ கோபாலாச் சாரி

அடுத்து தமிழகத்தில் ஒரு பெரும் புயல் ஏற்பட்டு பலத்த சேதம் ஏற்படுத்திய நிலை. புயல் நிவாரண நிதிக்காகத் தந்தையார் அவர்கள் ரூ 101 அனுப்பி வைத்தார்கள். அதற்கு அரசு என்ற முறையில் 23.12.52-ல் ஒரு அலுவலகக் கடிதம் நன்றி தெரிவித்து வந்த போதிலும், அலுவலர் எழுதிய அக் கடிதத்தில் ராஜாஜி அவர்கள் கையெழுத்திடும் போது தனிக் கவனம் எடுத்துக் கொண்டு ''ஆண்டவன் அருளும்'' என்று சேர்த்து எழுதிக் கையெழுத்துப் போட்டுள்ளார்கள்.

1953-ஆம் ஆண்டில் வயிற்றில் கல் இருந்தது தொடர்பாகத் தந்தையார் அவர்களுக்கு வேலூரில் அறுவைச் சிகிச்சை நடந்தது. ஆபரேஷனுக்கு முன்னதாக "ஆண்டவன் அருளால் எல்லாம் சுகமாக முடியும்'' என்று ஒரு கடிதமும், 3 தினங்களில் மீண்டும் "உடல்நிலை குணமாய்க் கொண்டு வருகிறது. என்று நம்புகிறேன்'' என்று ஒரு கடிதமும் எழுதி ஆறுதல் கூறுகின்ற பாங்கு தந்தையார் அவர்களுக்கும், ராஜாஜி அவர்களுக்கும் இடையிலான ஒரு இணக்கத்தை வெளிப் படுத்துவதாகும்.

1954-ஆம் ஆண்டு பிப்ரவரியில் ராஜாஜி அவர்கள் கரூர் அருகில் வெண்ணெய் மலையில் நிகழ்ந்த தமிழ்நாடு காங்கிரஸ்

மாநாட்டிற்கு வந்தார்கள். வந்தவர்களை கதர் மாலை அணிவித்து வரவேற்ருர்கள். மதிய உணவு தயாரித்து ராஜாஜி அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு எடுத்துச் சென்று வழங்கி மகிழ்ந்தார்கள். மீண்டும் இரவு சிற்றுண்டி தயாரித்து வழங்கினுர்கள். ஆம், அன்று ராஜாஜி அவர்கள் கரூரில் தங்கியிருந்த இரண்டு உணவு வேளைகளிலும் தந்தையார் அவர்கள் தந்ததையே உண்டு. மகிழ்ந்திருக்கிருர்கள். சென்னை திரும்பியதும் தந்தையார் அவர்களுக்கு ராஜாஜி எழுதிய 19.2.1954-ஆம் தேதி கடிதத்தில், "கரூரில் உங்களுடைய உபசாரமும் பக்தியும் அனுபவித்தேன். எனக்குத்தான் லாபம்." என்று குறிப்பிடுகிருர்கள். ராஜாஜி அவர்கள் கரூர் வந்து சென்ற சில தினங்களில் தந்தையார் அவர்களது நட்புக் கூட்டம் டி.கே.சியை இழந்தது. அவர்கள் இழப்புக் குறித்து வருந்தி தந்தையார் அவர்கள் குற்ருலத்துக்குத் தந்தி கொடுத்ததோடு, நட்பு இழப்பின் ஆற்ருமை காரணமாக மற்ருெரு நண்பரான இராஜாஜிக்கு தந்தியும், கடிதமும் அனுப்பி ஆறுதல் வேண்டினுர்கள். ரத்தினச் சுருக்கமாக ராஜாஜி அவர்கள்,

"நம்முடைய பெருஞ் சொத்தை இழந்து விட்டோம்"

என்று பதில் எழுதினுர்கள். ஆனுல் அதில் ஆறுதல் வார்த்தைகள் எதுவும் இல்லை. ஆம். ஒருவரை ஒருவர் ஆறுதல் செய்ய இயலாத கட்டம் தான்; யாருக்கு யார் ஆறுதல் சொல்ல இயலும்.

தந்தையார் அவர்கள் அவ்வப்போது கல்கியில் வரும் கட்டுரைகளில் ஏற்படும் சந்தேகங்களை கடிதம் மூலம் ராஜாஜி அவர்களிடம் கேட்டுத் தெளிவு கொள்வதும், கட்டுரைகளால் ஏற்படும் மகிழ்ச்சியை ராஜாஜிக்கு எழுதிப் பகிர்ந்து கொள்வதும் வழக்கம். 1956-ஆம் ஆண்டு கோவையில் நிகழ்ந்த பட்டிமண்டபத்தில் 'ராமபக்தியில் சிறந்தவன் குகனு, சுக்ரீவனு. விபீஷனனு" என்ற தலைப்பில் விபீஷனனே என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. குகன்தான் சிறந்தவன், அவன் எவ்வித எதிர்ப்பார்ப்பும் இல்லாது பக்தி செலுத்தினுன் ஆனுல் தீர்ப்பு வேறு விதமாகக் கூறப்பட்டுவிட்டது என்று தந்தையார் அவர்கள் கருதினுர்கள் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. இது குறித்து ராஜாஜி அவர்களுக்கு 25-1-56-ல் கடிதம் எழுதினுர்கள். 26.1.56-ல் ராஜாஜியிடமிருந்து பதில் வந்தது.

C.RAJAGOPALACHARI 26.1.56 50, BAZULLAH ROAD
MADRAS-17

அன்புடன். கோவை கம்பன் பட்டிமண்டபம். ஊக்கமும் மகிழ்ச்சியும் தருவதற்காக போட்டிகள் நடைபெறலாம் ஆனால் இவ்விதமான விவாதங்களை வரம்புக்கு மிஞ்சி ஆராய்ச்சி செய்து கலவரப்பட வேண்டியதில்லை. "அப்பா நல்லவரா, அம்மா நல்லவரா?,' என்கிற கேள்வியைப் போல ஆஞ்சனேயன், குகன், லக்ஷ்மணன் முதலிய எல்லோருமே பக்திக்கு மூர்த்திகள். உணவு முக்கியமா? தண்ணீர் முக்கியமா? என்றெல்லாம் விவாதம் வேண்டாம்.

இராஜகோபாலச்சாரி.

1956-பிப்ரவரி மாதத்தில் எங்கள் தந்தையாரின் தாயாரான எங்களது பாட்டி இறந்துவிட்டார்கள். துக்கச் செய்தி குறித்து ராஜாஜி அவர்களுக்கு கடிதம் எழுதியபோது அவர்கள் எழுதிய ஆறுதல் கடிதம், மிகச்சிறந்த முறையில் ஆறுதல் அளிக்கக் கூடிய ஒன்று. இது தந்தையார் அவர்களுக்கு மிக்க ஆறுதலைத் தந்தது. அதுமட்டுல்ல தந்தையார் யாருக்கு ஆறுதல் கடிதம் எழுதினாலும் ராஜாஜி அவர்கள் எழுதிய வாசகங்களையே எழுதி ஆறுதல் சொல்லும் அளவுக்கு அது எல்லோருக்கும் ஆறுதல் தரக்கூடிய கடிதமாக அமைந்தது.

C. RAJAGOPALACHARI 28.2.56. 60. BAZULLAH ROAD
THYAGARAYA NAGAR.
MADRAS—17.

கீதை இரண்டாம் அத்தியாயம் படித்து பிறந்தவர் மறைந்து தான் தீரவேண்டும், ஆன்மாவுக்கு மரணம் இல்லைஎன்பதை நினைவூட்டிக் கொண்டு ஆறுதல் அடையவும். நாம் பெற்ற அன்பும், நாம் செலுத்திய அன்புமே உறுதிப்பொருட்கள். அவை ஆண்டவன் திருவுடலில் சேர்ந்து தூயநிலையடைந்து விட்டதாக மகிழ்ச்சியடைய வேண்டும்.

இராஜகோபாலச்சாரி

இவ்வாண்டு டிசம்பர் மாதத்தில் ராஜாஜி அவர்களது பிறந்த தினம் தொடர்பாகக் கல்குயில் 'ராஜாஜி அவர்கள் ஊன்றுகோலுடன் நிற்கும் படம் வெளியாகியும், 'பாரதரத்னம் ராஜாஜி' என்று ஒரு கட்டுரை வெளியிடப்பட்டும் இருந்தது. எங்கள் தந்தையார் அவர்கள் காந்தி நினைவு தினமாக ஒவ்வொரு வெள்ளிக் கிழமையையும் கொண்டு ராமபஜனை செய்து வருகிறவர்கள். அப்படி ஒரு தினம் பஜனைக்குப் பிறகு கல்கியில் மேற்சொல்லியபடி

வெளியாகியவற்றைக் கண்டும் படித்தும் கொண்டிருந்தார்கள். கட்டுரையில் 'ஸ்தித பிரக்ஞன்' என்று ராஜாஜி அவர்கள் குறிப்பிடப்பட்டிருந்தார்கள்; இது கண்டு ஏதோ ஒரு உணர்வு ஏற்பட்டு புல்லரிப்புடன் ஆனந்தக்கண்ணீர் ஏற்பட்டது. இது குறித்து ராஜாஜி அவர்களுக்கு எழுதி, 'ஸ்தித பிரக்ஞன்' என்றால் என்ன பொருள் என்று தெரியவில்லை, என்றும் இவ்வித மகிழ்ச்சி உண்டாகி விட்டது என்று எழுதினார்கள். ராஜாஜி அவர்கள் அதற்கு எழுதிய கடிதம்.

C. RAJAGOPALACHARI 8.12.56. 60. BAZULLAH ROAD.
THYAGARAJA NAGAR,
MADRAS—17.

அன்பும், ஆசியும்,

'ஸ்தித பிரச்ஞன்' என்றால் கலங்காதஉள்ளம். படைத்தவன். மகிழ்ச்சியும், துக்கமும் நிலைஇழக்கச்செய்யாத உள்ளத்தை உடையவன். இது என்னைப்பற்றிச் சொல்வது அன்பின் வேகம் அவ்வளவே.

ஆசிகள்
இராஜகோபாலச்சாரி

1957-ஆம் ஆண்டு பொதுத்தேர்தல். தேர்தலில் நின்று போட்டியிட்ட திரு. சா. கணேசன் அவர்கள் தோற்றுவிட்டார்கள். இது அவர்களது நெருங்கிய நண்பரான தந்தையார் அவர்களை வெகுவாகக் கலக்கமுறச் செய்துவிட்டது. அன்பர் சா. கணேசன் அவர்களை ஆண்டவன் சோதித்துவிட்டான். ஆண்டவன் அதருமம். தழைக்கச் செய்ததை என்னும்போது உள்ளம் வேதனைப்படுகிறது என்று எழுதினார்கள். அதற்கு ராஜாஜி அவர்கள் 9-3-57 தேதியிட்ட கடிதத்தில்

'அதருமம் வெல்லவில்லை. ராமாயணம் பாரதம் எதைப் படித்தாலும் இத்தகைய கட்டங்களைக் காணலாம். 'அதருமம் வெற்றியடைந்ததே' என்று உங்களைப் போலவே பல நல்லவர்கள் அழுதிருக்கிறார்கள். ஆனால் இந்த நிகழ்ச்சி அதருமத்தின் வெற்றியல்ல. பயத்தின், கோழைத்தனத்தின் தோல்வி. எல்லோரும் தைரியமாக சத்தியத்தின் காப்பாளர்களாக நடந்திருந்தால் முடிவு வேறு விதமாக இருந்திருக்கும்'' என்று எழுதித் தைரியப் படுத்தினார்கள். மீண்டும் நிகழ்ந்த தேர்தலில் திரு சா. கணேசன் அவர்கள் நின்று வெற்றி கண்டார்கள். தந்தையார் அவர்கள் ராஜாஜி தோல்வியின்

போது எழுதியவற்றை நினைவு கூறி, 'அதருமம் வெல்லவில்லை' என்று ஏற்றுக் கடிதம் எழுதினுர்கள்.

ராஜாஜி அவர்களுக்குத் தந்தையார் அவர்கள் ஏதாவது கொடுத்து அனுப்பிக் கொண்டே இருப்பார்கள். அதிரசம், மா உருண்டை, பிஸ்கட், வத்தல், ஊறுகாய் என்று ஏதாவது ராஜாஜிக்குச் சென்று கொண்டே இருக்கும். ஒரு முறை ஊறுகாய் சென்றடைந்ததை 'அன்பும் ஆசீர்வாதமும். ஊறுகாய் ஜாடி வந்து சேர்ந்தது நண்பர்கள் அன்புடன் வந்து தந்தார்கள். தங்களுடைய அன்பு ஊறிய எதுவும் சிறந்த பொருளாகும். நார்த்தங்காயைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை' (19-7-1963 கடிதம்)

இதேபோல பல கடிதங்களில் தந்தையார் அவர்களது அன்பைப் பற்றி பலதடவைகள் எழுதியுள்ளார்கள். சிலவற்றைக் கீழே காண்போம்.

தங்களுடைய அன்பும் குணமுமே நாங்கள் தினமும் பேசிப்பேசி அனுபவதித்தோம் (31.6.44)

அன்பு பொங்கி வடிந்த உங்கள் கடிதத்தை இன்று ஊர் திரும்பியதும் பார்த்தேன் (27-9 45)

அன்புடன் அனுப்பிய பி கோத்து பெட்டிகள் இரண்டும் கொண்டுவந்து தந்தார்கள். தங்கள் அன்பிற்கு இந்த அடையாளம் வேண்டுமா. இல்லை (7.4.59)

என்பேரில் தங்களுக்குள்ள அன்புக்குக் கரையில்லை. (30.12.61)

என்பால் உள்ள உங்கள் அன்பு தேவியின் அவதாரமே (11.12.1963)

நான் தங்கள் அன்புக்கு என்ன கைமாறுசெய்ய முடியும்! .11.66

உங்களுடைய அன்பைப் பற்றி நான் என்ன சொல்லுவேன். இத்தகைய ஆன்மாக்களும் நம்நாட்டில் இருக்கிறுர்கள் என்று எண்ணும்போது மனதில் தைரியம் உண்டாகிறது. (27.11.51)

இவை தவிர நேரில் குடும்பத்துடன் செல்லும் போதெல்லாம் அளவளாவுவதும் தந்தையார் அவர்கள் செலுத்தும் அன்பைப் பாராட்டுவதும் குடும்பத்தினரும், நண்பர்களும் பல தடவை அனுபவித்தவையாகும்.

தந்தையார் அவர்கள் எந்தப்பொருள் கொடுத்தாலும் ராஜாஜி அவர்கள் உடனே சுவைத்துப்பார்த்து விடுவார்கள். உணவுக்கட்டுப்பாட்டில் இருக்கும் போது கூட அவ்விதம் செய்து விடுவார்கள். அவர்களைக் கவனித்து வந்த நாமகிரிஅம்மாள், திரு சுப்ரமணியம் போன்றவர்கள் பதறுவதையும், எங்களிடம்

அவையெல்லாம் உணவுத்திட்டத்தில் இல்லை, ஆகாது என்று விளக்குவதையும், தந்தையார் அவர்கள் ராஜாஜி அவர்களுக்கு ஒத்துக்கொள்ளக்கூடியது எது என்று அவர்களிடம் விசாரித்துக் கொள்வதையும் மறுமுறை அதபோல அனுப்புவதையும் நாங்கள் பலமுறை கண்டுள்ளோம்.

ராஜாஜி அவர்களது பிறந்ததினங்கள் தோறும் வீட்டில் ராமபஜனை நிகழும், விபூதிபிரசாதங்கள் ராஜாஜிக்குச் செல்லும். ராஜாஜி மறைந்த பிறகும் அவரது பிறந்த தினங்களில் வீட்டில் ராமபஜனை நிகழ்கிறது. பள்ளிகளில் ராஜாஜி, ஜெயந்தி கொண்டாடச் செய்து இனிப்பும், பாலும், பழமும் வழங்கி வருவது எங்கள் குடும்ப மரபாகி விட்டது.

1972 ஆம் ஆண்டில் இளையமகன் ராஜகோபாலனுக்குத் திருமணம் அவ்விழாவில் ராஜாஜியின் புத்தகம் ஒன்றை வெளியிட முனைந்தார்கள். ராஜாஜியிடம் குடும்பத்துடன் சென்று நேரில் வெளியிட அனுமதிகேட்டார்கள். ராஜாஜியின் புத்தகத்தைத் திருமணத்தின்போது இலவசமாக கொடுக்க இருக்கிறோம், 1000 புத்தகங்கள் என்று அறிந்து ராஜாஜி அவர்கள் கொண்ட பூரிப்பையும், 1000 புத்தங்களாக! என்று அடைந்த ஆச்சரிய ஆனந்தத்தையும் நாங்கள் நேரில் கண்டு அனுபவித்தோம். பஜகோவிந்தம் புத்தகங்கள் 1000 அச்சிட்டு இலவசமாக வழங்கப் பட்டது. மணமக்களை வாழ்த்திய ராஜாஜி அவர்கள் புத்தக அன்பளிப்புப் பெறுபவர்களையும் முன் கூட்டியே வாழ்த்தி எழுதித் தந்தார்கள்.

1972 டிசம்பர் மாதத்தில் ராஜாஜியவர்கள் மரணப்படுக்கையில் இருந்த போது குடும்பத்தோடு காரில் சென்னை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். வானொலியில் விட்டு விட்டு ராஜாஜி அவர்களது உடல்நிலையை அறிவித்துக் கொண்டிருந்தார்கள். பல்லாவரம் அருகில் செல்லும் போது ராஜாஜி அவர்கள் காலமாகி விட்டார்கள். தொடர்ந்து ராஜாஜி மண்டபத்துக்கு பூத உடல் எடுத்துச் செல்லப்படும் என்று அறிந்து நேரே அங்கு சென்றோம். நாங்கள் மண்டபத்தினுள் நுழைவதற்கும் ராஜாஜி அவர்கள் உடல் உள்ளே வருவதற்கும் சரியாக இருந்தது. பலத்த காவல் ஏற்பாடுகளுக்கிடையில் ஆச்சரியப்படத்தக்க வகையில் பல தடைவிதிப்புகளைத் தாண்டிச் செல்ல எங்களுக்கு எப்படியோ அனுமதி கிடைத்துக் கொண்டே இருந்தது. ராஜாஜி அவர்கள் உடல் மக்கள் பார்வைக்காக வைக்க ஏற்பாடுகள் நிகழும் போது நாங்கள் ராஜாஜி அவர்களின் குடும்பம், நட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டோம். இது அன்பின் நட்பின் வேகத்தால் தான் சாத்தியமாகியது.

காதலுடன் வாழ்க கனிந்து

இராஜ. பவானி

தொல்பொருள் தோண்டியே பல்புகழ் ஆய்ந்திடும்
வல்லவன் இல்லாளாய் வாழ்ந்திடுவேன்—பல்லோர்
பவானியென்றே சொல்லிடுவர் பாவினுல் வாழ்த்த
அவாவினுல் வந்தேன் அறி.


வாழ்வாங்கு வாழ்பவரென் மாமனும் மாமியும்
தாழ்வான செய்கைகள் தாமறியார்—ஏழ்புவியும்
வாழ்த்தவே வாழ வயல்நாச்சி அம்மனை
வாழ்த்தினேன் யானே மலர்ந்து.

பெண்ணிநல் லாளென் பெருமைமிகு மாமியே
மண்ணிநல் லானுமென் மாமனே—கண்ணிமை போல
காத்திடுவர் தம் கடமை கண்ணியமாய் வாழ்ந்திடுவர்
ஆத்தங் குடிதனிலே யாம்.

அத்தை அடக்கமும் அம்மானின் ஆற்றலும்
மெத்தவே என்ருல் மிகையாமோ — நித்தலும்
ஈத விசையுடன் இன்பமும் சேர்ந்து நீர்
காதலுடன் வாழ்க கனிந்து.



விரிந்த ஆலமரத்தின் ஒரு தொகுதி



ராஜாஜியின் கடிதம்




கவிமணி குடும்பத்தில்



திரு. ராஜாஜி, நரசிம்மனுடன்




ஸ்ரீ லோகநாயகி வித்தியாசாலைத் துவக்க விழா.
பின்னால் துண்டு போர்த்திய ஜீவானந்தம்.




மலேசியா செல்பர்களுக்கு வந்தனோபசாரம்.




43 நாட்களில் 27 ஆயிரம் மலேசியத் தோட்டத் தொழிலாளர்க்கு உணவும், உடையும்.




கம்பன் வளாகத்தில் மலர்ந்த கோயில்



27.11.57

திலகவதி திருமணத்துக்கு ராஜாஜி எழுதிய ஆசிக்கடிதம்






ராஜாஜியின் கடிதங்கள்







கவிமணியின் கடிதங்கள்



நாமக்கல் கவிஞரின் கடிதங்கள்


நாமக்கல்




டி. கே. சியின் கடிதம்




தந்தையாரின் டைரி



டி. கே. சியின் கடிதம்



டி. கே. சியின் கடிதம்


டி. கே. சிதம்பரநாத முதலியார்
திருக்குற்றாலம்
தென்காசி

டி. கே. சியின் கடிதம்



திருமண அழைப்புப் பத்திரிகை.

அவர்களுக்கு.


திருமண அழைப்பு



சாந்திக் கல்யாணம்




தாயார், தமயனார், தங்கை, மூத்த மனைவி ஆகியோர்
அடங்கிய குடும்பம்.



மூத்த மனைவி உமையாள் ஆச்சி, தமையனார்
மகன் இலக்குமணனுடன்



இரண்டாவது மனைவி வள்ளியம்மை ஆச்சி,
குழந்தைகள் தமயனார் மகன் இலக்குமணனுடன்



அன்றையக் காரில் தந்தை, பெரிய தந்தை, அவர்கள் மகன்
இலக்குமணன்

8824
O31
உ. கோவிலூர்
KOVILOOR
MADALAYAM
ம லயம்





40 ஆண்டுகளாகச்
சட்டை அணியாதவரின்
முந்திய தோற்றம்.